

உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் இந்தியாவை ஆஸ்திரேலியா வீழ்த்தும்

பக்கம் 18


# உதயன்

சுடர்: 29 கதிர்: 328 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 3, திங்கள் 20.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

24 பக்கங்கள்

யாழ். - 20/=
வன்னி - 20/=


மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04


... பிரதேச சபை
20 OCT 2014


# இந்தியாவைத் திருப்திப்படுத்த 13 பற்றி பேசிக்கொண்டிராதீர்

## தமிழ் மக்களுக்கான தீர்வு பூரண சமஷ்டி ஆட்சியே என்பதை வலியுறுத்துங்கள். தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 20

"இந்தியாவைத் திருப்திப்படுத்துவதற்காக 13ஆவது திருத்தம் பற்றிப் பேசிக் காலத்தை வீணடித்துக்கொண்டிருக்காது, தமிழ் மக்களுக்கான தீர்வு பூரண சமஷ்டி ஆட்சியே என்பதைத் தெளிவாகக் கூறி, அதற்குரிய தீர்வுத் திட்டத்தைப் பகிரங்கப்படுத்த வேண்டும்." - இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்.

"கிழக்கில் எமது இனவிகிதாசாரம் குறைவடைந்து செல்கின்றது. முஸ்லிம்களின் இனவிகிதாசாரம் அதிகரித்துச் செல்கின்றது. அங்குள்ள முஸ்லிம்களில் எத்தனை பேர் எமது வடக்கு - கிழக்கு தாயகக் கோட்பாட்டுக்கு ஆதரவு தருவார்கள் என்பது கேள்விக்குறியே. எமது தாயகக் கோட்பாட்டை சிதைப்பதற்கு அரசு பலவழிகளிலும் முயற்சி செய்கின்றது. தாயகக் கோட்பாடு சிதைக்கப்பட்டால், எமது உரிமைப் போராட்டம் அழிக்கப்பட்டு விடும்."- என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட மாநாடு, நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுக் காலை, மாவட்டத் தலைவர் பொ.கனகசபாபதி தலைமையில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"1961 ஆம் ஆண்டு நாம் வடக்கு - கிழக்கை ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் மேற்கொண்ட சத்தியாக்கிரகப் போராட்டம் நடந்த சூழல் வேறு. இன்று உள்ள சூழல் வேறு. அன்று பொலிஸார் இருந்தனர். இன்று பொலிஸார், இராணுவத்தினர் அதற்கு மேலாக புலனாய்வாளர்கள்

22 ஆம் பக்கம் பார்க்க



"நாம் மாகாண சபை முறைமை பற்றி பேசிக் காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கக் கூடாது. மாகாண சபைக்கு காணி அதிகாரம் இல்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தம் வந்த அடுத்த வருடமே, ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் சகோதரர், உயர் நீதிமன்றத்தில் மாகாணங்களுக்கு காணி அதிகாரம் இல்லை என்று தெளிவாகத் தெரிவித்து விட்டார். மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளைக் கூட கொழும்பு அரசு கேள்வியின்றி கையேற்றுக் கொள்ளலாம்."

## டெங்கின் தாக்கம் யாழில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 20

கடந்த வாரத்தில் மட்டும் யாழ். மாவட்டத்தில் 35 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்த மாதத்தின் முதல் 11 நாள்களில் 29 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். நேற்றுமுன்தினம் வரையான 18 நாள்களில் 64 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்திலேயே டெங்கின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. கடந்த மாதம் 95 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில், இந்த மாதம் 20 நாள்களிலேயே 64 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 949 பேர் டெங்குத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

அதேவேளை, மன்னாரில் 112 பேருக்கும், வவுனியாவில் 108 பேருக்கும், முல்லைத்தீவில் 87 பேருக்கும், கிளிநொச்சியில் 46 பேருக்கும் டெங்குத் தொற்று ஏற்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். வடக்கு மாகாண ரீதியில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 302 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

## இராணுவத்தினரின் பிடியிலேயே வடக்கு அரசின் கட்டுப்பாடு அதை உணர்த்துகின்றது

### கவலை வெளியிடுகின்றது பிரிட்டன்



யாழ்ப்பாணம், ஒக். 20

வடக்கு மாகாணம் தொடர்ந்தும் இராணுவக் கட்டுப்பாடுகளுக்குள் இருக்கின்றது என்ற செய்தியையே, வடக்குக்கான வெளிநாட்டவரின் பயணக் கட்டுப்பாடு எடுத்தியம்புகின்றது என்று தெரிவித்துள்ள பிரிட்டன், இது தொடர்பில் தாம் கவலையடைந்துள்ள

22 ஆம் பக்கம் பார்க்க

## இலவசத்தை காசாக்கியோருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக் 20

மென்பானத்துடன் இலவசமாக வழங்குவதற்கென்று விநியோகிக்கப்பட்ட பழப்பானத்தை விற்பனை செய்த இருவருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது யாழ். நீதிமன்று.

22 ஆம் பக்கம் பார்க்க

## தமிழீழக் கோரிக்கையை கைவிட்டால் நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படும்

### அதுவும் 24 மணி நேரத்தில் என்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

யாழ்ப்பாணம், ஒக். 20

தமிழீழக் கோரிக்கையை கைவிட்டால் 24 மணி நேரத்திலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கத் தயாராக உள்ளதாகத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

"தமிழீழக் கோரிக்கையை, தமிழீழ

22 ஆம் பக்கம் பார்க்க



## புலிகள் மீதான தடை நீக்கம்: ஐரோப்பிய ஒன்றியம் ஆராய்வு

### தூதுவர் டேவிட் டேலி தெரிவிப்பு

நியூயோர்க், ஒக்.20

ஐரோப்பிய நீதிமன்றம் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டமை தொடர்பில் மிக உன்னிப்பாக ஆராய்ந்து வருகிறோம். சகலரினது கருத்துக்களையும் செவிமடுத்த பின்னரே பதிலளிப்போம் என இல்ங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்

22 ஆம் பக்கம் பார்க்க

## நயினாதீவு-கொழும்பு பஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஒக்.20

நயினாதீவு யாத்திரிகர்கள் மற்றும் தீவக மக்களின் போக்குவரத்து நலன் கருதி இலங்கைப் போக்குவரத்து சபை நயினாதீவு- கொழும்பு பஸ் சேவை இன்று முதல் ஆரம்பித்துள்ளது என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் போக்குவரத்து சேவையை இலகுபடுத்தும் நோக்குடன் புதிய 70 பஸ்கள் போக்குவரத்து அமைச்சால் வழங்கப்பட்டுள்ள நிலையிலேயே குறித்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவுக்கு தென்னிலங்கைப்பகுதியில் இருந்து அதிகளவான யாத்திரிகர்கள் வருகை தரும் நிலையில் இவர்களது போக்குவரத்தையும் அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் தீவக மக்களினது போக்குவரத்தை

22 ஆம் பக்கம் பார்க்க



ஆட்சி மாற்றம் மக்கள் விழித்தெழும் நேரம் வந்துவிட்டது

பக்கம் 12

## ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டால் அஹிம்சைப் போராட்டம் பற்றி மீளாய்வு

### தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 20

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டால், எதிர்வரும் ஜனவரி மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ள அஹிம்சைப்போராட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போராட்டக் குழு மீளாய்வு செய்யும் என்று தெரிவித்தார் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட மாநாடு, நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே

22 ஆம் பக்கம் பார்க்க

# புலித்தடை நீங்கியமைக்கு இலங்கை அரசே காரணம்

## கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.20
விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டமையானது, சர்வதேசத்தில் இலங்கைக்கு எதிரான பனிப் போர் முன்னோக்கி கொண்டு செல்லப்படுவதை காட்டுகிறது என்று தெரிவித்துள்ளார் கலாநிதி தயான் ஜயதிலக்க.
முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை, கொலை செய்தமையால் அவர் மீதிருந்த கௌரவம் மிக்க அன்பு, அவரது மனைவி அந்தந்த நாடுகளுக்கு சென்று பேசியமை மற்றும் அப்போதைய வெளிவிவகார செயலாளராக இருந்தவரின் திறமை ஆகிய காரணங்களினாலேயே அப்போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக தடை விதிக்கப்பட்டது.



"போர் ஆரம்பிக்கப்பட்ட போதும் இந்தத் தடை காணப்பட்டது. எனினும் போர் நிறைவடைந்து ஐந்து வருடங்களின் பின்னர் இந்தத் தடை நீக்கப்பட்டமைக்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக அரசு மற்றும் அரச சார்பற்ற ஆனால் அரசின் ஆதரவைப் பெற்றவர்கள் என நம்பப்படும் மதவாதக் குழுக்களின் நடவடிக்கைகள் மற்றும் அளுத்கம, ரதுபஸ்வல போன்ற சம்பவங்களால் இலங்கை பற்றிய பிரதிபலிப்புக்கள் சிதைக்கப்பட்டமையே காரணம்"- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## மாணவர்களிடையே மோதல் ஒருவர் சாவு; ஒருவர் காயம்

### இராகலையில் சம்பவம்

கொழும்பு, ஒக்.20
இராகலை கந்தபொல பகுதியிலுள்ள தமிழ் பாடசாலை ஒன்றில் இரண்டு மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் காயமடைந்தவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
குறித்த மாணவன் பலத்த காயங்களுடன் கண்டி பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் உயிரிழந்துள்ளார்.
கந்தபொல பகுதியை சேர்ந்த 16 வயது சிறுவன் ஒருவனே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது.
பாடசாலை இடைவேளை நேரத்தில் இரண்டு மாணவர்கள் ஒருவருக்கொருவர் மோதலில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.
இதனையடுத்து இரண்டு மாணவர்களையும் கொனிபிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் அதில் ஒருவர் மேலதிக சிகிச்சை களுக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். மோதலில் காயமடைந்த மற்றைய சிறுவன் சிகிச்சைகளின் பின்னர் வைத்திய சாலையிலிருந்து வெளியேறி யுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் இராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

## நினைவுப் பேருரை வைபவம்

அளவெட்டி, ஒக்.19
சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் அவர்களின் 20 ஆவது ஆண்டு நினைவுப் பேருரை வைபவம் இன்று திங்கட்கிழமை கல்லூரி முதல்வர் திரு இ. ஈஸ்வரநாதன் அவர்களின் தலைமையில் கல்லூரியின் கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் நடைபெறும். நினைவுப் பேருரையினை கொழும்பு பழைய மாணவர் சங்க உபதலைவர் திரு எஸ். பத்மநாதன் ஸ்கந்தவரோதயன். "என் வாழ்நாளிலே ஒறேற்றர்" என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். (ற-36)

## பௌத்த பிரிவெனாக் கல்விக்கு பிரத்தியேகமான நிதி ஒதுக்கீடு

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



நாட்டின் பௌத்த பிரிவெனாக்களில் கல்வி போதிக்கும் 5 ஆயிரம் போதகர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் சந்தித்தார். இதன் போது அவர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி, நாடு முழுவதும் பிரிவெனாக் கல்வியை வளர்ப் பதில் சிறி லங்கா சுதந்திரக் கட்சி பெரும் பங்காற்றியது என்றார். அத்துடன் பிரிவெனாக் கல் விக்காக வரவு-செலவுத் திட்டத்தில் பிரத்தியேகமாகநிதிஒதுக்கப்படும்என்றும் கூறினார். (ற)

## திருமலையில் 15,000 பேருக்கு அடையாள அட்டைகள் இல்லை

### இலங்கை மனித உரிமை ஆய்வு மத்திய நிலையம் தெரிவிப்பு

திருகோணமலை, ஒக்.20
திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த 15 ஆயிரத்து 157 பேர் தேசிய அடையாள அட்டைஇன்றிஉள்ளனர்என்று இலங்கை மனித உரிமை ஆய்வு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. மத்திய நிலையத்தின் தேசிய அமைப்பாளர் அஹமட் மனாஸ் அதனை தெரிவித்துள்ளார்.
திருகோணமலை மாவட்ட செயலாளர், ஆட்பதிவுதிணைக்கள ஆணையாளர் நாயகம் மற்றும் இலங்கை மனித உரிமை மத்திய நிலைய அதிகாரிகளுக்கிடையே அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.
இந்தநிலையில், தேசிய அடையாள அட்டைகளை பெற்றுகொடுக்கும் நோக்கில் எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் திருகோணமலை மாவட்டத்தில்நடமாடும்சேவைகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, உரிய ஆவணங்கள் இன்றியே இவர்கள் தேசிய அடையாள அட்டையை பெற்று கொள்ள முடியாதிருந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## விபத்து

கிளிநொச்சி

### வாகன விபத்தில் ஒருவர் சாவு



கிளிநொச்சி, ஏ - 9 வீதியில் பரந்தனின் 259ஆவது மைல் கல்லுக்கு அருகில் இடம் பெற்ற வாகன விப்த்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஒருவர் படுகாயமடைந்துள்ளார். தர்மபுரம் கட்டுக்காடு கல்மடுப்பாலம் எனும் இடத்தைச் சேர்ந்த சண்முகம் முகுந்தன் (வயது 22) என்பவரே உயிரிழந்துள்ளார். மேற்படி பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வவுனி யாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இருவரே விபத்துக்கு உள்ளாகினர். இந்த விபத்து தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

அவிசாவளை

### பஸ் குடைசாய்ந்து 23 பேர் காயம்

அவிசாவளை, எஹெலிய கொடயில் பஸ் ஒன்று ஓடைக்குள் குடைசாய்ந்த தில் 23 பேர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் நடந்துள்ளது. காயம டைந்தவர்கள் எஹெலியகொட மற்றும் கிரிபொருவ வைத்தியசாலைகளில் அனு மதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். குறுக்கு வீதி ஒன்றினூடாக பயணித்த பஸ், பாதுகாப்பற்ற பாலம் ஒன்றினூடாகபிரவேசிக்க முற்பட்ட வேளை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (ற)

மீசாலை

### நாயுடன் மோதி முறிந்தது கை



வீதியின் குறுக்கே திடீரென ஆட்டுக் குட்டி ஓடியதால் கட் டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிளோட்டி, ஆட்டுக்குட்டி யைத் துரத்தி வந்த நாயுடன் மோதி விபத்துக்குள்ளானார். அதில் அவரது கை முறிவடைந்தது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மீசாலை வடக்கில் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த சிவபாலன்பகீரதன்(வயது-24) என்பவர் கைமுறிந்த நிலையில் சாவகச்சேரி மருத்துமனையில் சேர்க்கப் பட்டுப் பின்னர், யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ற-9)

### மின்கம்பத்துடன் மோதியதில் காயம்

வீதியில் வேகமாக வந்த டிப் பருக்குவழிவிட்டு ஒதுங்க முற்பட்ட சைக்கிளில் பயணித்த ஒருவர், வீதியோரம் இருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். மீசாலை மேற்கைச் சேர்ந்த மார்க்கண்டு குகதாசன் (வயது -36) என்பவரே வலதுபக்க தோள்பட்டை எலும்பு பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-9)


## அமைச்சுக்களின் செயலாளர்கள் தேர்தல் பணிகளுக்கு நியமிப்பு

கொழும்பு, ஒக்.20
மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்யும் பொறுப்புகளை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு வழங்கியுள்ளார்.
பெரும்பாலான அமைச்சுக்களின் செயலாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான பரப்புரை நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதன் காரணமாகவே இந்த பொறுப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், அரச ஊழியர்களை குழுக்களாக அலரி மாளிகைக்கு அழைத்து கூட்டங்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அரசின் பெண்கள் பணியகத்தின் அதிகாரிகள் இன்று அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும், அரச அதிகாரிகளை தேர்தலை நோக்கமாக கொண்டு அழைத்து கூட்டங்களை நடத்துவது தேர்தல் சட்டத்தை மீறும் செயல் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற)

# நீதியரசர் சரத் என் சில்வா நீதித்துறைக்கே களங்கம்

## இப்படிக் கூறுகின்றார் ஞானசார தேரர்

கொழும்பு, ஒக்.20
முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நீதித்துறையின் மாண்புக்கே ஒரு களங்கம் என்று பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் கடுமையாகச் சாடியுள்ளார்.
கொழும்பில் பொதுபல சேனாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
"சரத் என் சில்வா தனது பதவிக்காலத்தில் பல தவறான தீர்ப்புகளை வழங்கியுள்ளார். நீதித்துறையின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தி உள்ளார். அவரது காலத்தில் தான் நீதித்துறை பொதுமக்களிடம் நம்பிக்கையை இழக்குமளவுக்கு தரம் தாழ்ந்திருந்தது"- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,
"இந்த நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி மூலம் மட்டுமே தீர்வு காணமுடியும். அந்த வகையில் இன்னும் சிறிது காலத்திற்கு அந்தப் பதவி நிலைத்திருக்க வேண்டும்.



அதிலும் ஜனாதிபதிப் பதவிக்குப் பொருத்தமானவர் மஹிந்த ராஜபக்ஷ மட்டுமே"- என்று தெரிவித்தார். (ற)

பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

கிளாசிக்

விலை ரூபா 20/-

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 3 திங்கள் (20.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 328

# மூன்றாவது தடவையாகவும் தேர்தலில் போட்டியிட மஹிந்தவுக்கு தகுதியில்லை

## சட்டநிபுணர்களின் விளக்கத்தை தேர்தல் ஆணையரிடம் சமர்ப்பிப்பதற்கு சட்டத்தரணிகள் சங்கம் நடவடிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 20

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா அல்லது இல்லையா என்பது குறித்து சட்டரீதியாக சர்ச்சை மூண்டுள்ள நிலையில், அவருக்கு மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு சட்டரீதியான தகுதி இல்லை என்று பிரபல சட்ட நிபுணர்கள் முன்வைத்துள்ள கருத்தினை தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஜனாதி பதித் தேர்தலில் போட்டியிட முடியுமா என்பது குறித்து ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விசேட நிபுணர்கள் குழாமொன்றையும் அமைத்திருந்தது. இக்குழு ஜனாதிபதித் தேர்தல் குறித்த தமது நிலைப்பாட்டை நேற்றுமுன்தினம் மாலை வெளியிட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டே சட்டத்தரணிகள் சங்கம் மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் 2015 ஜனவரி முற்பகுதியிலோ அல்லது இவ்வருட இறுதிக்குள்ளோ நடத் தப்படக்கூடும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. எனினும், ஜனவரியில் தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் பங்காளிக் கட்சிகளிடம் கருத்து வெளியிட்டுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இந்நிலையில், அரசமைப்பின் பிரகாரம், மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாக போட்டியிட முடியாது என்கின்ற சர்ச்சையை நாட்டின் சட்ட வல்லுநர்கள் கிளப்பு விட்டுள்ளனர். எனினும், அரசமைப்புக்கு மஹிந்த அரசு கொண்டுவந்த 18 ஆம் திருத்தத்தின் மூலம் அந்தத் தடை நீக்கப்பட்டுவிட்டது என்று அரச தரப்பினர் வாதிட்டுவருகின்றனர்.

குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ இரண்டாம் தடவை பதவிப் பிரமாணம்செய்துகொண்ட சந்தர்ப்பத்திலேயே மூன்றாம் தடவையும் போட்டியிடுவதற்கான தகுதியை இழந்துவிட்டார் என்று அவருக்கு முதல் தடவை பதவிப்பிரமாணம் செய்துவைத்த முன்னாள் பிரதம

(22 ஆம் பக்கம் பார்க்க)

## முதலாவது ஆண்டைப்போல் இருக்காது 2ஆவது ஆண்டு

### கடந்தகாலப் பிழைகளை முறியடிப்போம் வடமாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 20

கடந்த காலங்களில் நடந்த பல பிழையான செயல்களை முறியடிக்கக் கங்கணம் கட்டியுள்ளோம். எமது பயணம் வெற்றிப் பயணம். தொடங்கியிருக்கும் இரண்டாவது ஆண்டு முன்னைய ஆண்டைப் போல் தகுதி ஆய்வுக் காலமாக இருக்காது. தகுந்த ஆக்கங்களை ஆற்றுப் படுத்துங் காலமாக அமையும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் குஞ்சுக்குளத்தில், தொங்கு பாலத்தில் சுற்றுலா விடுதி அமைப்பதற்காக அடிக்கல் நடும் நிகழ்வு இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது,

**மாகாணசபையில் இழுபறி**

வடக்கு மாகாண சபை கடந்து வந்த, முதல் வருடமானது ஒரு தகுதி ஆய்வுக் காலமாகவே அமைந்திருந்தது. எம்முள் பலர் நிர்வாக அலகில் மிகக் குறைந்த பரீட்சயம் பெற்றவர்களாகவே மாகாண சபையினுள் உள்நுழைந்தோம். நீதிமன்ற நிர்வாகத்தில் எனக்கு அனுபவம் இருந்தது. ஆனால் அங்கெல்லாம் அதிகம் இழுபறிகள் கிடையாது. அரசியல் அங்கு உள்நுழைய விடமாட்டோம் - விடவில்லை. ஆனால்

(19ஆம் பக்கம் பார்க்க)

## வானிலுள்ள நட்சத்திரத்தை பார்க்கமுன் தரையிலுள்ள ஓட்டையைப் பாருங்கள்

### அரசமைப்பில் மாற்றம் அவசியம் என்கிறது ஹெல உறுமய

கொழும்பு. ஒக்.20

வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் பார்ப்பதற்கு முன்னர் நிலத்திலுள்ள ஒட்டைகளைப் பார்க்குமாறு அரசையும் ஜனாதிபதியையும் வலியுறுத்தியுள்ள ஜாதிக ஹெல உறுமய, அடுத்த ஜனா திபதித் தேர்தலுக்கு முன்னர் அரசமைப்பில அரசு மாற்றங்களைக் கொண்டுவந்தாக வேண்டும் எனவும் இடித்துரைத்துள்ளது.

மஹரகமயில் நேற்று நடைபெற்ற அக்கட்சியின் தேசிய வருடாந்த மாநாட் டின் போதே கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான அதுரலியே ரத்ன தேரர் இவ்வாறு தெரி வித்தார்.

இங்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

நீதித்துறை சுதந்திரம் உட்பட முக்கிய விடயங்கள் பல தேர்தலொன்றுக்கு முன்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக்கு பயணக் கட்டுப்பாடு நீதிமன்றை கூட்டமைப்பு நாடும்

கொழும்பு, ஒக்.20

வடக்கு மாகாணத்துக்கு வெளி நாட்டவர்கள் வருவதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்கக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதி மன்றம் செல்லப்போகின்றது என்று கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இந்தப் பயணக் கட்டுப்பாடு தொடர்பில் உயர் நீதிமன்றம் செல்வது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை செய்துவருகின் றது எனவும் அவர் மேலும் கூறினார்.

(ற-சி)

## இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். கிளையின் மாநாடு நேற்று



வலி. வடக்கு. ஒக்.20

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டக் கிளையின் மாநாடு நேற்று யாழ்.மாவட்டக்கிளையின் தலைவா பெ.கனகசபாபதி தலைமையில் நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானமாவை சேனாதிராசா மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் எஸ்.துரைரெட்ண சிங்கம் ஆகியோர் இணைந்து கட்சியின் கொடியை ஏற்றி வைத்ததுடன் கட்சியின் பாடலும் பாடப்பட்டது.

அதைத் தொடர்ந்து மாவை. சேனாதிராசா, துரைரெட்ணசிங்கம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினாகளான ஈ.சரவணபவன், ஸ்ரீதரன் மற்றும் கட்சியின் மூத்த உறுப்பினர்களான உப தலைவர் பேராசிரியர் சிற்றம்பலம், மகளிர் அணி செயலாளா திருமதி செல்வ நாயகம்

(19 ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற வீடியோ ஆதாரங்களை ஐ.நா. குழுவினரிடம் ஒப்படைப்பேன்

### புதிய தகவல்களை திரட்டுவதாகவும் கெலும் மெக்ரே தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.20

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து ஐ.நா விசாரணையாளர்களிடம் தன்னிடமுள்ள காணொலி ஆதாரங்களை விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ள சனல் 4 வின் ஊடகவியலாளர் கெலும் மெக்ரே, புதிய தகவல்களை தாம் சேர்த்து வருவதாக குறிப்பிட் டுள்ளார்.

"என்னிடமுள்ள, ஆதாரங்களை ஐ.நா சர்வதேச விசாரணைக் குழுவிடம் வழங்குவதற்கு நான் தயாராகவுள்ளேன். இது குறித்து நான் மகிழ்ச்சி கொண்டுள்ளேன், விரைவில் நான் அதனை செய்யவுள்ளேன். இது நேர்மையான சர்வதேச விசாரணை. எதிர் காலத்தில் இந்த விசாரணை நீதிநடவடிக்கைகளுக்கு வழிவகுக்க கூடும்," என்று

(19 ஆம் பக்கம் பார்க்க)

## மொனராகலை சிறையில் தமிழ்க் கைதி போரட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 20

விடுதலையை வலியுறுத்தி தமிழ் அரசியல் கைதி ஒருவர் மொனராகலைச் சிறையில் 10 நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார். அதனால் அவரது உடல்நிலை மோசமடைந்துள்ள நிலையில், தற்போது சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அவர் மாற்றப் பட்டுள்ளார் என்று தெரியவருகின்றது.

மட்டக்களப்பு வெல்லாவெளியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கேதீஸ்வரன் (வயது 26) என்ற தமிழ் அரசியல் கைதியே இவ்வாறு உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் திருக்கோவில் பகுதியில் வைத்து அவர் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். அவர் மீது 2 வழக்குகள் தாக்கல் செய்

(19 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்ற உத்தரவை மீறியவருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஒக். 20

நீதிமன்ற உத்தரவை மீறிச் செயற்பட்ட வர்த்தக நிறுவன நிர்வாக இயக்குநர் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

ஷம்போ நிறுவனம் ஒன்று தனது தயாரிப்புகளில் இரண்டு காலாவதித் திகதிகளைக் குறித்து கடைகளுக்கு விற்பனை செய்து வந்துள்ளது. அவை பொது மக்களுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அவற்றை, யாழ்.செயலக விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் கைப்பற்றியிருந்தனர். அதனையடுத்து கடந்த ஏப்ரலில் அவருக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்குத் தொடரப் பட்டது. வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்டு 15 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்திச் சென்றார். தவிர அவற்றை இரண்டு மாத காலப்பகுதியில்

(19ஆம் பக்கம் பார்க்க)

## குறு நாடக போட்டிக்கு விண்ணப்பிக்குக

கொழும்புத்துறை, ஒக்.20

கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ இளைஞர், யுவதி களின் ஆற்றலையும் கிறிஸ்தவ இலக்கிய வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சின் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தால் குறு நாடகப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

தேசிய கிறிஸ்தவ சாகித்திய விழா, 20/10/2015 ற்கு சமனாக இந்தக் குறுநாடகப் போட்டி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நாடக செயலமர்வுகளுக்காக கிறிஸ்தவ இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. (வ-135)

## சித்திரப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.20

ஆத்திசூடி வீதி, கந்தர் மடத்தில் இயங்கும் சித்திரப் பயிற்சி நிறுவனத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறுவர்களுக்கான சித்திரப் போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டிக்கான ஆக்கங்களை ஏ-4 வரைதாளில் வரைந்து எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அந்த நிறுவனம் கேட்டுள்ளது.

பிரிவு 1- (தரம்2-5)- காவடியாட்டம்,பிரிவு 2- (தரம்6-7)- தாலாட்டும் அம்மா ஆகிய விடயங்களின் அடிப்படையில் சித்திரங்களை அனுப்பலாம். (வ-ரி)

## 'பிரதீபா பிரபா' விருது பெற்று ஹற்றிக் சாதனை

தொடர்ச்சியாக மூன்று தடவைகள் சிறந்த அதிபருக்கான 'பிரதீபா பிரபா' விருது பெற்று ஹற்றிக் சாதனை புரிந்துள்ளார் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை.

2000 இற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற தெரிவில் கடந்த மூன்று வருடங்கள் (2012, 2013, 2014) தொடர்ச்சியாக இவர் விருதுகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வகை II பாடசாலைகளில் தென்மராட்சி கல்விவலயத்தைச் சேர்ந்த மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் வகை II பாடசாலை களில் சிறந்த அதிபருக்கான 'பிரதீபா பிரபா' விருது பெற்றுள்ளார். (வ-9)

## கச்சாய் அ.த.க.வுக்கு அதிபர் நியமனம்

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கச்சாய் அ.த.க.பாடசாலையில் வெற்றிடமாக காணப்பட்ட அதிபர் பதவிக்கு கொடிகாமம் அ.த.க.பாடசாலையின் அதிபர் கா.குணசிங்கம் மாகாண கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். (ஓ-9)

## மரண அறிவித்தல்

### திருமதி செந்தமிழ்செல்வி கதிர்காமநாதன்

(சரவணை கிழக்கு, வேலணை)



**சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் இல.02, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செந்தமிழ்செல்வி கதிர்காமநாதன் 18.10.2014 அன்று காலமானார்.**

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், பொன்னம்மாவின் பெறா மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-நீலாட்சியம்மா தம்பதியரின் மருமகளும், கதிர்காமநாதனின் அன்பு மனைவியும், சிவகுமாரி (இந்தியா), முருகானந்தன் (சுவிஸ்), சிவானந்தன் (ஜேர்மனி), சந்திரகுமாரி (கனடா), வித்தியானந்தன் (கனடா), நித்தியானந்தன் (கனடா), வசந்தகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமிர்தகௌரி, சச்சிதானந்தம், ஆனந்தகௌரி, சண்முகானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுகந்தி, விமலன் (சுவிஸ்), செந்தூரன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானலிங்கம், ஸ்ரீப்பிரியா, தினேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், கிஷாயினி, விதுஷிகா, நிதுஷன், அகஸ்ரியன், ஆதிசன், ஹிருசிகன், அனுர்த்தன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2014) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயமணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 2, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 691 7782

தகவல்:
சு.கதிர்காமநாதன்
(கணவர்)

(ரி/17066) (7.6.3)

## மரண அறிவித்தல்

### சுப்பையா திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற சாரதி, இ.போ.ச. - காரைநகர்)



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் சங்கானை முருகமூர்த்தி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா திருநாவுக்கரசு நேற்று (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திரவியத்தின் அன்புக் கணவரும், கலாமதி, சுமதி (சுவிஸ்), சாந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சண்முகநாதமுதலி (ஓய்வுநிலை முகாமையாளர்- மக்கள் வங்கி) சிவலிங்கம் (சுவிஸ்), சற்குணராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும், பரணீதரன், காயத்திரி (லண்டன்), சாருஸ்யன், சிறீஜா, சாதுரியன் (சுவிஸ்), திசாந், ஆஷாந் (கனடா) ஆகியோரின் ஆசைப் பேரனும், பத்மநிருபன் (தாதிய உத்தியோகத்தர் -யாழ்.போதனா வைத்தியசாலை), பத்மநாபா (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு ஐயாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2014) திங்கட்கிழமை ந.ப. 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

(ரி/17071) (7.6.3)

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை பரமசாமி

(முன்னாள் C.T.B சாரதி, காரைநகர் டிப்போ)

ஆஸ்பத்திரிவீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமசாமி 17.10.2014 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவராசா- செல்லம்மா தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக்கணவரும், மகேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் இராசதுரை ஆகியோரின் சகோதரனும், பகீரதன் (உக்கிரைன்), சசிகலா(சங்கானை), பிறேமகலா(U.K), புஸ்பகலா(U.K), டுமிகலா(U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லுத்மிலா (உக்ரைன்), சிவபாலன்(அஞ்சல் அலுவலகம், தெல்லிப்பழை), சண்முகதாசன் (U.K), பாலசுப்பிரமணியம்(U.K), கெமன்சன்(U.K) ஆகியோரின் மாமனாரும், அலெக்ஸ்(உக்ரைன்), துவாரகன், கோவர்த்தன், கிலக்ஷன், கினோஜன் (சங்கானை), நிவிதா, நிவேதன், நிதேஸ், சங்கீத், றித்திகா, தீப்திகா, திபிஸ்(U.K) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2014) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

தகவல்:
சிவபாலன் (மருமகன்),
பகீரதன் (மகன்)
021 225 0538

(ரி/17068) (4.6.3)

## 'வீட்டுத் தோட்டத்தில் இருந்து நாளாந்த பாவனைக்கு மரக்கறி'

### பண்டத்தரிப்பு இந்துவில் இன்று நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஒக்.20

எங்கள் வீட்டுத் தோட்டத்திலிருந்து எங்கள் மரக்கறிகள்" என்ற தொனிப்பொருளில் வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஆறாவது கட்டம் இன்று பண்டத் தரிப்பு இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

நச்சுக்கலப்பற்ற புதிய மரக்கறிகளை உருவாக்குதல், மரக்கறிக்காகச் செலவாகும் பணத்தை குறைந்தளவு ஆக்கிக் கொள்ளுதல், சிறந்த விளைச்சல் மிகுந்த பழங்களை உற்பத்தி செய்தல், வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துதல் ஆகிய குறிக்கோள்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் இந்த நிகழ்ச்சியின் யாழ். மாவட்டத்துக்கான ஆரம்ப விழா சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் இன்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலக பிரிவுகளிலும் 435 கிராம சேவையாளர் பிரிவுகளுமாக முன்னெடுக்கப்படும் இந்த நிகழ்வில். வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கு ஏதுவாக ஒரு வீட்டுக்கு நான்கு மரக்கறி வகையைச் சேர்ந்த ஒன்பது கன்றுகளும், பழமரக்கன்றுகளும், தென்னங்கன்றும், அகத்திக் கன்றுகளும் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 78 ஆயிரத்து 300 குடும்பங்களுக்கு 32 ஆயிரத்து 625 அகத்திக் கன்றுகளும் ஒரு லட்சத்து 97 ஆயிரத்து 506 பழமரக் கன்றுகளும் 43 ஆயிரத்து 500 விதைத் தொகுதிகளும் 405 பழ முந்திரிகைகளும் ஒரு லட்சம் தென்னங்கன்றுகளும் 3,176 கோழிக்குஞ்சுகளும் வழங்கப்படவுள்ளதுடன். 1,013 பாடசாலைகளுக்கான பழமரக் கன்றுகளும் 1,404 அரச கட்டடங்களுக்கான பழமரக் கன்றுகளும் வழங்கப்படவுள்ளன.

(வ-ரி)

## முன்பள்ளிக் கல்வியிலும் ஆர்வம் காட்டுவது அவசியம்

### யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை

யாழ்ப்பாணம், ஒக்.20

குழந்தையின் முன்பள்ளிக் கல்வியில் பெற்றோர் தட்டிக்கழிக்கும் மனப்பாங்கு கொண்டவர்களாக இருக்கின்றனர். எமது அரசும் முன்பள்ளிச் சிறார்களின் கல்வியில் பெரியளவில் அக்கறையுடன் செயற்படுவதில்லை. வெளிநாடுகளில் இந்தநிலை முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. மேற்குலக நாடுகளில் முன்பள்ளிக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை.

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் ஆறுதல் நிறுவனத்தின் இயக்குநர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2013, 2014 ஆம் ஆண்டுகளில் முன்பள்ளி டிப்ளோமா பயிற்சியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

"3-5 வரையான குழந்தைகள் ஒவ்வொரு வருடமும் முன்பள்ளிக்காக வருகின்றனர். இவ்வாறு பாலர் பாடசாலைக்கு ஒவ்வொரு வருடமும் புதிது புதிதாக வரும் இம் மாணவரின் தொகை அண்ணளவாக பத்து லட்சம். எனவே, இது பத்து லட்சம் குழந்தைகளின் வாழ்க்கை. இதை கருத்தில் கொண்டு ஒவ்வொரு பெற்றோரும் ஆசிரியரும், அதிபர்களும், அரசியல்வாதிகளும், மாணவர்களும் செயற்பட வேண்டும் என்று கூறினார். (வ-ரி)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 20

ஊரெழு கணேச வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக களனி பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் பாலச்சந்திரன் குமரேந்திரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராசாவும், த.றோகான் ராஜும் கலந்து கொள்வர்.

(வ-ரி)

## மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2ஆம் பருவகால மீள் பரீட் சைக்கான விண்ணப்பங்களை இன்று தொடக்கம் எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதிவரை அனுப்புமாறு தொழில் நுட்பவியல் நிறுவனம் தெரிவித்துள்ளது. (வ-ரி)

## வாழ்வெழுச்சித் திட்ட 6 ஆம் கட்ட நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.20

நல்லூர் பிரதேச செயலகத்தின் வாழ்வெழுச்சித் திட்டத்தின் ஆறாம் கட்ட நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் இடம்பெறும். இந்த நிகழ்வில் மரம் நடுகை உட்பட வாழ்வெழுச்சித் திட்டத்தின் செயற்பாடுகள் குறித்தும் கருத்துரை இடம்பெறும். பயனாளிகளை இதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-7)

## அன்பு வாரம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.20

வட பிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்பகம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை அன்பு வாரத்தை அனுஷ்டிக்கத் தீர்மானித்துள்ளது.

அன்பு வாரத்தில் பாடசாலை மாணவர்கள் பிரார்த்தனை முடிவுற்றதும் அதிபர்கள் அன்பு பற்றிய உரைகளை நிகழ்த்தி மாணவர்களுக்கு அறிவுரைகள் வழங்குமாறும் அது குறித்த கட்டுரை, கவிதை, சித்திரப் போட்டிகளை நடத்தி பரிசில்களை வழங்கவும் வலயக் கல்விப் பணிப்பாளர்களைக் கடித மூலம் கேட்டுள்ளது. (வ-7)

## வாசிப்பு மாத நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 20

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகத்தால் முன்பள்ளி மாணவர்களுக்கு இடையே விநோத உடைப்போட்டி, தேவாரம், பாட்டு, பேச்சு, கதை சொல்லல் ஆகிய போட் டிகள் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பொது நூலக மண்டபத்தில் நடத்தப்படும். (வ-ரி)

## மருமகள் சிறுமியை துஷ்பிரயோகம் செய்த மாமனுக்கு மறியல்

பருத்தித்துறை, ஒக்.20

வடமராட்சி பகுதியில் 10 வயதுச் சிறுமியை ஒரு வருடமாக துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிறுமியின் மாமனாரான சந்தேக நபரை 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். சிறுவர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சிறுமி தனது ஆசிரியைக்கு இது தொடர்பில் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் அந்தப் பகுதிக்குப் பொறுப்பான சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தருக்கு தகவல் தெரிவித்திருந்தார். அதனை அடுத்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. உடனடியாக குறித்த சந்தேகநபர் கடந்த வியாழக்கிழமை இரவு பருத்தித்துறை பொலிஸாரால் அவரின் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளை அடுத்து அன்று பிற்பகல் குறித்த சந்தேக நபர் யாழ். சிறுவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் சந்தேக நபரை 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

(ஓ-109)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
ஆசிரியை
திருமதி ராஜினிதேவி சிவலிங்கம்
அவர்கள் ஜனாதிபதி விருதான பிரதீபா பிரபா விருதினைப் பெற்று கல்லூரிக்கும் உடுவில் மண்ணுக்கும் பெருமை தேடித் தந்ததையிட்டு மனதார வாழ்த்துகின்றோம். இவர் மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.



வாழ்த்துவோர்: இ.ஜெயகாந்தன் கோமளா குடும்பத்தினர்.
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

CHUNDIKULI GIRLS' COLLEGE JAFFNA
Nursery Teacher (English Medium)

Applications are invited from suitable candidates for the above post.

Requirements :
* Good command of English
* Age between 25-40 years
* AMI or Pre-school Diploma would be an added advantage.

Please forward your resume with the names of two non-related referees within 1 week of this advertisement to the address below.

The Principal,
Chundikuli Girls' College,
4, Colombogam Road,
Jaffna.

Only shortlisted candidates will be called for an interview

(C/17057)(7.6.3)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



சோ. சிவசுந்தரம்
B.Com (Cey) H.N.Dip.in Acc., H.N.D.I.T.
அபிவிருத்தி உத்தியோகத்தர் - சமூக சேவைகள் திணைக்களம் வட மகாகாணம்
பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 17.10.2014 நடைபெற்ற இலங்கை உயர் தொழிநுட்பக் கல்லூரி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் Higher National Diploma in Information Technology (HNDIT) பட்டம் பெற்ற சோ.சிவசுந்தரம் அவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: வி. தயாபரன், சோ. யூசோதரன்

(53372)(45.6)

சேவை நலன் பாராட்டு

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியில் ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவராகச் சேவையாற்றி ஓய்வுபெறும்
திருமதி றோகினி குலசிங்கம்
(S.L.T.S. - I)



சேவை விவரம்
01.10.1992 - 17.01.1999
யா/சங்கானை சிவப்பிரகாச மாக வித்தியாலயம்.
18.01.1999 - 31.12.2005
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தி.
01.01.2006 - 12.08.2014
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

ஆரம்பப் பிரிவுக்கு பகுதித் தலைவராக இருந்து ஆசிரியர்களையும், மாணவர்களையும் நல்வழிப்படுத்தியும், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பாடசாலைக்குப் பெயரையும் புகழையும் தேடித்தந்த ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(53321)(45.6.3)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulation
கல்வியமைச்சினால் 06.10.2014 அன்று நடைபெற்ற நல்லாசிரியர்களுக்கான "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்ற எமது பாடசாலை ஆசிரியை
திருமதி
கலாறஞ்சினி
கோரேஸ்டிலான்
அவர்களைப் பாராட்டுவதுடன் இவர் மேலும் பல விருதுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
பாடசாலைச் சமூகம்
மு/முள்ளியவளை தமிழ் வித்தியாலயம்
முள்ளியவளை. (52172)(7.6.3)

## வடலியடைப்பு சனசமூக நிலையமாக பெயர் மாற்றம்

வலி.தென்மேற்கு. ஒக்.20

வலி.தென்மேற்கில் வடலியடைப்புக் கிராமத்தில் சுமார் 60 வருடங்களுக்கு மேலாக சங்கானை மேற்கு சனசமூக நிலையம் என்ற பெயரில் இயங்கி வரும் சனசமூக நிலையம் மக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து வடலியடைப்பு சனசமூக நிலையம் என்று பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசம் சுமார் 40 வருடங்களுக்கு முன் வலிகாமம் மேற்கு பிரதேச நிர்வாக கட்டமைப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. 1949 ஆம் ஆண்டு வடலியடைப்பு கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட சனசமூக நிலையம் சங்கானை மேற்கு சனசமூக நிலையம் என்ற பெயரில் இயங்கி வருகிறது.

இந்த நிலையில் நிர்வாகத்தை பரவலாக்கும் நோக்குடனும் மக்களின் நலன் கருதியும் இந்தப் பரந்த பிரதேசம் 1972 ஆம் ஆண்டு இரண்டாகப் பிரிக்கப்பட்டு வலிகாமம் மேற்கு, வலி.தென்மேற்கு என்ற நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் வடலியடைப்பு கிராமத்தில் ஜே/145 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சங்கானை மேற்கு என்ற பெயரில் சனசமூக நிலையம் இயங்கி வருவதை விரும்பாத இந்தப் பகுதி மக்கள் மேற்படி நிலையத்துக்கு வடலியடைப்பு சனசமூக நிலையம் என்று பெயர்மாற்றுமாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபையைக் கோரியிருந்தனர்.

உபதவிசாளர் எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக்கூட்டத்தில்இவர்களின்கோரிக்கை ஆராயப்பட்டு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதையடுத்து பெயர் மாற்றம் செய்வதற்கான பிரேரணையை உறுப்பினர் குமணன் முன்மொழிய உறுப்பினர் செல்வராஜா வழி மொழிந்தார். இதையடுத்து பெயர் மாற்றத்துக்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ஓ-115)

## நூலகத்தின் நேரம் அதிகரிப்பு

சாவகச்சேரி நுணாவில் பொது நூலகத்தின் இரவல் கொடுக்கும் பகுதியில் அலுவலக நேரம் ஒருமணித்தியாலத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நூலகத்தால் இதுவரை மாலை 4.30 மணிவரை இயங்கி வந்த நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி மாலை 5.30 மணி வரை இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-9)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.20

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உடுவில் பிரதேசம் நடத்தும் கேதார கௌரி விரதகால சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ம்ல்வம் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்திலும்-

குப்பிளான் வீரமனை கன்னிமா கௌரி அம்பாள் ஆலயத்தில் பி.ப.2 மணிக்கும் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளில் இந்து தர்மாசிரியர் நி.தசீதரன் கௌரிவிரத மகிமை அர்த்தநாரீஸ்வரவடிவம் உணர்த்தும் வாழ்வியல்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுவார். (வ-7)

## வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

வடமராட்சி, ஒக்.20

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய் தடுப்பூசி ஏற்றம் பணி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

அல்வாய் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணி இன்று திங்கள் முதல் ஆரம்பமாகின்றது.

ஏற்கனவே நெல்லியடி துன்னாலை ஆகிய பகுதிகளில் இந்தப் பணி நிறைவடைந்துள்ளதாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சுதோகுமார் தெரிவித்தார். அல்வாய் பகுதியில் தடுப்பூசி ஏற்றும் பணி நிறைவடைந்ததும் ஏனைய கிராமங்களில் இந்தப் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-173)

## நெஞ்சக் கதவை கொஞ்சம்........

### இருப்பும் அடையாளமும்

கோவில் பெருந்திருவிழா ஒன்றில் எடுப்புத்தொடுப்பாக அமைக்கப்பட்டிருக்கும் ஐஸ்கிறீம் கடைகளில் இருப்பதற்கு இடம்தேடி அலமலக்கிறது சனத்திரள். அந்தக் காலத்து திருவிழாக்களின் சிகரங்களை நினைவுபடுத்துவனவாக அமைந்திருக்கின்றன ஐஸ்கிறீம் கடைகள் - ஐஸ்கிறீம்களின் உலகம். சின்னஞ்சிறிசுகள் மட்டுமல்ல. இளசுகளும் கோயிலுக்கு வந்தால் ஐஸ்கிறீமில் வாய் வைக்காவிடில் அவர்களுக்குப் பத்தியப்படாது. குழந்தை, குட்டிகளுடன் வருபவர்கள் மடியில் பெருந்தொகையைக் கட்டிக் கொண்டு தான் வரவேண்டும். வாங்கும் ஐஸ்கிறீமைப் போன்று இருக்கும் காசும் கரைந்துவிடும்.

யாழ்.மாவட்டத்திலுள்ள 10 ஐஸ்கிறீம் நிறுவனங்கள் ஐஸ்கிறீம் தயாரிப்புக்குப் பயன்படுத்தும் தண்ணீரில் நெருப்புக் காய்ச்சலுக்குப் பிரதான காரணி எனப்படும் கோலிபோம் பக்ரீரியாக்கள் நிறைந்திருந்தன என்றும், ஒரு நிறுவனத்தில் மட்டும் ஒரு லீற்றரில் 1000 இற்கு மேற்பட்டு இவை காணப்பட்டதாகவும் தகவல்கள். நாடளாவிய ரீதியில் யாழ். மாவட்டமே நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை உச்சாணிக்குச் சென்று விட்டமை எம்மவர்களின் ஐஸ்கிறீம் மோகத்தின் வெளிப்பாட்டையே எதிரொலிக்கின்றன. எங்களது பலவீனத்தை பலமாக்குபவையாக - பணமாக்குபவையாகவே ஐஸ்கிறீம் என்று நஞ்சை உற்பத்தி செய்கின்றன சில நிறுவனங்கள்.

கோவில், கடை, விழா, கூட்டம், விளையாட்டு, கொண்டாட்டங்கள் என்று ஐஸ்கிறீம் கடைகள் ஆகலக்கால் வைத்து நிற்கின்றன. இருக்கட்டும், தண்ணீரை எவ்வாறு சுத்தமாக்கி ஐஸ்கிறீம் உற்பத்திக்கு பயன்படுத்துவது என சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை உதாசீனப்படுத்தாதிருந்தால் போதும். இதற்குப் பின்னரும் விறைத்த மண்டைகளாக சம்பந்தப்பட்டவர்கள் தமது போக்கை மாற்றிக் கொள்ளாவிடின், ஏற்கனவே இங்கு நுழைவதற்கு வாய்ப்பை எதிர்பார்க்கும் வல்லமை மிகுந்த வெளியூர் ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனங்களிடம் தமது இருப்பை இழந்து, அடையாளத்தையும் தொலைக்க வேண்டி வரலாம்.

செல்வவேலாயுதம்

## புங்குடுதீவில் வயல் வேலைகளில் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஒக்.20

தற்போது பெய்து வரும் மழையை அடுத்து புங்குடுதீவுப் பகுதியில் உள்ள விவசாயிகள், விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளனர் அங்குள்ள அனேக வயல் நிலங்களில் நீண்ட காலத்தின் பின்னர் வரம்பு கட்டும் வேலைகள் இடம்பெறுகின்றன. இந்த முறை கூடுதலான வயல்களில் நெல் உற்பத்தி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் கொண்டுள்ளனர். (ஓ-7)

## தென்னிலங்கை அங்காடி வியாபாரிகள் படையெடுப்பு

தென்மராட்சி, ஒக்.20

தீபாவளி வியாபாரத்துக்காக தென்னிலங்கையிலிருந்து பெருமளவு அங்காடி வியாபாரிகள் சாவகச்சேரி சந்தைக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த வருடம் போன்று அங்காடி வியாபாரிகளை பொதுச் சந்தைக்கு வெளியே வியாபாரத்தில் ஈடுபடுத்த நகர சபையினர் அனுமதித்துள்ளனர்.

மழைகாலம் என்பதால் வாகனங்களில் உடுப்புகள் உட்பட பொருள்களுடன் வியாபாரிகள் தகரக் கொட்டகை அமைப்பதற்கான ஆயத்தங்களுடன் வருகை தந்து கொட்டகைகளை அமைத்து வருகின்றனர். (ஓ-9)




**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்**

**கேள்வி கோரல்**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலுக்கு அன்னதானமடம் ஒன்று நிர்மாணிக்கப்பட உள்ளதால் தகுந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரத்தை 20.10.2014 தொடக்கம் ஆலய நிர்வாக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை 29.10.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபாலிலும் அனுப்பி வைக்கலாம்.

அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியினுள் **29.10.2014 பி.ப.4.00** மணி வரை இடலாம்.

கேள்விப்பத்திரத்துக்கான மீளப்பெறமுடியாத கட்டணம் ரூபா 500/=

கேள்விப்பத்திரங்கள் திறத்தல்:30.10.2014 பி.ப 2 மணிக்கு

செயலாளர்

(சி/17064)(4.3.6) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.















**தேவை** யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு காரியாலய உதவியாளர் (Office Assistant) தேவை. இளைப்பாறிய ஆண்கள் விரும்பத்தக்கது.
தொ.பே:075 730 3663 (சி/17124)(4.6.3)

**விற்பனைக்கு**
1½ வயது நிரம்பிய "BOXER" ஆண் நாய் விற்பனைக்கு உண்டு.
தொ.பே:077 049 5335 (53367)(4.6.3)

**Home visit Classes Eng/Tamil-Medium**
Accounting O/L, A/L London/Cambridge, History - O/L. Citizenship-O/L, Geography - O/L, English - Any grade
T.P. : 077 331 6402 (53376)(7.6.3)

**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி**
**கந்தரோடை, சுன்னாகம்.**
முன்னாள் அதிபர்
அமரர் ஒறேற்றர் சி.சுப்பிரமணியம்
அவர்களின்
20ஆவது ஆண்டு
நினைவுப் பேருரை வைபவம்
2014
தலைவர் : இ.சுல்வரதாசன் அவர்கள் முதல்வர் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
காலம் : இன்று (20.10.2014) திங்கட்கிழமை பி.ப. 1.50 மணி
இடம் : கந்தையா உபாத்தியாயர் மண்டபம்
நினைவுப் பேருரை
- ஸ்கந்தவரோதயன்
- உபதலைவர்
கொழும்பு பழைய மாணவர் சங்கம்
விடயம்
நிறைவுரை
பிரதி முதல்வர் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
(சி/17069)(7.6.3)

**வேலையாள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் சைவ உணவகத்துக்கு அனுபவமுள்ள தேநீர் தயாரிப்பாளர், உணவு பரிமாறுபவர் தேவை
தொ.பே: 077 224 7505, 021 568 5516 (53360)(4.5.6.3)

**விற்பனைக்கு**
சில்வர் பைப் பென்டர் (BENDER) மற்றும் தரமான No.1 சில்வர் பைப் அதன் பொருத்துகள் சில்வர், செப்பு, பித்தளை, தகடு வகைகள் யாவும் நிதான விலையில் கிடைக்கும்.
நந்தலாலா இரும்பகம், (53363)(4.6.3)
29, ஸ்ரான்லி வீதி, யாழ். 021 222 6234

**காணி விற்பனைக்கு**
அரியாலையில்
4½ பரப்புக் காணி உடன்
விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 229 2481 (53361)(45.6.3)

# எழுதுமட்டுவாழ் தெற்கு மக்கள் கொந்தளிப்பு

## வீட்டுத்திட்டம் தொடர்பில்

தென்மராட்சி, ஒக்.20

இடப்பெயர்வால் முழுமையாக பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு வீடமைப்புத் திட்டம் அரைகுறையாக வழங்கிய நிலையில் இடம்பெயராத கிராமத்துக்கு வீடமைப்புத் திட்டம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு எழுதுமட்டுவாழ் தெற்கு மக்கள் கொந்தளித்துள்ளனர்.

2000ஆம் ஆண்டு இடப்பெயர்வு ஏற்பட்டபோது எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம், ஒட்டுவெளி ஆகிய கிராம மக்கள் முழுமையாக வெளியேறி 2011,2012ஆகிய ஆண்டுகளில் மீள்குடியமர்த் தப்பட்டனர்.

அவ்வேளையில் காணிகளின் எல்லைகள் அங்கிருந்தவர்களின் குடியிருப்புகள் உட்பட பயன்தரு மரங்களும் அழிக்கப்பட்டிருந்தன. 2011,2012 ஆகிய காலப் பகுதியில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த 322 குடும்பங்கள் மீளக்குடியேறி தமது காணிகளைத் துப்புரவு செய்து சிறு கொட்டில்களை அமைத்து மீளக்குடியமர்ந்தனர்.

2011ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் இந்திய வீடமைப்புத் திட்டத்துக்கு முதற்கட்டமாக 85 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு 2013ஆம் ஆண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவா ணந்தா ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. அடுத்த கட்டத்தில் ஏனைய குடியிருப்பாளர்களுக்கு வீடுகள் வழங்கப் படும் என்று தெரிவிக்கப் பட்டது:

அயல் கிராமங்களான ஒட்டுவெளி, கரம்பகம் ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்த அனைத்து குடும்பங்களுக்கும் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ள போதிலும் எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் மீளக் குடியமர்ந்த மக்களில் ஏனைய குடும்பங்களுக்குத் வீட்டுத்திட்டம் இதுவரை வழங்கப்படவில்லை. இந்தநிலையில் இதுவரை இடம்பெயராத உசன் பிரிவில் உள்ள குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடியிருப்புகள் இல்லாத நிலையில் மீள் குடியமர்ந்து தற்காலிக ஓலைக்கொட்டில் களில் நாம் வசித்து வருகிறோம். எமக்கு வீட்டுத்திட்டம் வழங்காமல் பாதிப்பே இல்லாத கிராமத்துக்கு வீட்டுத் திட்டம் வழங்க பிரதேச செயலகம் ஏற்பாடுகள் மேற் கொண்டுள்ளமை குறித்து எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவு மக்கள் கவலை தெரிவித்ததுடன் பாதிக்கப்பட்ட தமக்கு வீட்டுத்திட்டம் வழங்க கோரி மாவட்ட செயலகத்தில் முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (வ)

## 'நாம் நண்பர்கள்' அமைப்பு நடத்திய குருதிக்கொடை



யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ். மாவட்ட மருத்துவமனைகளின் இரத்த வங்கிகளில் ஏற்பட்ட இரத்தத் தட்டுப்பாட்டை அடுத்தும் தீபாவளியை முன்னிட்டும் 'நாம் நண்பர்கள்' அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் குருதிக் கொடை முகாம் நடைபெற்றது. யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இந்த முகாமில் ஆர்வமுள்ள பலர் பால் வயது வேறுபாடின்றி கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர்.

குறுகியகால அழைப்பில் இந்த குருதிக்கொடை மேற்கொள்ளப்பட்டாலும் சுமார் 100 பேர் வரையில் குருதிக் கொடை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

சாதாரணமாக நடமாடும் குருதிக்கொடை நிகழ்வில் இவ்வளவு பேர் பங்கேற்பது குறித்து யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கியினர் ம்கிழ்ச்சி வெளியிட்டதோடு குருதிப் பற்றாக்குறையான நேரத்தில் குருதிக் கொடையை ஏற்பாடு செய்த 'நாம் நண்பர்கள்' அமைப்புக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தனர். (வ-86)

## மீண்டும் திறக்கப்பட்டன மாட்டிறைச்சிக் கடைகள்

வடமராட்சி, ஒக்.20

கடந்த ஒரு மாத கால இடைவெளிக்குப் பின்னர் வடமராட்சிப் பிரதேசத்தில் மூடப்பட்டிருந்த மாட்டிறைச்சிக் கடைகள் மீண்டும் திறக்கப்பட்டன.

மாடுகளுக்கு கால்வாய் நோய் ஏற்பட்டதைத் தொடர்ந்து இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதையோ, விற்பனை செய்வதையோ நிறுத்துமாறு பருத்தித்துறை, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு விடுத்த கோரிக்கையை அடுத்து கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் மாட்டிறைச்சிக் கடைகள் யாவும் மூடப்பட்டன.

தென்மராட்சியில் பிரதேச மேய்ச்சல் மாடுகளில் இருந்து வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள துன்னாலை, கரவெட்டி கிழக்குப் பகுதி மேய்ச்சல் மாடுகளுக்கு கால்வாய் நோய் பரவியதைத் தொடர்ந்தே மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது வெளியில் நடமாட விடுவது வெளிப்பிரதேசங்களுக்கு விற்பனை செய்வது தடை செய்யப்பட்டது.

தற்போது கால்வாய் நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததைத் தொடர்ந்து குறித்த தடைகள் நீக்கப்பட்டு மாடுவெட்டவும் மாட்டிறைச்சியை விற்பனை செய்வதற்குமான தடை நீக்கப்பட்டது.

இந்தத் தடை நீக்கத்தால் பருத்தித்துறை - புலோலி, திக்கம், நெல்லியடி, வல்வெட் டித்துறை ஆகிய இடங்களில் உள்ள சந்தைகளில் இயங்கிய மாட்டிறைச்சிக் கடைகளை திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. (வ-173)




வட மாகாண லயன்ஸ் கழகங்கள் இணைந்து ஏற்பாடு செய்த வெள்ளைப் பிரம்பு தின ஊர்வலம் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் சுன்னாகம் பஸ் நிலையத்தில இருந்து ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதி வழியாக மருதனார்மடம் சந்திக்கு அண்மையாக அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தைச் சென்றடைந்தது. சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் செ.மகாதேவா தலைமையில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் இரண்டாவது ஆளுநர் வ.தியாகராசாவும், சிறப்பு விருந்தினராக லயன்ஸ் ச.பத்மநாதனும், கௌரவ விருந்தினராக சுன்னாகம் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி சமிந்தாவும் கலந்து கொண்டனர். சுன்னாகம் வாழ்வக மாணவர்கள் மற்றும் பொது மக்களும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். (வ-86)

## பயிர் பாதுகாப்பு காப்புறுதி செய்வதில்லையென முடிவு

### நெற்பயிர் அழிவு காப்புறுதி வழங்கியதில் பாரபட்சம்

தென்மராட்சி, ஒக்.20

போதிய மழை வீழ்ச்சியின்மையால் நெற்பயிர் அழிவு அனைவருக்கும் ஏற்பட்டுள்ள போதிலும் இதுவரை ஒரு சிலருக்கு மட்டும் காப்புறுதி இழப்பீடு வழங்கப்பட்டதால் இந்த வருட காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் நெற்செய்கையாளர் பயிர்ப் பாதுகாப்பு காப்புறுதி செய் வதில்லை என்று முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

கடந்த வருடம் நெற்செய்கையாளர்களுக்கு மானிய உரவகைகள் விநியோகம் இடம்பெற்ற இடங்களில் வைத்து பயிர்க் காப்புறுதி பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டன. சிலர் அன்றைய தினத்தில் பதிவை மேற்கொள்ள முடியவில்லை.

கடந்த் வருட போதிய மழை வீழ்ச்சியின்மையால் பெரும்பாலான வயல்களில் விளைச்சல் இன்மையாலும் கட்டாக்காலி கால்நடைகளில் அழிக்கப்பட்டதாலும் நட்டமடைந் தனர். பயிர்ப் பாதுகாப்பு காப்புறுதி செய்த பலர் தமக்கு ஏற்பட்ட இழப்புக்காக உரிய படிவங்கள் மூலம் இழப்பீட்டுக்கு விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் ஒரு சிலருக்கு மட்டும் இழப்பீடுகள் வழங்கப்பட்டன. ஏனையோருக்கு இதுவரை இழப்பீடு வழங்கப்படவில்லை. (வ-9)

## கண்ணாடி இழையைப் பயன்படுத்தி சுயதொழில் முயற்சிக்கு வழிகாட்டல்

### பிரதேச செயலர் பிரிவு வாரியாக பயிற்சி

அச்சுவேலி, ஒக்.20

யாழ்.மாவட்டத்தில் கண்ணாடி இழை மற்றும் தும்புக் கண் ணாடி இழையை மூலப் பொருளாகப் பயன்படுத்தி சுயகைத்தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கான பயற்சியை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்ட அலுவலகம் வழங்கி வருகின்றது. முதற் கட்டமாக பிரதேச செயலர் பிரிவு வாரியாக தெரிவு செய்யப்பட்ட 25 தொழில்முயற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

அவர்களுக்கான பயிற்சி மூன்று தினங்கள் முழு நேரப் பயிற்சியாக கடந்த 17-19ஆம் திகதி வரை வழங்கப்பட்டது. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்ட காரியாலய பயிற்சி மண்டபத்தில் வைத்து பயிற்சி வழங்கப்பட்டது.

பொருள்களை உருவாக்குவதற்கான அச்சுக்களை வடிவமைத்தல் கூரைத்தகடுகள், தலைக்கவசம், கதிரைகள், மேசைகள், வீட்டுப் பாவனைப்பொருள்கள் மற்றும் பாத்திரங்களை உருவாக்குதல், மெருகூட்டல், பழுது பார்த்தல் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது. யாழ்.மாவட்டத்தில் புதிய தொழில் முயற்சிகளை அறிமுகம் செய்யும் நோக்குடன் கண்ணாடி இழையால் மற்றும் தும்புக் கண்ணாடி இழையால் உற்பத்தி பொருள்களை உருவாக்கலுக்கான பயிற்சிகளைப் பயனாளிகளுக்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்ட அலுவலகம் வழங்கி வருகின்றது.

பயிற்சி பெற்றவர்களுக்கான மேலதிக உதவிகள் வழிகாட்டல்களையும் வழங்குவதற்கு சபை தீர்மானித்துள்ளது. பயிற்சி பெற்றவர்கள் சுயமாகவே உற்பத்தி பொருள்களை உருவாக்குவதற்கான தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கான தேர்ச்சியைப் பெற்றிருப்பதால் அவர்கள் சுயமாகவே தொழில் முயற்சியில் ஈடுபட முடியும் என்று கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அதிகாரி தெரிவித்தார். (வ-11)

## போலி ஊதுபத்தி விற்பனையால் உற்பத்தியாளர் பாதிப்பு

தென்மராட்சி, ஒக்.20

போலி ஊதுபத்திகளை சந்தைகளிலுள்ள அங்காடி நிலையங்களில் மலிவு விலையில் விற் பனை செய்யப்படுவதால் தமது உற்பத்திப்பொருள்களைச் சந்தைப்படுத்த முடியவில்லை என்று ஊதுபத்தி உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஊதுபத்தி அடைத்துவரும் பெட்டிகளில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் ஊதுபத்திகளை வைத்து மலிவு விலையில் விற்பனை செய்யப்படுவதால் பெரும் பொருள் செலவில் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளப்படும் ஊதுபத்தியை சந்தைப்படுத்த முடியவில்லை என்றும்- தெரிவித்தனர். வங்கிகளில் கடன்பெற்று உற்பத்தியை அதிகரித்துள்ள போதிலும் சந்தைப்படுத்த முடியாததால் கடன்தொகை தவணைப் பணம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (வ-9)

## சங்கானைப் பகுதியில் அதிகரித்து வரும் களவுகள்

சங்கானை, ஒக்.20

அண்மைக் காலங்களில் சங்கானைப் பகுதியில் களவுகள் அதிகரித்துள்ளன.

சங்கானை ஓடக்கரை வீதியில் உள்ள வீட்டில் ஓர் வெள்ளடியன் (சண்டைக்கோழி) கோழி ஒன்று அண்மையில் இரவு வேளை திருடப்பட்டுள்ளது. அதன் பெறுமதி ரூபா 10 ஆயிரத்துக்கு மேலானதாகும். மேலும் இதே வீட்டில் இரண்டு காளை மாடுகள் சில தினங்களுக்கு முன் களவாடப்பட்டன. இவற்றின் பெறுமதி சுமார் ரூபா ஒரு லட்சம் ஆகும்.

மற்றும் அதே வீட்டில் அண்மையில் இரவு நேரம் மழை பெய்த நேரம் 76 கோழிகளைக் கூட்டோடு தூக்கிச் சென்றுள்ளனர். தவசி செல்வராசா என்பவர் தனிமையில் வசித்து வருகின்றார். அவரது வீட்டிலேயே இந்தக் களவுகள் இடம்பெற்றுள்ளன.

அதேவேளை அவரது வீட்டுக்கு பக்கத்தில் உள்ள வீட்டில் மோட்டார் சைக்கிள் பற்றறி, எஞ்சின் என்பன திருடப்பட்டுள்ளன. அண்மையில் பட்டப்பகலில் சங்கானை மக்கள் வங்கியில் கடமைபுரியும் இரண்டாம் நிலை அலுவலரின் மோட்டார் சைக்கிள் ஒன்றும் திருடப் பட்டுள்ளது. (வ-29)

# 70 அடி மின்கம்பத்தில் ஏறி குதிக்க முயன்றவர் கைது

கிளிநொச்சி, ஒக்.20
கிளிநொச்சி, முறிகண்டி, செல்வபுரம் பகுதியில் 70 அடி உயரமான மின்கம்பத்தில் ஏறி, அங்கிருந்து குதிக்க முயற்சித்த குடும்பஸ்தர் ஒருவர், கடந்த வெள்ளிக்கிழமை மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். செல்வபுரத்தை சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான நடராசா வசந்தன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக இவர் ஏற்கனவே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இதன்போது, பொலிஸாரிடமிருந்து தப்பிய சந்தேகநபர், மின்கம்பத்தில் ஏறி கீழே குதிக்க முயற்சி செய்துள்ளார்.

இந்நிலையில், அவ்விடத்துக்குச் சென்ற இராணுவத்தினர், குறித்த நபருடன் சமரசமாக பேசி, அவரை கீழே இறக்கியுள்ளனர். இதனையடுத்து மாங்குளம் பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர். (ற)

# தொடரும் மழையால் இயல்பு நிலை பாதிப்பு



வவுனியா, ஒக்.20
வவுனியாவில் நேற்றுமுன்தினம் முதல் பெய்து வரும் கடும் மழையின் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தாழ்வான பிரதேசங்களில் நீர் தேங்கியுள்ளதுடன் வவுனியா மன்னார் வீதியில் அதிகளவான மழை நீர் வீதியை மேவிச் செல்கிறது.

இதேவேளை, கடும் மழை காரணமாக கொட்டகைகளில் வாழ்பவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ற)

# ஆளணி இன்மையால் பஸ் சேவைகள் முடக்கம்

வடமராட்சி, ஒக்.20
வடபிராந்தியத்தில் உள்ள இ.போ.ச.டிப்போக்களுக்கு புதிய பஸ்கள் கிடைத்துள்ள போதிலும் சாரதிகள் நடத்துநர்களுக்கான போதிய ஆளணிகள் இன்மையால் சீரான பஸ் சேவைகளை முன்னெடுக்க முடியாதநிலை இருந்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய 7 இ.போ.ச. டிப்போக்களுக்கும் புதிதாக தருவிக்கப்பட்ட பஸ்களில் தலா 10 பஸ்கள் வீதம் அண்மையில் வழங்கப்பட்டன. இந்தப் புதிய பஸ்களைக் கொண்டு பல புதிய பஸ் சேவைகளை நடத்த டிப்போக்கள் திட்டமிட்டுள்ள போதிலும் போதிய ஆளணிகள் இன்மையால் இந்தச் சேவைகளை உடனடியாக முன்னெடுக்க முடியாதநிலை காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஆளணிகளை விரைவாகத் தந்துதவுதாக மத்திய போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது. புதிய ஆளணி நியமனங்கள் கிடைத்ததும் பிராந்தியத்தில் உள்ள குறித்த இ.போ.ச.டிப்போக்கள் புதிய சேவைகளை ஆரம்பித்து பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-173)

# 23 வர்த்தகர்களுக்கு நீதிமன்றம் அபராதம்

## காலாவதியான பொருள்களை விற்றமையால்

முல்லைத்தீவு, ஒக்.20
காலாவதியான மற்றும் அதிக விலைகளில் பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் வழக்கு தொடரப்பட்ட வர்த்தகர்களை குற்றவாளியாக இனங்கண்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் அபராதப் பணத்தை செலுத்துமாறு கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு நகர் பகுதிகளில் அண்மையில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட பொதுசுகாதார பரிசோதகர்கள் காலாவதியான வாசனைத் திரவியங்கள், உணவுப்பொருள்கள் என்பனவற்றை விற்றமை, விலைப்பட்டியல் காட்சிப் படுத்தாமை மற்றும் பொருட்களை அதிகூடிய விலைக்கு விற்பனை செய் தமை தொடர்பில் 23 வர்த் தகர்களுக்கு எதிராகவழக்குத் தாக்கல்செய்தனர். குறித்த வழக்கு விசாரணைகள் கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது குறித்த 23 வர்த்தகர்களையும் குற்றவாளியாக இனங்கண்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா 23 வர்த்தகர்களுக்கும் அபராதத் தொகையை செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (ற)

# தொழில் முயற்சியாளருக்கு நான்கு நாள் பயிற்சி நெறி

## துணுக்காய் பிரதேச செயலகத்தில்

முல்லைத்தீவு, ஒக்.20
முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட இரசாயன உற்பத்தி தொழில் முயற்சியாளர்களுக்கான நான்கு நாள் விசேட பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுஎன்றுஇலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.ரஜனிகாந்த் தெரிவித்தார்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் இரசாயன உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யும் முயற்சியாளர்களுக்கு மெழுகுவர்த்தி, ஊதுபத்தி, சவர்க்காரம், கற்பூரம் உள்ளிட்ட பெருள்களின் உற்பத்தி, பாதுகாப்பு, சந்தை வாய்ப்பு என்பனவற்றிற்கான பயிற்சிகளும், ஆலோசனைகளும் வழாங்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியானது, கடந்த வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து நான்கு நாள்களுக்கு துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெறும். இப்பயிற்சி நெறியில் இருபதுக்கும் அதிகமான தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

# கடன் உதவிகள் பெறுவது தொடர்பில் ஆலோசனை

## கைத்தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு



முல்லைத்தீவு, ஒக்.20
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில், கைத்தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு கடன் உதவி வழங்கும்திட்டங்கள் மற்றும்தொழில் பற்றிய ஆலோசனைகள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கரைதுறைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் முல்லைத்தீவு மாவட்ட உதவி ஆணையாளர் எஸ்.ரீஜனிகாந்தின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர் சிவனேசராஜா உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது, கைத்தொழிலை ஊக்குவிப்பதற்குத் தேவையான ஆலோசனைகள், வியாபாரத்தை பதிவு செய்தல், அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளில் குறைந்த வட்டியில் கடன்களை பெற்றுக்கொள்ளுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில், 50க்கும் அதிகமான கைத்தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். (ற)

# இயக்கச்சி வீதி வளைவை மாற்றம் செய்ய நடவடிக்கை

## ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய

பளை, ஒக்.20
விபத்துக்களை ஏற்படுத்தும் நிலையில் காணப்படும் இயக்கச்சி வீதி வளைவை உடனடியாக மாற்றம் செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன், வளைவினை சீர்படுத்துவதற்காக இயக்கச்சி சந்தியுடன் காணப்படும் பல வர்த்தக நிலையங்கள் குடியிருப்புகள் போன்றவற்றை அப்புறப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியிலிருந்து பளைக்கு ஏ-9 வீதியூடாக வாகனத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயணம்செய்தபோது அவரை வரவேற்க இயக்கச்சிச் சந்தியில் பெருமளவு மக்கள் காத்திருந்தனர். அங்கு வந்த ஜனாதிபதி ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் வீதி வளைவு காணப்பட்டதை அடுத்து, உடனடியாக அதனை சீர்செய்யுமாறு உத்தரவிட்டுள்ளாராம்.

இதனைஅடுத்து அங்கு வந்த உயர்அதிகாரிகள் வீதியை மாற்றியமைப்பதற்கான ஏற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அங்கு காணப்பட்ட வர்த்தக நிலையங்கள் குடியிருப்புகள் போன்றவற்றைப் பின்னகர்த்துமாறு கோரப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இயக்கச்சி சந்தி, நாற்சந்தி என்பதால் சந்தியின் தெற்கு புறமாக வீதி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ற-9)

# பருத்தித்துறை ஆஸ்பத்திரி வீதியில் ஓட்டோ தரிப்பிடம் அமைக்க முடிவு

## பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் முடிவு

வடமராட்சி, ஒக்.20
பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை முன்பாக உள்ள ஆஸ்பத்திரி வீதியில் ஓட்டோக்களை நிறுத்துவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்காக தனியார் காணி ஒன்றை ஒப்பந்த அடிப்படையில் பெற்று அந்தக் காணிக்குள் ஓட்டோக்களுக்கான தரிப்பிடம் ஒன்றை அமைப்பது என்று பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபைத் தவிசாளர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அதற்கான தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அந்தக் கூட்டத்தில், புறநெகும திட்டத்தின்கீழ் 10 மில்லியன் ரூபா கிடைத்துள்ளதால் அந்த நிதிமூலம் (2014 ஆம்) அந்த ஆண்டு தயாரிக்கப்பட்ட மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்தில் முதலாவதாக முன்னுரிமைப் படுத்தப்பட்ட குடத்தனை பொற்பதி வீதி புனரமைக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி அமைச்சில் இருந்து ஒரு மில்லியன் 6 மாதங்களுக்குள் கிடைக்கவுள்ளது. இந்நிதியை சபையின் மூன்று உப அலுவலகங்களுக்கும் வழ்ங்கக்கூடிய விதத்தில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதால் அதனடிப் படையில் புலோலி உப அலுவலகத்தின் கீழ் திக்கம் மானாண்டிச் சந்தையின் எல்லைச் சுவர், கேற் அமைத்தல், மந்திகை சுருக்கம்பன் பொது மயானத்தில் போக்குவரத்துக்குரிய பாதை அமைத்தல், கற்கோவளம் பாடசாலை வீதி செப்பனிடல், புனித நகர் சந்தைக்கு அடிக்கட்டுமானம் அமைத்து புனரமைத்தல் ஆகிய வேலைகளையும், குடத்தனை உப அலுவலகத்தின் கீழ் கரிக்கோப்பு வீதி செப்பனிடல், குடத்தனை சிறுவர் பூங்கா பராமரிப்பு ஆகிய வேலைகளையும் மருதங்கேணி உப அலுவலகத்தின் கீழ் செம்பியன்பற்று ஆயுள்வேதக்கட்டடம் புனரமைப்புச் செய்தல், உடுத்துறை சுனாமிக் குடியிருப்பு வீதி செப்பனிடல் போன்ற வேலைகளைச் செய்ய முடிவானது.

நாகர்கோவில் பகுதியின் மீன்சந்தை ஒன்றை அமைக்க சேவா லங்கா நிறுவனம் முன்வந்துள்ளதால் அந்தக் கட்டடத்துக்குரிய காணியை பிரதேச சபை சட்டத்துக்கு அமைய சேவாலங்கா நிறுவனத்திடம் கையளித்து கட்டடம் பூர்த்தியான பின்னர் காணியை நிறுவனத்திடமிருந்து மீளப் பெறப்படும். - போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ற-173)

# சப்ரகமுவ மாணவரது போராட்டம் தொடரும்

## அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.20

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளனர் என்று அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் தெரிவித்துள்ளது. அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றிய இணைப்பாளர் நஜித் இந்திக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

பம்பஹின்ன சந்தியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சத்தியாக்கிரக மேடையை பொலிஸார் பலவந்தமாக அகற்றியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

52 நாள்களாக சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் பலாங்கொட பம்பஹின்ன சந்தியில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்த மேடை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்கமைய பல்கலைக்கழக வளாகத்தில் மற்றும் சத்தியாக்கிரகத்தில் இருந்து மாணவர்கள் விலகியதை அடுத்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த நிலைமையை கருத்திற் கொண்டு, பல்கலைக்கழகத்தை மீண்டும் திறப்பது தொடர்பாக பீடாதிபதிகள் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கிடையே அடுத்த வாரம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு தேசிய சுதந்திர முன்னணி கடுமையாக உழைக்கும் என்று - அந்தக் கட்சியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். கடந்த வெள்ளிக்கிழமை அலரிமாளிகையில் ஜனாதிபதியுடனான விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய சுதந்திர முன்னணி உட்பட அனைத்துக் கட்சிகளின் ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் கவனத்தில் கொண்டு அரசு எதிர்காலத் திட்டங்களை முன்னெடுக்கும் என ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார் என்றும் கூறப்படுகின்றது. (ற)

# அனைத்து இனங்களும் சமமாக வாழ வேண்டும்

## அரசு அதை அழித்துவிட்டது என்று ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக்.20

நாட்டில் சகல இனங்களும் சரிசமமாக வாழும் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

பேருவளை - சபுகொடை விகாரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இந்த நாட்டில் வாழும் அனைத்து இனங்கள் மற்றும் அவர்களின் கலாசாரம் பெருமைக்குரிய விடயங்களாகும். மேலும், அவற்றைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நாட்டில் வாழும் அனைத்து இனங்களும் சரி சமமாக வாழும் நிலை மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

மஹிந்த அரசு அதனை முற்றாக அழித்து விட்டது. அதன் காரணமாகவே இனங்களுக்கிடையிலான முறுகல் நிலைகள் மீண்டும் தோன்றியுள்ளன"- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# சோதிடர் ஆலோசனைப்படி தேர்தல் நடத்தப்படவில்லை

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.20

சோதிடர்களின் ஆலோசனைக்கு அமைய தேர்தலை நடத்தத் தீர்மானிக்கவில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களுடன் நடைபெற்ற சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"சோதிடர்களின் ஆலோசனைக்கு அமையவோ அல்லது ஜாதகம் பார்த்தோ ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவில்லை. தேர்தல் நடத்தப்பட வேண்டுமா? இல்லையா? என்பது குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வின் அடிப்படையிலேயே தேர்தல் நடத்தப்பட உள்ளது. ஊவா மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னதாகவே ஜனாதிபதி தேர்தலை நடத்தத் தீர்மானித்தேன். ஊவா மாகாண சபைத் தேர்தல் பற்றி அதிகம் யோசிக்க வேண்டியதில்லை. ஹரின் பெர்னாண்டோ போட்டியிட காரணத்தால் எதிர்க்கட்சி சற்று கூடுதலான வாக்குகளைப் பெற்றுக்கொண்டது.

டிலானும் நிமாலும் தேர்தலில் பகிரங்கமாகவே மோதிக் கொண்டனர். எனது தேர்தல் பற்றி எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

நன்றாக ஆராய்ந்து ஜனாதிபதி தேர்தலை நடத்தத் தீர்மானித்தேன் தேர்தலில் நான் வெற்றியீட்டுவேன்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# தொலைபேசி அழைப்புக்கள் பதிவு செய்யப்படும்

கொழும்பு, ஒக்.20

சிறைக் கைதிகளுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொள்வதற்காக வெலிக்கடை சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள தொலைபேசி கூட்டின் ஊடாக பெறப்படும் அழைப்புகள் ஒலிப்பதிவு செய்யப்படும் என சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்திரரட்ன பல்லேகம வெளியிட்டுள்ளார்.

எட்டு தொலைபேசி கூடுகள் வெலிக்கடை சிறைச்சாலையில் நிறுவப்பட்டுள்ளன என்றும்- தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சுமார் 800 சிறைக் கைதிகள் தத்தமது உறவினர்களுடன் தொலைபேசி அழைப்பை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். அதேபோல ஏனைய சிறைச்சாலைகளிலும் இந்த சேவை விரைவில் ஏற்படுத்தப்படும் என்றும்- சிறைச்சாலை ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ற)



# பின்னடைவுகள் குறித்து ஆராய்வு

## பிரதி நிதியமைச்சர்.சரத் அமுனுகம தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.20

கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய நலன்புரி நடவடிக்கைகளை உரிய முறையில் முன்னெடுப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டி கலகெதர பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும் போது, "கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல துறைகளின் பின்னடைவு குறித்து ஆராயப்பட்டு வருகின்றது"- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# பிரதமர் பதவிக்காக கருத்து மோதல்

## பிரதான கட்சிகளுக்குள்

கொழும்பு, ஒக்.20

ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில் பிரதான கட்சிகளுக்கிடையில் அடுத்த பிரதமர் யார் என்பது குறித்து கருத்து மோதல்கள் எழுந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த பிரதமர் யார்? என்ற தீர்மானம் இரு கட்சிகளினதும் ஜனாதிபதித் தேர்தல் வெற்றியில் பெரும் செல்வாக்கைச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஸ்ரீ.ல.சு.கட்சியில் அடுத்த பிரதமராக சிரேஷ்ட உறுப்பினர் மைத்திரிபால சிறிசேனவின் பெயர் கட்சி முக்கியஸ்தர்களால் முன்மொழியப்பட்டுள்ளது.

அதேபோன்று, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நியமிக்கப்படுவாரா என்ற சந்தேகமும் கட்சிக்குள் நிலவுகின்றது.

இதேவேளை- ஐக்கிய தேசியக் கட்சியில் பிரதமர் தெரிவு செய்யப்படின் அது சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அப்படி நியமிக்கப்படின் 1977 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது ஜனாதிபதித் தேர்தலின் போது ஆர். பிரேமதாஸாவை பிரதமராக அறிவித்து, அவர் கழுத்தில் ஏறி வெற்றி பெற்றது போல வெற்றி பெற முடியும் எனவும் ஐ.தே. கட்சியினர் தெரிவித்துள்ளனர் என்றும்- கூறப்படுகின்றது.

இந்தத் தகவலை சிங்கள மொழி ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது. (ற)

# பல சலுகைகளுடன் வரவு-செலவுத் திட்டம்; அரசு தீர்மானம்

கொழும்பு, ஒக்.20

மக்கள் எதிர்பார்க்காத அளவுக்கு எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் சலுகைகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, சம்பள அதிகரிப்பு வழங்கப்படாமை ஆகிய காரணிகளால் சிங்கள மக்களும் அரசு மீது அதிருப்தியுடன் காணப்படுகின்றனர். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் தேர்தலில் வெற்றியீட்ட முடியாது என்று ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது.

அடுத்த மாதம் 24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட உள்ள வரவு-செலவுத் திட்டத்தில் பெரியளவு நலன்கள் மக்களுக்கு வழங்கப்பட உள்ளன என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்க முன்னதாக பூரண தகவல்களை வெளியிட முடியாது எனவும், வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது மக்களுக்காக எவ்வளவு நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதனை பார்க்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். போரின் பின்னர் நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

இந்த அபிவி ருத்தியின் பயன்களை மக்கள் அனுபவிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. அரச ஊழியர்களின் சம்பளங்கள் உயர்த்தப்பட உள்ளன, அத்தியாவசிய பொருள்களுக்கான விலைகள் குறைக்கப்படவுள்ளன, கைத்தொழில்களில் ஈடுபடுவோர் மற்றும் விவசாயிகளுக்கும் நன்மைகள் வழங்கப்பட உள்ளன.

அண்மைக்கால வரவு, செலவுத் திட்ட வரலாற்றில் எந்தவொரு வரவு-செலவுத்திட்டத்திலும் வழங்கப்படாத நன்மைகள் இந்த முறை வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கு கிடைக்கப்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து அரசு மக்களுக்கு குறுகிய கால நலன்களை வழங்கத் திட்டமிட்டுள்ளது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சுமத்தியுள்ளன. தேர்தல் வெற்றியின் பின்னர் நாடு பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என்றும் அவை சுட்டிக்காட்டியுள்ளன. (ற)

# தீபாவளியும் திரைப்படங்களும்




தீபாவளி அன்று விஷால், ஸ்ருதி நடித்துள்ள பூஜை வெளிவருகின்றது. கத்தி இந்தப் பட்டியலில் இன்னமும் உறுதியாக இணையவில்லை. இந்தப் படங்களின் தாக்கம் நவம்பர் மாதத்தின் மத்திய பகுதி வரைக்கும் இருக்கும். நவம்பரில் ஷங்கர் இயக்கத்தில் விக்ரம் நடித்த ஐ படம் வெளியாகின்றது. இதன்தாக்கம் டிசெம்பர் வரை இருக்கும். டிசெம்பர் 12 ஆம் திகதி ரஜினி பிறந்த நாளில் லிங்கா படம் வெளிவருகிறது. இப்படி அடுத்தடுத்து பெரிய படங்கள் வெளிவருவதால் இதன் இடையில் கிடந்து சிக்கிக் கொள்ள மற்ற படங்கள் விரும்பவில்லை. இதனால் மற்ற படங்கள் ஜனவரி மாதத்துக்கு செல்கிறது. தனுஷ் நடிக்கும் அனேகன், ஆர்யாவின் மீகாமன், சிவகார்த்திகேயனின் காக்கிச்சட்டை, விஜய் சேதுபதியின் இடம் பொருள் ஏவல், ஜெயம் ரவியின் பூலோகம் உட்பட 15 படங்களுக்கு மேல் வெளியீட்டுக்குத் தயாராக இருந்தும் ஜனவரி மாதத்துக்கு பின்னர்தான் திரைக்கு வரவுள்ளன.




# பட்டாம் பூச்சிகளின் இடப்பெயர்வு

வட அமெரிக்காவில் இருந்து மெக்ஸிக்கோவுக்கு பனிக் காலத்தில் ஆண்டு தோறும் லட்சக்கணக்கான மொனார்க் பட்டாம் பூச்சிகள் இடம்பெயர்வதை வழக்கமாக கொண்டுள்ளன.

வானத்தை முழுவதாக மறைப்பது போல் கண்கவர் காட்சியாக விளங்கும் அந்த இடப்பெயர்வில் மொனார்க் பட்டாம் பூச்சிகள் சுமார் 2 ஆயிரத்து 500 மைல் தூரத்தை பறந்தே கடக்கின்றன. பட்டாம் பூச்சிகளில் எண்ணற்ற வகைகள் இருந்தாலும் இந்த அரிய வகை மொனார்க் பட்டாம் பூச்சிகள் மட்டுமே பறவை இனத்தை போல ஆண்டுதோறும் மிகப்பெரிய இடப்பெயர்வை மேற்கொள்கின்றன.

இந்த இடப்பெயர்வுக்காக தான் உண்ணும் உணவை தன் உடலில் கொழுப்பாக சேர்த்து வைத்து பயன்படுத்தி கொள்கின்றன.

பனிக்காலத்தில் வட அமெரிக்காவில் இருந்து மெக்ஸிக்கோ நோக்கி பறக்கும் இந்த பட்டாம்பூச்சிகள் கடல் மட்டத்தில் இருந்து சுமார் 10 ஆயிரம் அடி உயரத்தில் இருக்கும் மலைகளில் உள்ள மரங்களில் தஞ்சம் அடைகின்றன.

இந்த உயரத்தில் இருப்பதால் அந்த பட்டாம் பூச்சிகள் காற்று, மழை, பனி மற்றும் இதர விடயங்களால் பாதிப்படையாமல் பாதுகாப்பாக உள்ளன. அங்குள்ள குளிர்ந்த வெப்ப



நிலையில் மரங்களின் கிளைகள், இலைகள் என மொத்த மரத்தையும் மறைப்பதை போல பட்டாம்பூச்சிகள் அமர்ந்து கொள்கின்றன.

பின்னர் குறிப்பிட்ட காலத்துக்குப் பின் அங்கிருக்கும் பட்டாம்பூச்சிகள் தெற்கு நோக்கி இடப்பெயர்வை மேற்கொள்ளத் தொடங்குகின்றன.

# சந்தனம் மிஞ்சினால்...




சவூதி அரேபிய மன்னரான அப்துல்லா, தன்னுடைய மகளின் திருமண நாளன்று தங்கத்திலான மலசல கூடத்தை பரிசாக வழங்கியுள்ளார்.

சவூதி அரேபியாவிலுள்ள பணப் பலம் படைத்த முஸ்லிம்கள் 500 பேரில் உள்ளடங்குவதுடன் அவரின் குடும்ப சொத்து 21 பில்லியன் டொலராகும். தன்னுடைய மகள் அணிந்திருந்த திருமண ஆடைமற்றும் அலங்காரத்துக்கு, மன்னர் 3 கோடி டொலர் செலவழித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவருடைய மகள் 11 மனைவிகள் மற்றும் 16 குழந்தைகளை கொண்ட நபர் ஒருவரையே திருமணம் முடித்துள்ளார்.

# ரிலாக்ஸா வாசியுங்க



மிஸ்டர் எக்ஸ் 50 பேரை காரால் ஏற்றிக் கொன்ற வழக்கில் பிடிபட்டிருந்தார். அவர் மீதான வழக்கு விசாரணைக்கு வந்தது.

நீதிவான் : எப்படி விபத்து நடந்தது ?
எக்ஸ்: ஒரே இருட்டு. நான் 80 கிலோ மீற்றர் வேகத்தில் வந்தபோது தான் எனக்கு தெரிந்தது, என் காரில் பிரேக் பிடிக்கவில்லை என்று. நான் எவ்வளவோ முயற்சி செய்தும், காரை என்னால் நிறுத்த முடியவில்லை.

நீதிவான் : பின்னர் என்ன நடந்தது?

எக்ஸ்: எனக்கு எதிரில் வீதியின் ஒரு பக்கம், 2பேர் நடந்து சென்றதையும், மற்றொரு பக்கம் ஒரு கல்யாண ஊர்வலத்தையும் பார்த்தேன். நீங்களே சொல்லுங்க நீதிவான் ஐயா! நான் என்ன செய்திருக்க வேண்டும்?

நீதிவான் : கண்டிப்பாக குறைந்த உயிர் சேதத்துக்காக அந்த 2 பேர் மேல்தான் மோதியிருக்க வேண்டும்.


எக்ஸ்: அப்படித்தான் நானும் செய்தேன்.

நீதிவான் : அப்படியா ! அப்படிச் செய்திருந்தால் வெறும் 2 பேர்தானே செத்திருக்க வேண்டும். எப்படி 50 பேர் மரணமானார்கள் ?

எக்ஸ் : அப்படி கேளுங்கள் நீதிவான் அவர்களே. நான் அந்த 2 பேர் மேல் மோதிய போது, ங்கொய்யால.... ஒருத்தன் மட்டும் தப்பி அந்தக் கல்யாண ஊர்வலத்துக்குள் ஓடி விட்டான். அதனால்தான் இப்பிடி நடந்து விட்டது..


நீதிவான் : ????
சின்னத்திரையா ? வெள்ளித்திரையா ?

# நான் நடிக்கவில்லை



ஜய் தொலைக்காட்சியின் நடன நிகழ்ச்சியில் பப்லு உடன் நான் சண்டையிட்டதும், அழுததும் உண்மைதன் என்று நடிகர் சிம்பு கூறியுள்ளார். ஜோடி நம்பர் ஒன்று நிகழ்ச்சியில் நடிகர் பப்லு என்ற பிரிதிவிராஜ் நடனமாடிய போது நடுவராக வந்த சிம்பு அவரை சீண்டினார். இருவரும் சண்டை போட்டுக் கொண்டனர். அப்போது எனக்கு நடிக்கத் தெரியாது என்று கூறி தேம்பித் தேம்பி சிம்பு அழுதார். இது தொலைக்காட்சியின் வர்த்தகத்துக்காக போடப்பட்ட பொய் சண்டை என்று பேசப்பட்டது. பல ஆண்டுகள் கழித்து இது பொய் சண்டைதான். பேசி வைத்து போடப்பட்ட சண்டைதான் என்று சில வாரங்களுக்கு முன்பு பிரிதிவிராஜ் கூறினார்.

இது குறித்து சிம்புவிடம் கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த சிம்பு, எனது கோபம் உண்மை என்று பதில் கூறினார். பிரிதிவிராஜ் பேசி வைத்து செய்திருக்கலாம். அவரிடம் பேசி, இந்த மாதிரி சொல்லு என்று சொன்னார்களா, என்று எனக்குத் தெரியாது. அது அவரோட தனிப்பட்ட விடயம். தொலைக்காட்சி தரப்பில் இருந்து அந்த மாதிரி எதுவுமே என்னிடம் சொல்லவில்லை. அந்தத் தொலைக்காட்சி நிறுவனம், இந்த மாதிரி நடந்ததே, அதை போடட்டுமா? என்று கேட்டு தான் ஒளிபரப்பினார்கள். என்னுடைய கோபம் உண்மை. பப்லு ஏதாவது நகைச்சுவைக்காக சொல்லியிருப்பார் என்று நினைக்கின்றேன் என்கிறார் சிம்பு. இத்தனை ஆண்டுகள் கழித்து ஏன் இந்த அக்கப்போர் என்று தெரியவில்லையே.




அடுப்படியில் அடங்கிவிட
அடிமைகள் இல்லை நாங்கள்
பொங்கியெழும் துணிவு கொண்ட
புதுமைப் பெண்கள்
வீட்டினிலே நாங்கள் என்றும்
மென்மை மங்கைகள்
விருப்புடனே சேவை செய்யும்
அன்பின் நெஞ்சங்கள்
அடக்கிடுவோம் வீரத்துடன் நாங்கள்
அசுரர்களை நாளும்
அநியாயம் ஒழித்திடுவோம்
அனைவருமாய் கூடி
தவறு செய்தால் திருத்திக் கொண்டு
மேலே செல்லுவோம்
தவறிக் கூட தவறாய் நாங்கள்
தண்டிக்க மாட்டோம்
அடிக்க வரும் காளையரை
அன்பால் திருத்துவோம்
அதையும் மீறி அடிக்க வந்தால்
அடித்து நொருக்குவோம்
வீசும் வலை விழுவதில்லை
எங்கள் தேசத்தில் – தூய
விழுதுகளால் நிரம்பிடட்டும்
எங்கள் வாழ்க்கை
எளிமை தன்னை என்றும்
எங்கள் வாழ்வில் கொள்ளுவோம்
ஏய்க்க வரும் கயவர் தம்மை
எதிர்த்து நின்று கோசம் போடுவோம்
சுட்டெரிக்கும் சுடர்கள் நாங்கள்
வீர மங்கையர் – எம்மை
இழிவு படுத்தும் மூடர் தம்மை
கொளுத்தி அழிப்போம்
தடுமாற்றம் கண்டிடாமல்
நேராய் செல்லுவோம்
அன்பு கொண்டு வீட்டை...
நாட்டை ஆளுவோம்

# பாசம் கூட வினையாகலாம் சில சமயங்களில்..

சுகி பாலா, இணுவில்

பொதுவாக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அன்பாக, அக்கறையாகப் பாதுகாத்து வளர்த்து வருகிறார்கள். அதிலும் பெண் பிள்ளைகள் என்றால் இன்னும் அதிகமான பாசமும், கூடவே அதீத அக்கறையும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அந்த அளவு கடந்த அக்கறையும் கட்டுப்பாடுகளும் பல சமயங்களில் அவர்களின் வாழ்க்கைக்கே உலை வைத்து விடுகின்றன என்பதை உணர மறுக்கின்றனர் ஒருசில பெற்றோர்கள்.

எங்கு கட்டுப்பாடுகள் அதிகப்படுத்தப்படுகின்றதோ, அங்கே தான் தவறான நடத்தைகளும் இடம்பெற வித்திடப்படுகிறது என்பது இலை மறைகாய் உண்மை. பொதுவாக பெண் பிள்ளைகளைப் பெற்று அவர்களை ஒரு நிலைக்கு ஆளாக்கிய பின் திருமணம் செய்து வைக்கின்றனர். இங்கே தான் பிரச்சினை ஆரம்பமாகின்றது.

அதாவது பெண்ணை திருமணம் செய்து கொடுத்ததன் பின்னர் அவள் தமக்கு மட்டும் மகள் அல்ல. அவள் இன்னொருவனுக்கு மனைவியாக அந்த வீட்டுக்கு மருமகளாக, மைத்துனியாக, அண்ணியாக, அத்தையாக. .இப்படிப் பல வடிவங்களில் வாழ நேர்கிறது என்பதை அவளது பெற்றோர் உணர வேண்டியுள்ளது.



ஆனால் பெண் பிள்ளைகளைப் பெற்றவர்கள் இதனைச் சில சமயங்களில் உணர மறுத்து எப்போதும் தங்களது மகள் தங்களுடனேயே இருக்க வேண்டும், தங்கள் சொற்படியே நடக்க வேண்டும் என நினைக்கிறார்கள். சில சமயங்களில் அந்தப் பெண்ணானவள் தான் புகுந்த வீட்டிலிருக்கும் போது பெற்றவர்கள் அவளை ஏதேனும் விசேட சாப்பாடோ நிகழ்ச்சிகளுக்கோ கூப்பிட்டால் வரமுடியாத நிலை ஏற்படலாம். ஆனால் அதைப் புரிந்து கொள்ளாத சில பெற்றோர்கள் மகளைப் பார்த்து 'நீ மாறிவிட்டாய் இவ்வளவு நாளும் பெத்து வளர்த்த எங்களை மறந்து விட்டாய்' என சில கடும் சொற்களை வீசி விடுவார்கள். இதனால் அந்தப் பெண் மனமுடைந்து போவதுடன் சில சமயங்களில் தனது கணவர், புகுந்த வீட்டு உறவுகளுடன் முரண்பட நேரிடுகிறது. எங்கிருந்தாலும் தமது மகள் தானே அவளுக்கு என்ன பிரச்சினையோ என ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து புரிந்துணர்வு இருந்தால் பல திருமண உறவுகள் விவாகரத்தில் போய் முடியாது.

ஆனால் பெற்றோர்களோ இதை உணராமல் தங்களது மகள் தங்களை மறந்து விட்டதாகவும் அவளுக்குத் தங்கள் மேல் உள்ள பாசம் குறைந்து விட்டதாகவும் கருதி அம்பு போல் வார்த்தையை வெளியிட்டு வருகிறார்கள் இப்படிப் பல தடவைகள் இடம்பெறும் போது அந்தப் பெண்ணானவள் தான் புகுந்த வீட்டிலும் பிறந்த வீட்டிலும் நிம்மதி இல்லாமல் வாழ்க்கையை வாழ்கிறாள். இதுவே காலப்போக்கில் தொடர் கதையாக பெற்றோரின் வார்த்தைப் பிரயோக அழுத்தங்களும் பிறந்த வீட்டையும் புகுந்த வீட்டையும் சமாளிக்க முடியாத நிலையில் ஒரு கட்டத்தில் மனம் உடைந்து கணவனையும் அவனது குடும்பத்தினரையும் வெறுக்கப் பண்ணிவிடுகிறார்கள். பின்பு உறவுகளுக்கிடையில் விரிசல் ஏற்பட்டு பல மண முறிவுகள் ஏற்படுகின்றன. பின்பு வாழ வேண்டிய வயதிலேயே வாழா வெட்டியாக பெற்றோர் வீட்டுக்கே வருகிறார்கள். பெற்றோர்களே சிந்தியுங்கள். நீங்கள் ஆசைப்பட்டது இதற்குத்தானா? எல்லாப் பெண்களும் திருமணமானால் கணவன், அவனது உறவுகள் மேல் பாசம் வைப்பது தவறானதா? உங்கள் மகள் உங்களுக்கு மட்டும் சொந்தம், அவளை நீங்கள் மட்டுமே சொந்தம் கொண்டாட நினைத்தால் எதற்காக திருமணம் செய்து வைக்க நினைக்கிறீர்கள்? உங்கள் பெண் மகளாக இருந்து, இன்னொரு வீட்டுக்கு மருமகளாகி, பின் தாயாவது தான் உங்கள் பெண்ணுக்கு அழகு. அதை விடுத்து பாசம் பாசம் எனக் கூறி உங்கள் மகள் மீது அதீத அக்கறை காட்டுவதாக நினைத்து அவளது வாழ்வைப் பாழாக்காதீர்கள். நீங்கள் வாழ்ந்து முடித்தவர்கள். அவர்கள் இனிமேல்தான் வாழப்போகிறார்கள். எனவே சிந்தியுங்கள். உங்கள் பாசம் அவர்களுக்கு வினையாகக் கூடாது.

# பெண்களுக்கு பாதுகாப்பானதா இந்த உலகம்?

சோபனா

ஒரு பெண் வன்முறைக்கு ஆளாகி விட்டால் போதும். உடனே ஆயிரக் கணக்கான கேள்விக்கணைகள் தொடுக்கப்படும். வன்முறைச் சம்பவம் எங்கு நடந்தது? அந்தப் பெண் யார்? என்ன உடை உடுத்தியிருந்தார்? அவருடன் இருந்தவர் யார்? சம்பவம் நடந்த நேரம் இரவா? பகலா? இதுபோன்ற கேள்விகள் எழுப்பப்படும். வன்முறைச் சம்பவம் ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் நிகழ்ந்தால் அங்கு இவளுக்குத் தனியாக என்ன வேலை? என்ற கேள்வி வேறு. பொருளாதாரத்தில் பின்தங்கியவராக அந்தப் பெண் இருந்தால் அவர் ஒழுக்கமானவராக இருக்க மாட்டார் என்ற தீர்மானம் உடனே நிறைவேறி விடும்.

நிகழ்வின் போது உடன் இருந்தவன் ஆண் நண்பனோ, காதலனோ என்றால் கண்டவனோடு சுற்றினால் இப்படித்தான் நடக்கும் என்ற விமர்சனமும் நிச்சயம் உண்டு. இரவு நேரத்தில் நடந்தது என்றால், நேரம் கெட்ட நேரத்தில் இவளுக்கு வெளியில் என்ன வேலை என்ற கேள்வியும் கேட்கப்படும்.

இங்கு நாம், எமது நாட்டின் நாகரிகம், பண்பாடு, பெண்ணைக் கடவுளாக, தாயாகப் போற்றும் வாழ்க்கை முறை, ஒருவனுக்கு ஒருத்தி என்ற அறநெறி, கற்பு என்னும் கண்ணியம் இவை அனைத்தையும் கேள்விக்கு உள்ளாக்க வேண்டுமா?

எமது வீடுகளில் நாம் வளர்க்கும் ஆண்பிள்ளைகளின் இத்தகைய வன்முறைப்போக்கு எமக்குக் கவலை தர வேண்டும். இதற்கான காரணங்களை நாம் தேட வேண்டும். அவற்றை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

இதற்கு மாறாக, பெண்கள் இரவு வேளைகளில் வெளியே செல்லக் கூடாது. தக்க துணையின்றி தனியே செல்லக் கூடாது. சரியான உடைகளை உடுத்த வேண்டும். கண்டிப்பாகப் பெண்கள் கைபேசியைப் பயன்படுத்தக் கூடாது என்ற கட்டுப்பாடுகளை, விதிப்பதே நடைமுறையில் உள்ளது. இத்தகைய கட்டுப்பாடுகள் பெண் கல்வி, வேலைவாய்ப்புகள், பெண்ணுரிமை, சுதந்திரம் என அனைத்தையும் மறுக்கும். மேலும், இந்த அணுகுமுறை இந்தப் பிரச்சினைக்குப் பெண்கள் தான் காரணம் என்ற மாயையை உருவாக்கி, வன்முறையில் ஈடுபட்ட கயவர்கள், அதற்கான காரணங்கள் குறித்த ஆய்வையும் தடுக்கிறது.

சமூக சிந்தனையுள்ள ஒவ்வொருவரும், ஆண் ஏன் தனியாகவோ, குழுவாகவோ வன்முறையில் ஈடுபடுகிறான்? பெண்கள் மீதான பாலியல் வன்முறையில் ஒரு பெண்ணின் உடலைக் கடந்து அவளின் தன்னம்பிக்கை, சுதந்திரம், ஆளுமையென அனைத்தையும் அவன் சிதைக்கக் காரணம் என்ன? ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் சமுதாயத்தில், ஆணுக்கு எங்ஙனம் பெண் எதிரியாகிப் போனாள்? ஒரு பெண் குழந்தையைச் சிதைக்கும் வகையில் ஆணினது வக்கிரம் அதிகரித்து வருவது ஏன்? போன்ற கேள்விகளை எழுப்புவதும் அதற்கான விடைகளைத் தேடுவதுமே வன்முறையற்ற வாழ்வுக்கு உதவும்.

இந்தச் சமுதாயத்தில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து வாழ்ந்த போதிலும், பாகுபாடு இன்றி சமமாக வாழ்வது இல்லை.:. பெண், ஆணுக்கு நிகராகக் கல்வி கற்று, சரிசமமாக வேலை செய்வது, உடை உடுத் துவது, வாகனங்களை ஓட்டுவது, இரவில் நடமாடுவது என்பதெல்லாம் ஆணை எரிச்சல் அடையச் செய்கிறது. காலாகாலமாகத் தனக்கு அடிமைப்பட்டு ஏவல் செய்தவள் இனத்தின் உரிமைவாழ்வு அவனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது. பெண் மீதான வன்முறைக்கு அவனைத் தூண்டுகிறது.



பாலியல் வக்கிரங்கள் நிகழ்வதற்கு ஊடகம், குறிப்பாக இணையம் பெரும் தூண்டுகோலாக இருக்கிறது. ஊடகங்களில் காட்சிப்படுத்தப்படும் பாலியல் வாழ்க்கை ஓர் அன்பின் வெளிப்பாடாக, கணவன் - மனைவி இடையே நிகழ்வதாக சித்திரிக்கப்படுவதில்லை. பெரும்பாலும் அவை இயற்கைக்கு முரண்பட்டதாக, மிகைப்படுத்தப்பட்டதாக, வன்முறையுடன் கூடியதாகச் சித்தி ரிக்கப்படு கின்றன. இதன் விளைவாக இது தனது இயல்பு வாழ்க்கையில் சாத்தியமல்ல எனத் தெரிந்தவன் இதைப் பரீட்சித்து பார்க்க எதிர்த்துப் போராட இயலாத, தனித்துவிடப்பட்ட பெண்களை, குழந்தைகளைத் தேர்வுசெய்கிறான். இந்தச் சூழலில் நமக்கு எழும் கேள்வி. ஊடகத்தில் காட்டப்படும் பல்வேறு சாகச நிகழ்வுகளை முயற்சி செய்ய அஞ்சுபவன், பெண்ணை மட்டும் வல்லுறவு கொள்வது ஏன்? காரணம் சாகச விளையாட்டுகளில் அவனது உயிருக்கு ஆபத்து இருக்கிறது. ஆனால், ஒரு பெண்ணின் வாழ்வையே சீர்குலைத்துவிட்டுச் சட்டத்தின் ஓட்டையூடாக அவன் எளிதாக தப்பி சுதந்திரமாக் நடமாட முடியும்.

இந்தநிலை மாற, சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும். தண்டனைக்கான வயது வரம்புகள் நீக்கப்பட வேண்டும். ஒரு குற்றவாளிகூடத் தப்பி விடாதபடி காவல்துறையும், நீதித்துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். குற்றங்களை வெளியில் வந்து பதிவு செய்யவும், குற்றவாளிகளை கண்டுபிடிக்க உதவவும், பெண்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஆண்-பெண் பாகுபாடுகள் களையப்பட்டு பாலின சமத்துவத்திற்கான முனைப்புகள் வீடு, பாடசாலை, பணியிடம் என எங்கும் தொடங்கப்பட வேண்டும். ஆண் குழந்தைகள் வளர்ப்பிலும், அவர்களுக்கு அறிவுடன் அறநெறியைப் பயிற்றுவிப்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த உலகம் அனைவருக்கும் பாதுகாப்பானதாய், இனிதானதாய் இருக்க ஒவ்வொருவரும் பங்களிப்புச் செய்வோம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐரோப்பிய நீதிமன்றத் தீர்ப்பும் ரணிலுக்கிருந்த செல்வாக்கும்

மொட்டந்தலைக்கும் முழந்தாளுக்கும் முடிச்சுப் போடுவதென்பது சாதாரண விடயமல்ல. ஆனால் அரசியல்வாதிகள் அநாயாசமாக இதனைச் சாதித்து விடுவார்கள். ஒரு பொய்யை பல தடவைகளிலும் திரும்பத்திரும்ப சொல்வதென்பது இரண்டாவது உல கப் போர்க்காலத்தில் பிரபல்யமாகவிருந்த ஐரோப் பிய பிரமுகர் கோயபல்ஸ் என்பவரின் தத்துவம். அவ்வாறு பொய்யை தொடர்ந்து சொன்னால் அது மெய்யாகி விடும் என்பது அவருடைய கொள்கை.

பொய்யை நம்புகிறவர்கள் இருக்கும்வரை பொய் சொல்பவர்கள் இல்லாமல் போவதில்லை என்பது வும் நடைமுறையில் உள்ள சொல்வழக்குதான்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண் மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றிருந்ததின் விளைவாகத்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை லக்ஸம்பேர்க் கிலுள்ள ஐரோப்பியநீதிமன்றம்விலக்கிக்கொள்ளும் படியாகதீர்ப்பு வழங்கியிருப்பதாக தென்னிலங்கையில் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பரப்புரைகளை பார்க்கும்போது இந்தச் சொல் வழக்குகளும் பழ மொழி களும் இயற் கையாகவே எவருக்கும் குறிப்பாக தமிழ் மக்களுக்கு நினைவுக்கு வருவதாக இருக்கும்.

ரணில் விக்கிரமசிங்க புலிகளோடு போர் ஓய்வு ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டார் என்பது சரி தான். ஆனால் தமிழீழப் புலிகளைக் காப்பற்றும் வகையில் அவர் எப்போதாகிலும் செயற்பட்டார் என்று எவரும் குறிப்பிட முடியாது. தமிழீழ விடு தலைப் புலிகளுக்கு எதிராக அவர் மேற்கொண்ட நடவடிக் கைகளும் அதனால் போர் ஓய்வு ஒப் பந்தமே முறியும் நிலைக்குச் சென்றதும் வரலாற் றுச் சம்பவங்கள். அப்படி இருக்க தமிழீழ விடு தலைப்புலிகள் மீதான தடையை விலக்கும்படி ஐரோப்பிய ஒன்றியத்தின் நீதிமன்றத்தின் மீது அவர் செல்வாக்கு செலுத்தினார் என்பதும் அதனை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்றும் கூறு வது அபத்தம். ஜோஹனர்ஸ் பேர்க்கில் இடம் பெற்ற கொன்சர்வேடிவ் கட்சி மாநாட்டில் கலந்துகொள்ள ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்த காலகட்டத்தில் அங்குள்ள சில தமிழ் அமைப் புகளுடன் அவர் பேச்சு நடத்தினார் என்று செய்தி கள் வந்திருந்தன. அந்த சமயத்தில் வடக்குக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனை புலிகள் அமைப்புடன் ரணில் விக்கிரம சிங்க பேச்சு நடத்தியுள்ளார் என்று குறிப்பிட்டு விமர்சித்திருந் தார். இந்த விடயம் ஜனாதிபதிக்குக் கிடைத்திருக்கும் ஒரு துருப்புச்சீட்டு என்று நாமும் இந்தப் பத்திகளில் குறிப்பிட்டிருந்தோம். அது தான் இப்போது நடக் கின்றது. ஜனாதிபதித் தேர்தலை ஜனவரியில் நடத்து வதற்கு தீர்மானித் துள்ள ஜனாதிபதிக்கு கடந்த தேர்தல் காலத்தில் புலிகளை ஒழித்துவென்றவர் என்ற வகையில் இருந்து வந்த செல்வாக்கு தேய்ந்து வரும் இன்றைய நிலையில் மீண்டும் புலிபூச்சாண்டியைக் காட்டி தென் னிலங்கை மக்களை கிலி கொள்ளச் செய்ய இது உதவும் என்ற அவர் கருதுவதுபோல் தெரி கின்றது. புலிகளுக்கு துணைபோகிறவர் ரணில் விக்கிரம சிங்க என்பதாகக் காட்டுவது இப்பொழுதே ஆரம்பமாகி விட்டது. கொழும்பில் பல இடங் களில் இது தொடர் பான சுவரொட்டிகளை அரசு சார்பு பத்திரிகை யொன்றின் பெயரால் ஒட்டப் பட்டி ருப்பதும் இதனைப் புலப்படுத்துகின்றது.

புலிகள் மீதான தடையை நீக்கும்படி ஐரோப்பிய ஒன்றியம் தீர்ப்பு வழங்கியிருந்தாலும் அதனைச் செயற்படுத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்பட் டுள்ளது. இந்த இடைக்காலத்தில் புலிகள் மீதான தடையை எதிர்த்து அந்த நாடுகள் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முடியும். அப்படியான ஆதாரங்களை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வ்ழங்க இலங்கையும் தயாராய் இருக்கிறது. இந்தியா, அமெரிக்கா போன்று ஐரோப்பிய ஒன்றியத்தை சேராத நாடு களின் செயற்பாடு எப்படியிருக்கும் என்று இப் போது கூற முடியாது. போர் நடைபெற்ற காலத் தில் போர்க் குற்றங்களில் அரசதரப்பினரும் புலி களும் ஈடுபட்டு வந்திருந்தார்கள் என்பது ஐ.நா. நிபுணர்குழுவின் கண்டுபிடிப்பு. போர் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்ததன் பின்னர் புலிகள் ஆயுதப் போராட்டம் எதிலும் ஈடுபடவில்லை. ஜனநாயக முறையிலேயே செயற்பட விரும்புகிறார்கள் என்று அவர்கள் தரப் பிலான வாதம் லக்சம் பேர்க் நீதிமன் றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இதே நிலைப்பாட்டை ஏனைய நாடுகளும் ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் இலங்கை தரப்பில் முன் வைக்கப்பட விருக்கும் ஆதாரங்கள் புஸ்வாண மாகிவிடும். இலங்கையில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் அனைத்துமே கண்காணிப்பு கருவி கள் செயற்படுவதுபோல உலக நாடுகளால் கவ னிக் கப்பட்டு வருகின்றன. இது அரசு அறியாத விடயமல்ல.

# ஆட்சி மாற்றம்

## மக்கள் விழித்தெழும் நேரம் வந்துவிட்டது

சேரலாதன்



இலங்கை அரசின் செயற்பாடுகள் குழப்பங்கள் நிறைந் தனவாகக் காணப்படுகின்றன. அரசின் அதிகார மையத் தில் தோன்றியுள்ள பிளவுகளும், புரிந்துணர்வு இல்லா மையும் இதற்கான முக்கிய காரணங்களெனக் கூற முடியும்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்துடன் போர் ஓய்ந்து விட்டது. விடுதலைப் புலிகள் முற்றாகவே ஒழிக்கப்பட்டு விட்டனர். பயங்கரவாத அச்சுறுத்தல் அங்கு அறவே கிடையாது. அங்கு பூரண அமைதி நிலவுவதால் அபி விருத்தியில் மட்டுமே இனிமேல் கவனம் செலுத்தப்படும் என்றெல்லாம் கூறிய ஆளும் தரப்பினர் தற்போது புதுப்புதுக் கதைகளைக் கூறத் தலைப்பட்டு விட்டனர்.

வடபகுதியில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கு வதைத் தவிர்க்கும் பொருட்டு வெளிநாட்டவர்கள் அங்கு செல்வதில் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக அரசு கூறிவருகின்றது. இவர்கள் ஓமந்தைக்கு அப்பால் செல்ல வேண்டுமாயின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளமை போர்க் காலத்தை நினைவூட்டுகின்றது. அதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வட பகுதிக்கான வருகைக்குப் பின்னரும் இத்தகைய கெடுபிடிகள் நீடிக்கின்றமை அரசியல் உள்நோக்கத்தையே வெளிப்படுத்துகின்றன.

பொதுவாகவே பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது துயரங்களைப் பிறரிடம் கூறுவதை அரசு விரும்புவ தில்லை. காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரிக்கும் ஆணைக்குழுவின் முன்னால் பாதிக்கப்பட்டவர்கள் தமது முறைப்பாடுகளைச் சுயாதீனமாகப் பதிவு செய்ய முடியாத நிலையில் இராணுவத்தினரும், இராணுவப் புலனாய் வாளர்களும் இடையூறு விளைவித்தமை தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அரசின் ஆசீர்வாதம் கிடைக்காது விட்டால் இது இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் எழுந்திருக்க மாட்டாது. அரசே ஆணைக் குழு ஒன்றை அமைத்துவிட்டு அதன் விசாரணைகளைக் குழப்புவது இந்த நாட்டின் பெருமைக்கு மற்றுமொரு சான்றாகும். சர்வதேச விசாரணைகள் வேண்டவே வேண்டாமென அடம்பிடித்துக் கூறும் இலங்கை அரசு உள்நாட்டில் இடம்பெறும் விசாரணைகளையாவது நீதியாகவும். நியாயமாகவும் நடத்திக் காண்பிக்க வேண்டும். இதை விடுத்து அதிலும் தவறுகளை மேன் மேலும் செய்து கொண்டிருப்பது அதன் நம்பகமில்லாத தன்மையை வெளி உலகுக்குக் காட்டிவிடும்.

காணாமற் போன தனது மகனைத் தேடி அலைந்த குற்றத் துக்காகவும், இது தொடர்பாகத் தனது ஆதங்கத்தைத் தெரிவித்ததற்காகவும் புதுக் கதைகள் சோடிக்கப்பட்டு ஜெயக்குமாரி என்ற அபலைத்தாய் பூசா தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டு வெகு நாள்களாகிவிட்டன. பருவமடைந்து சில மணித்தியாலங்களே ஆன அவரின் ஒன்றுமறியாத இளவயதுப் பெண் குழந்தை உறவுகளின் ஏக்கத்தைச் சுமந்தவாறு காப்பகம் ஒன்றில் வாடி வதங்கிக் கொண்டிருக்கின்றது. மேலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பொறுப்புக்களை வகித்து அரசுக்கும், படையினருக்கும் எதிராகச் செயற்பட்டவர்கள் அமைச்சர் பதவி உட்பட முக்கிய பொறுப்புகளில் அமர்ந்து உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வர, பலர் புலிகளுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், பலர் வருடக் கணக்காகச் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றனர். புலி உறுப்பி னர்களே புனர்வாழ்வு வழங்கப்பட்டு சுதந்திரமாகத் திரிய இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது எந்த வகையில் நியாயம் என்பது புரியவில்லை.

அதேசமயம், வடபகுதி மக்களால் பெரும் எதிர்பார்ப்பு களுக்கு மத்தியில் அமோக ஆதரவுடன் அமைக்கப்பட்ட வடமாகாண சபை செய்வது எதுவென்பதைத் தீர்மானிக்க முடியாத நிலையில் வெறுமனே காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றது.



மாகாண சபையின் முதலமைச்சர் எதற்கெடுத்தாலும் ஆளுநரிடம் கையேந்தி நிற்க வேண்டிய பரிதாப நிலை தொடர்கின்றது. மாகாண சபையின் பிரதம செயலாளர் உட்பட முக்கிய அதிகாரிகள், முதலமைச்சர் உட்பட அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர் ஆகி யோரை ஒரு பொருட்டாக மதிப்பதாகத் தெரியவில்லை. ஆளுநரின் உத்தரவுக்காகவே இவர்கள் காத்திருக் கின்றனர். இந்த நிலை தொடருமானால் முதலமைச்சர் தலைமையிலான மாகாண சபை நிர்வாகம் தானாகவே செயலிழந்து விடுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

இந்த நிலையில் அண்மையில் வடபகுதிக்கு வருகை தந்த ஜனாதிபதி, முதலமைச்சர் தலைமையிலான மாகாண சபை மீது கடும் விமர்சனங்களை வைத்துள் ளார். ஒரு கட்டத்தில் 'வைக்கோல் பட்டடை நாய்க ளென்றும்' அவர் இழிவாகக் கூறியுள்ளார். இந்த நாட்டின் அதியுயர் பதவி வகிக்கும். ஜனாதிபதி இவ்வாறு கூறுவது அவரது பதவிக்கே இழுக்கானதொன்றாகும். முதலமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் தற் போதுள்ள ஆளுநரை மாற்றி சிவில் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை அந்தப் பதவிக்கு நியமித்தல், முதலமைச்சருடன் உடன்படாத பிரதம செயலாளரை மாற்றுதல் ஆகிய உறுதி மொழிகளை வழங்கிய ஜனாதிபதி இதுவரை அவற்றை நிறைவேற்றவில் லையென முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார். மேலும் மாகாண சபைக்குத் தேவையான நிதிகூட அரசினால் ஒதுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக் கப்பட்டுள்ளது. வழங்க வேண்டியவற்றை வழங்காம லும், நிறைவேற்ற வேண்டியவற்றை நிறைவேற் றாமலும் இருந்துவிட்டு வெறுமனே குருட்டாம் போக்கில் முதலமைச்சரையும், மாகாண சபையையும் விமர்சித்துக் கொண்டிருப்பதால் பயனொன்றும் கிடைக்கப்போவதில்லை.

இந்த நிலையில் 1980ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் திலிருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்களை மீண்டும் குடியமர்த்தப் போவதாக யாழ்ப்பாணத்தில் வைத்து ஜனாதிபதி தெரிவித்துள்ளமை இங்குள்ள தமிழ் மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தாமல் விடவில்லை. ஏற்கனவே மறைமுகமான வகையில் தமிழர் பிர தேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வரும் நிலையில் ஜனாதிபதியின் இந்தப் பகிரங்க அறிவிப்பு எங்குபோய் முடியுமோ என்று தமிழ் மக்கள் அச்சமடைவதில் நியாயம் இருக்கவே செய்கின்றது.

பெரும் பிரசாரங்களுடன் வடபகுதிக்கு வருகை தந்த ஜனாதிபதி இங்குள்ள மக்களின் அடிப்படைப் பிரச்சி னைகளைக் கேட்டறிவதில் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. தமது வருகையின் நோக்கத்தை நிறைவு செய்வதிலேயே அவர் முற்று முழுதாக ஈடுபட் டதைக் காண முடிந்தது.

ஜனாதிபதியின் வடபகுதிக்கான வருகை ஜனாதிபதித் தேர்தலை மையமாகக் கொண்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. ஆனால் தமிழ் மக்களின் மனங் களைக் கவர வேண்டுமானால் ஆளும் தரப்பினர் செய்ய வேண்டியன நிறையவே உள்ளன.

ஒருநாட்டிலே ஒரே ஆட்சி நீடிப்பது நல்லதல்ல. இதனால் அதிகார துஷ்பிரயோகமும், ஊழலும் அதிகரித்து மக்கள் துன்பங்களை அனுபவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையிலும் ஆட்சிமாற்றமொன்று ஏற்பட வேண் டிய அவசியம் இப்போது எழுந்துள்ளது. இதனைத் தீர்மானிக்கும் சக்தியாக மக்களே உள்ளனர். இடம் பெறப்போகும் தேர்தல்களை அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நிறைவேற்று அதிகாரமும், குடும்ப ஆட்சியும் இங்கு தொடர்ந்து நீடிக்குமாயின் மக்களின் ஜனநாயக உரிமைகள் முற்றாகவே துடைத்தெறியப்பட்டுவிடும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

ராஜராஜன்

# எமது தேவை சுத்தமான குடிதண்ணீர்



யாழ். குடாநாட்டு மக்கள் குடிதண்ணீர் தொடர்பான பெரும் நெருக்கடியைத் தற்போது எதிர்கொண்டு வருகின்றனர். ஏற்கனவே இங்கு காணப்படும் நிலத்தடி நீர் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனம் மற்றும் மலசல கூடக்கழிவுகள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ள நிலையில், சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து நிலத்தின் கீழ் வெளியேற்றப்பட்ட கழிவு ஒயில் காரணமாக அதன் சுற்றாடலில் மட்டுமல்ல அருகில் அமைந்துள்ள மேலும் பல இடங்களிலும் கிணற்றுநீர் ஒயில் கலந்த நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குடாநாட்டில் நீர்வளத்தை மனிதர்களே நாசப்படுத்திய செயலை எந்த விதத்திலும் மன்னிக்க முடியாது. இதற்குப் பரிகாரம் தேடும் பொருட்டு கிளிநொச்சியின் இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். குடாநாட்டுக்கு குடி தண்ணீரைக் கொண்டு வரும் திட்டமும் கிளிநொச்சி விவசாயிகள் மற்றும் அங்குள்ள அரசியல்வாதிகளின் பலத்த எதிர்ப்புக் காரணமாக இழுபறி நிலையில் காணப்படுகின்றது. கள நிலைமைக்ளை ஆராய்ந்து பார்க்கும்போது இரணைமடு நீர் யாழ்ப்பாணத்தை எட்டிப் பார்க்குமென்ற நம்பிக்கை கிடையாது என்றுதான் கூற வேண்டும். குடிதண்ணீர் இல்லாமல் உயிரினங்கள் எவையுமே உயிர் வாழ முடியாது. மனிதர்கள், விலங்குகள், பறவைகள், மரங்கள் உட்பட அனைத்து உயிரினங்களுக்கும் இது பொருந்தும். மனிதர்களுக்கு ஏற்படுகின்ற நோய்கள் பலவற்றுக்கும் சுத்தமில்லாத குடிதண்ணீரே காரணமென மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். நீரில் காணப்படும் கண்ணுக்குத் தெரியாத தீங்கு விளைவிக்கும் கிருமிகள் மனித உடலில் பரவி நோய்களை ஏற்படுத்தி விடுகின்றன. இதைத் தடுக்க வேண்டுமாயின் சுத்தமான குடிதண்ணீரை நாம் அருந்துவது அவசியமாகும்.



வசதி படைத்த சிலர் போத்தல்களில் அடைக்கப்பட்டு விற்பனையாகும் குடிதண்ணீரை உபயோகிக்கின்றனர். ஆனால் இதிலும் முழுமையான நம்பிக்கையை வைத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் போத்தலில் குடிதண்ணீரை அடைத்து விற்பனை செய்யும் சில நிறுவனங்கள் உரிய விதி முறைகளைப் பின்பற்றுவதில்லையென குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. எனவே சுத்தமான குடிதண்ணீரை நாம் ஒவ்வொருவருமே தயாரித்துக் கொள்ள வேண்டிய அவசியம் தற்போது எழுந்துள்ளது.

தண்ணீரை நன்கு கொதிக்க வைத்து ஆறிய பின்னர் அதனை அருந்துவது இலகுவான தொரு பொறிமுறையாகும். மேலும் தண்ணீரை வடிகட்டும் இயந்திரங்களையும் பயன்படுத்த முடியும். ஆனால் இதற்கு அதிக செலவாகும் என்பதால் அனைவராலும் இந்த முறையைப் பின்பற்ற முடியாது. இரவு வேளையில் ஒரு பெரிய பாத்திரத்தில் நீரை இட்டு அதனை நன்கு கொதிக்க வைத்தல் வேண்டும். காலையில் அது நன்கு ஆறிய நிலையில் காணப்படும் போது அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அலுவலகம் செல்வோரும் இந்த நீரை எடுத்துச் சென்று பயன்படுத்த முடியும்.

இரவு வேளையில் ஒரு பெரிய பாத்திரத்தில் நீரை இட்டு அதனை நன்கு கொதிக்க வைத்தல் வேண்டும். காலையில் அது நன்கு ஆறிய நிலையில் காணப்படும் போது அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அலுவலகம் செல்வோரும் இந்த நீரை எடுத்துச் சென்று பயன்படுத்த முடியும். சிலர் நீரின் தரம் தொடர்பாக ஆராய்ந்து பார்க்காது கண்ட கண்ட இடங்களிலும் கிடைக்கும் நீரை அருந்தி விடுகின்றனர். குறிப்பாக உணவகங்களில் வழங்கப்படும் நீரை இவர்கள் தாராளமாக அருந்துகின்றனர்.

சிலர் நீரின் தரம் தொடர்பாக ஆராய்ந்து பார்க்காது கண்ட கண்ட இடங்களிலும் கிடைக்கும் நீரை அருந்தி விடுகின்றனர். குறிப்பாக உணவகங்களில் வழங்கப்படும் நீரை இவர்கள் தாராளமாக அருந்துகின்றனர். இதன் தரத்தை உறுதி செய்து கொள்வதற்கான வாய்ப்பும் கிடைப்பதில்லை.

சில பகுதியில் வாழும் மக்கள் அங்குள்ள குளம், குட்டைகளில் தேங்கி நிற்கும் நீரை அருந்துகின்றனர். இது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். இத்தகைய மக்கள் வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் ஆகிய நோய்களுக்கு அடிக்கடி ஆளாவதைக் காண முடிகின்றது.

தற்போது மாரிகாலம் ஆரம்பித்துவிட்டது. இதன்போது நீர் மாசுபடுவதற்கான வாய்ப்புக்களும் அதிகமாக உள்ளன. குறிப்பாக வெள்ளநீர் நிலத்தின் அடியில் வடிந்து கிணற்ற நீருடன் கலப்பதால் அந்த நீர் மாசடைந்து விடுகின்றது. இதனால் எந்த வகையிலேனும் சுத்திகரித்த பின்னரே கிணற்று நீரை அருந்துதல் வேண்டும்.

மேலும் பிளாஸ்ரிக் போத்தல்களில் நீரைச் சேமித்து வைத்து அருந்தும் பழக்கமும் எம்மில் பலரிடம் காணப்படுகின்றது. அதிக காலம் இத்தகைய போத்தல்களைப் பயன்படுத்துவதும் உடலுக்குத் தீமையை விளைவிக்கும். ஆகவே பிளாஸ்ரிக் போத்தல்களைப் பயன்படுத்துவதாயினும் அவற்றை அடிக் கடி மாற்றிக்கொள்ள வேண்டும். மேலும் ஒருவர் உபயோகிக்கும் போத்தலை வேறொருவர் பயன்படுத்துவதும் தவறான விடயமாகும்.

உலகிலேயே தரம்மிக்க குடிதண்ணீர் கனடா நாட்டில் கிடைப்பதாகக் கூறுவார்கள். ஆனால் அந்த நிலை எமது நாட்டில் ஏற்படுமென எதிர்பார்க்க முடியாது. இயற்கைக்கு மாறான இரசாயனப் பாவனையே இதற்கான காரணமாகும்.

இயற்கை எமக்கு அள்ளித் தரும் குறைவற்ற செல்வம் நீராகும். இயற்கை அன்னை நீரை மாசு அற்ற வகையிலேயே தருகின்றாள். ஆனால் நாம்தான் அதனைப் பாழ்படுத்தி விடுகின்றோம். இனியாவது சுத்தமான குடிதண்ணீரை அருந்தி நலமுடன் வாழ நாம் முயற்சி செய்வோம்.

---

**வாசகர் திருமுகம்**

## மந்திகையில் அவலப்படும் பஸ் பயணிகள்

மந்திகையில் பஸ் தரிப்பிட நிலையம் அமைந்துள்ள இடத்துக்கு முன்பாக மஞ்சள் கடவை இடப்பட்டதால் பஸ்களை நிறுத்துவதற்கான அறிவிப்புப் பலகை சற்று தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இதனால் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் வழியில் உள்ள மந்திகை பஸ் தரிப்பிட நிலையத்தைப் பயன்படுத்தும் நோயாளர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள், உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலதரப்பட்ட பயணிகளும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். குறிப்பாக மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களும், சிகிச்சை பெற்றுச்செல்லும் நோயாளர்களும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர். தற்போது பஸ் நிறுத்தப்படும் இடத்தில் ஒரு மரம் கூட இல்லை. இதனால் வெயிலிலும் மழையிலும் பயணிகள் அவதிக்குஉள்ளாகின்றனர்.

பருத்தித்துறையில் இருந்து வரும் இ.போ.ச.பஸ்கள் மந்திகை பஸ் தரிப்பிடத்தில் நிற் காது புதிய தரிப்பிடத்தில் நிற்பதால் பழைய தரிப்பு நிலையத்தில் காத்திருக்கும் பயணிகள் அங்கிருந்து ஓட்டமும் நடையுமாகச் சென்று பஸ்ஸைப் பிடிக்கின்றனர். சில சாரதிகள் பழைய பஸ் தரிப்பிடத்திலும் சில சாரதிகள் புதிய பஸ் தரிப்பிடத்திலும் பயணிகளை ஏற்றிச் செல்கின்றனர். இதனால் எங்கு பஸ் நிறுத்தப்படும் எனத் தெரியாமல் பயணிகள் சிரமங்களுக்கு ஆளாகின்றனர். அண்மையில் பழைய பஸ்தரிப்பிடத்துக்கு முன்பாகநின்ற பயணிகளை ஏற்றாமல் புதிய பஸ் தரிப்பிடத்தில் பஸ் நிறுத்தப்பட்டது. பயணிகள் பஸ்ஸை பிடிப்பதற்கு ஓடிய போதிலும் சாரதி அவர்களை ஏற்றாது பஸ்ஸை எடுத்துச் சென்றார். அந்தப் பயணிகளில் கர்ப்பிணித் தாயொரு வரும் அடங்கியிருந்தார்.

இந்த பஸ் தரிப்பிடத்தில் அமைந்துள்ள மஞ்சள் கடவையை மாற்றி அமைத்தால் தமக்குச் சிரமம் ஏற்படாதெனப் பயணிகள் கருதுகிறார்கள். அல்லது புதிய இடத்தில் பஸ் தரிப்பிடத்துக்கான கட்டடத்தை அமைக்க வேண்டும். இந்த அவல நிலையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுப்பார்களா?

*சுப்புக்குட்டி, மந்திகை*

## மாணவர்களே சற்றுச் சிந்தியுங்கள்

அண்மையில் நான் அரச பஸ் ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது பஸ் இடைக்கிடை தனது பயணத்தை நிறுத்தி தரிப்பிடங்களில் நின்றவர்களை ஏற்றிக் கொண்டு சென்றது. அதைப் போலவே ஓர் இடத்தில் யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவ பட்டாளங்களும் ஏறிக் கொண்டனர்.

பஸ் புறப்பட்ட சிறிது நேரத்தில் அந்த மாணவ பட்டாளங்கள் ஏதோ உல்லாசப் பயணம் மேற்கொள்வது போல பஸ்ஸின் நடத்துநர் நிற்கும் இடத்தில் நின்றார்கள். நின்றது மட்டுமல்லாமல் பஸ்ஸின் முன் வாசலில் நின்ற மாணவர்கள், பஸ்ஸின் பின்வாசலில் நிற்கும் மாணவர்களுடன் கதைத்து, கைகொட்டி கூச்சலிட்டு இங்கிருந்து கையசைப்பதும் அதற்குப் பதிலாக அவர்கள் அங்கிருந்து கையசைப்பதும் விசிலடிப்பதுமாக இருந்தனர். இவர்களின் கேளிக்கைகள் அதிகமானதால் இதை அவதானித்த பஸ்ஸின் சாரதி "டேய் உள்ளுக்க நில்லுங்கோடா, மேலே ஏறுங்கோ, கண்ணாடி மறைக்குதடா பின்னால வாற வாகனங்களை தெரியேல" எனப் பலமுறை எச்சரித்தும் அவர்கள் கேட்டுக் கொண்டதாகத் தெரிய வில்லை. அது மட்டுமல்லாமல் பஸ்ஸில் இறங்குவதற்காக அடிக்கப்படும் மணியை கூட அவர்கள் விளையாட்டாக அடிக்கடி அடித்துக்கொண்டு தமது கேளிக்கையைத் தொடர்ந்து கொண்டிருந்தனர். அப்பொழுது தமது தரிப் பிடம் வந்ததும் இறங்குவதற்காக ஒரு வயோதிப மூதாட்டி மணியை அடித்தும் பஸ் நிறுத்தவில்லை. காரணம் பஸ் சாரதி அது, பாடசாலை மாணவர்கள் தான் விளையாட்டாக மணியை அடிக்கிறார்கள் என நினைத்து பஸ்ஸை நிறுத்தவில்லை. பின்பு ஒருவாறு சற்றுத்தள்ளி பஸ் நிறுத்தப்பட்டது.

மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவது நல்லொழுக்கங்களைப் பெற்று கல்வி கற்பதற்கே ஆகும். ஆனால் அவர்கள் செய்வதைப் பார்த்த பலரும் முணு முணுப்பதை அவதானிக்க முடிந்தது. மாணவர்கள் எனப்படுவோர் வளரும் நாளைய சமுதாயமே. அவர்களே மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்வது எந்த வகையில் நியாயம் என்பதுதான் தெரியவில்லை.

*சுகிபாலா, யாழ்ப்பாணம்.*

## உத்தரப் பிரதேசத்தில் கலவரம்

### மூன்று பேர் கைது

உத்தரப்பிரதேசத்தில் ஜாட்-தலித் இனத்தவர்கள் இடையே நடைபெற்ற கலவரம் தொடர்பாக 3 பேர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

உத்தரப்பிரதேச மாநிலம் முசாபர்நகர் மாவட்டம் நியூ மாண்டி பொலிஸ்துறை சரகத்துக்குள்பட்ட பகுதியில் ஏராளமான தலித், ஜாட் இன மக்கள் வசித்து வருகிறார்கள். அங்கு கடந்த 3ஆம் திகதி இந்த இரு இனத்தினரிடையே ஏற்பட்ட பிரச்சினையைத் தீர்க்க ஊர் பஞ்சாயத்து கூடி விவாதித்தது. அப்போது இரு தரப்புக்கும் ஏற்பட்ட மோதலில் ஒருவரையொருவர் கல் வீசித்தாக்கிக் கொண்டனர். துப்பாக்கியாலும் சுட்டனர். இதில் தலித் இனத்தைச் சேர்ந்த சிறுவன் உட்பட 3 பேர் காயமடைந்தனர்.

அதையடுத்து, தலித் இனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்யக்கோரி போராட்டம் நடத்தினார்கள்.

இந்தநிலையில், இந்தக் கலவரம் தொடர்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை 3 பேர் கைது செய்யப்பட்டனர். (வ)

## கூட்டுப் பயிற்சியில் இந்திய-சீன வீரர்கள்



டில்லி, ஒக்.20

இந்திய எல்லைக்குள் சீன ராணுவம் அத்துமீறி நுழைந்த பிரச்சினை ஒய்ந்துள்ள நிலையில், இரு நாட்டு ராணுவத்தினரும், தீவிரவாத தாக்குதலை எதிர்கொள்வது குறித்த கூட்டுப் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர். இந்த கூட்டுப் பயிற்சி அடுத்த மாதம் புனேயில் நடைபெறவுள்ளது.

இது இரு தரப்பு உறவை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த மாதம் சீன ஜனாதிபதி ஜின்பிங் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டார். அந்த நேரத்தில் இந்தியாவின் சுமர் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த சீன இராணுவம் அங்கு முகாமிட்டது. இது தொடர்பாக சீன ஜனாதிபதியிடம் பிரதமர் நரேந்திர மோடி அதிருப்தியை வெளிப்படுத்தினார். சீன ஜனாதிபதி உத்தரவிட்டும், சீன ராணுவத்தினர் தொடர்ந்து முகாமிட்டு தங்கியிருந்தனர்.

அதைத்தொடர்ந்து இரு தரப்பும் பேச்சில் ஈடுபட்டன. பின்னர் சீன இராணுவத்தினர் இந்திய எல்லையில் இருந்து விலகினர். இந்தியா, சீனா இடையே எல்லைப் பிரச்சினையும் இருந்து வருகிறது. சீன ஜனாதிபதியின் பயணத்தின்போது, பேச்சு மூலம் இதற்குத் தீர்வு காணப்படும் என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தநிலையில் தீவிரவாதிகளின் தாக்குதலை சமாளிப்பது குறித்து இந்திய மற்றும் சீன ராணுவத்தினர் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவது என்று முடிவு செய்யப்பட்டது. இந்திய-பாகிஸ்தான் எல்லையில் இந்த பயிற்சியை நடத்த இந்தியா விருப்பம் தெரிவித்தது. முதலில் பாகிஸ்தான் எல்லைக்கு அருகில் உள்ள ராஜஸ்தான் மாநிலத்தில் பயிற்சி நடத்த இந்தியா விருப்பம் தெரிவித்தது. அதை சீனா மறுத்தது. அதைத் தொடர்ந்து பாகிஸ்தான் எல்லைக்கு அருகில் உள்ள பஞ்சாப் மாநிலம் பதிண்டாவை இந்தியா தெரிவுசெய்தது. அதற்கும் சீனா மறுப்புத் தெரிவித்தது. தற்போது பாகிஸ்தான் ராணுவம் இந்திய எல்லை யில் தொடர்ந்து அத்துமீறி தாக்குதலை நடத்தி வருகிறது. அதனால் அந்தப்பகுதி யில் பயிற்சி நடத்த சீனா மறுத்தது. (வ)

# மறைமுக அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள தயாராகுங்கள்

## முப்படை தளபதிகளுக்குப் பிரதமர் மோடி உத்தரவு

டில்லி, ஒக்.20

முப்படைகளைச் சேர்ந்த தளபதிகளைச் பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன் தினம் முதன்முறையாக சந்தித்து, நாட்டின் பாதுகாப்பு குறித்து முக்கிய ஆலோசனை நடத்தினார். கூட்டத்தில் பேசிய மோடி, இந்தியாவுடன் எதிரி நாடுகள் நேரடியாகப் போர் தொடுப்பதற்கான வாய்ப்புகள் குறைவு என்றார். மறைமுக அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்குமாறு முப்படைகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த முதலாம் திகதியில் இருந்து, இந்திய வீரர்களையும், பொதுமக்களையும் குறிவைத்து பாகிஸ்தான் வீரர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் 8 பொது மக்கள் உயிரிழந்தனர்.

ஏராளமானோருக்கு காயம் ஏற்பட்டது. அதேசமயம், எல்லை விவகாரத்தில் சீனாவும் அவ்வப்போது இந்தியாவை சீண்டி வருகிறது.

சீன ஜனாதிபதி ஜின்பிங் இந்தியாவுக்கு வந்தபோது, அந்தநாட்டு வீரர்கள் இந்திய எல்லைக்குள் ஊடுருவினர். அவர்களைப் பின்வாங்குமாறு, சீன ஜனாதிபதி உத்தரவிட்டும் அவர்கள் பின்வாங்கவில்லை. அதன் பின்னர் நடைபெற்ற பல்வேறு பேச்சுக்கு பின்னரே, எல்லைக்குள் ஊடுருவிய சீன ராணுவம் பின்வாங்கியது.

இவ்வாறு எல்லையில், சீனாவும், பாகிஸ்தான் தொந்தரவு அளித்துவரும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, முதல்முறையாக முப்படையைச் சேர்ந்த தளபதிகளை நேற்று முன்தினம் சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் அருண் ஜெட்லி மற்றும் முப்படை தளபதிகள் மற்றும் 100 இற்கும் மேற்பட்ட தளபதிகள் பங்கேற்றனர். கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது:

இந்தியாவுடன் எதிரி நாடுகள் நேரடியாக, முழு வீச்சில் போர் புரிவதற்கான சாத்தியங்கள் குறைவு. ஆனால், மறைமுக அச்சுறுத்தல்கள் இந்தியாவுக்கு உள்ளன.



அவற்றை எதிர்கொள்ள நீங்கள் தயாராக இருக்க வேண்டும். தொழில்நுட்ப ரீதியிலான அச்சுறுத்தல்கள் எமக்கு பெரும் சவால்களை ஏற்படுத்தலாம். அச்சுறுத்தல்கள் எமக்கு தெரியும்படி இருக்கும். ஆனால், எதிரி யார் என்று தெரியாமல் மறைமுகமாக இருக்கலாம். சைபர்(இணைய) அச்சுறுத்தல்கள் எமக்குச் சவாலாக இருக்கும்.

நிலம், கடல், வானம் ஆகியவற்றை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது போல், விண்வெளியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும்சூழலும்நாளை ஏற்படலாம். அதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும். முப்படைகளை முழுவதுமாக பலப்படுத்துவதற்கு, தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கும், தனது இலக்குகளை எட்டுவதற்கும் இந்தியாவுக்கு பாதுகாப்பான, அமைதியான சூழல் தேவைப்படுகிறது. அதற்காக வெளிநாடுகளின் ஆதரவையும், பாதுகாப்பை பலப்படுத்தும் முயற்சியிலும் மத்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது. பொருளாதாரம், ராஜதந்திரம், பாதுகாப்பு கொள்கைகளில் புதிய சிந்தனை மூலமாக, உலகில் மாற்றத் தைக் கொண்டுவர இந்தியா தயாராகி வருகிறது என்று பேசினார். (வ)

## பஸ்ஸில் பயணித்த சிப்பாய் சுட்டுக்கொலை

ராய்ப்பூர், ஒக்.20

சதீஸ்கர் மாநில ஆயுதப்படை காவலர் ஒருவரை மாவோயிஸ்ட்டுகள் ஓடும் பஸ்ஸிலிருந்து கீழே இழுத்து வந்து சுட்டுக்கொன்றதாக அந்த மாநில பொலிஸ் தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்த குறித்த பாதுகாப்புப் படை காவலரான சிவ்குமார் சிடர், சிவில் உடையில் மருத்துவமனைக்கு பஸ்ஸில் சென்றார்.

ஆயுதங்களின்றியநிலையில் அவர் பஸ்ஸில் தனியாகச் சென்றுகொண்டிருந்த நிலையில் வழிமறித்த மாவோயிஸ்ட்டுகள் அவரை பஸ்ஸிலிருந்து கீழே இழுத்து வந்தனர். பின்னர் அங்கி ருந்து சிறிது தூரத்துக்கு இழுத்துச் சென்று சிவ்குமாரை அவர்கள் சுட்டுக்கொன்றனர்.

இது குறித்து தகவல் கிடைத்ததும் விரைந்து சென்ற பாதுகாப்புப் படையினர் சிவ்குமாரின் உடலை கைப்பற்றியதுடன், மாவோயிஸ்ட்டுகளை தேடி தீவிர தேடுதல் வேட்டையிலும் ஈடுபட்டனர். (வ)



ஹரியானா மாநில சட்டசபைத் தேர்தலிலும் பாரதிய ஜனதா முன்னிலை வகிக்கிறது. மொத்தமுள்ள 90 தொகுதிகளில் பாரதிய ஜனதா 50 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. பா.ஜ.க. ஆதரவாளர்களும் வெற்றிக்களிப்பில்.... (வ)

## பாகிஸ்தானுக்கு எதிராக காங்கிரஸார் போராட்டம்

ஜம்மு, ஒக்.20

எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் தொடர்ந்து அத்துமீறி தாக்குதல் நடத்தி வருவதைக் கண்டித்து, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் ஸ்ரீநகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இளைஞர் காங்கிரஸார் போராட்டம் நடத்தினர். அவர்களை பொலிஸார் தடியடி நடத்தி கலைத்தனர்.

இதுகுறித்து இளைஞர் காங்கிரஸ் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

பாகிஸ்தான் இராணுவத்தினர் தொடர்ந்து அத்துமீறி தாக் குதல் நடத்தி வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நட்த்தப்பட்டது. அப்போது பாகிஸ்தானுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன. இந்தநிலையில் போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு வந்த பொலிஸார், கட்சித் தொண்டர்கள் மீது தடியடி நடத்தினர்.

இதில் பலர் காயமடைந்தனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இளைஞர் காங்கிரஸாரின் இந்தக் குற்றச்சாட்டை பொலிஸார் மறுத்துள்ளனர். மேலும், தடியடி எதுவும் நடத்தப்படவில்லை என்றும், போராட்டத்தில் ஈடுபட்ட அந்தக்கட்சியினர் சாலையில் தடுப்புகளை ஏற்படுத்த முயற்சித்ததால், அவர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர் என்றும் தெரிவித்தனர். (வ)

## 1,400 கிலோ எடையுள்ள கண்கவர் 'முர்ரா' எருமை

உத்தரப்பிரதேச மாநிலம் மீரட்டில் நடைபெற்ற தேசிய அளவிலான கால்நடைக் கண்காட்சியில் 1,400 கிலோ எடை கொண்ட முர்ரா என்ற இனவகை ஆண் எருமை காண்போரைக் கவர்ந்து அதிசயிக்க வைத்தது.

மீரட்டில் நடைபெற்ற தேசிய அளவிலான கால்நடைக் கண்காட்சியில், முர்ரா , தார்பர்க்கர், பிரவுன் சுவிஸ், கிர் மற்றும் ஜெர்சி ஆகிய இனங்களைச் சேர்ந்த கால் நடைகள் நூற்றுக்கணக்கில் கலந்துகொண்டன.

கண்காட்சியில் பங்கேற்கும் கால்நடைகளின் எடை,பால் தரும் அளவு, உடல் ஆரோக்கியம், இனப்பெருக்கத் திறன், இனவகையின் சிறப்பு ஆகியவைக் கணக்கிடப்பட்டு, அவற்றை அதிகளவில் கொண்டுள்ள கால்நடைக்கு முதல் பரிசும் கோப்பையும் வழங்கப்படுகிறது. இந்த விதிகளை இந்த முர்ரா இன வகை ஆண் எருமை வென்று கோப்பையைத் தட்டிச் சென்றுள்ளது. அதன் உரிமையாளர் 'யுவராஜ்' என்று பெயர் சூட்டி வளர்த்து வருகிறார். இந்த முர்ரா எருமையின் மொத்த எடை 1400 கிலோ, உயரம் 5 அடி 9 அங்குலம், நீளம் 14 அடி. பிரமாண்ட உருவம் கொண்டு காண்போரை அச்சம் கொள்ள வைக்கும் தோற்றத்தில் அசத்துகிறது. ஆனால் நிஜத்தில் சாதுவான குணம் கொண்டது என்கிறார் இதன் உரிமையாளர் கரம்வீர் சிங். மேலும் அவர் கூறுகையில், தினமும் யுவராஜுக்கு உணவாக 20 லீற்றர் பால், 5 கிலோ அப்பிள், நல்ல தரமான



கால்நடைக்கே உரிய உணவு 15 கிலோ ஆகியவற்றைக் கொடுக்கின்றோம். பாதுகாப்பான முறையில் சுத்தமான இடத்தில் வளர்த்து வருகிறோம். தினமும் 4 கிலோ மீற்றர் தூரம் நடைப் பயிற்சிக்கும் அழைத்துச் செல்கிறோம் என்று ஆச்சரியப்படுத்துகிறார். (வ)

# உலகின் மிக உயர்ந்த பார்வையாளர் மாடம்

## மனிதர்கள் உருவாக்கி கின்னஸ் சாதனை



உலகிலேயே மிக உயரமான கட்டடமான புர்ஜ் கலீஃபாவில், பொதுமக்கள் பார்வையாளர் மாடம் செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டதை அடுத்து, மனிதர்களால் உருவாக்கப்பட்ட உலகின் மிக உயர்ந்த பார்வையாளர் மாடம்' என்ற பெருமையைப் பெற்றுள்ளது. புர்ஜ் கலீஃபா - ஸ்கை' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் பார்வையாளர் மாடம், தரைமட்டத்திலிருந்து 555 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கோலாகலமாக நடைபெற்ற இந்தப் பார்வை மாடத்தின் திறப்பு விழாவில், கின்னஸ் சாதனைப் புத்தக நிறுவனத்தினர் கலந்து கொண்டனர்.

அப்போது பேசிய கின்னஸ் நிறுவனத்தின் மத்தியக் கிழக்கு, வட ஆபிரிக்க நாடுகளுக்கான மண்டல மேலாளர் தலால் ஒமர் கூறுகையில், . ஏற்கெனவே தனது சாதனை் மூலம் உலகை வியக்க வைத்த புர்ஜ் கலீஃபா, மீண்டும் ஒரு சாதனையை நிகழ்த்தியிருக்கிறது. (வ)

# போராளிகளுடன் நைஜீரியா போர் நிறுத்தம் செய்ய உடன்பாடு

## கடத்தப்பட்ட 219 மாணவிகள் விடுதலையாவர்

நைஜீரியாவில் கடந்த ஏப்ரல் 14 ஆம் திகதி போர்னோ மாநிலத்தின் சிபோக் கிராமத்தில் இருந்து 276 மாணவிகளைப் போக்கோ ஹராம் போராளிகள் கடத்திச் சென்றதுடன் அந்த மாணவிகளை பாலியல் அடிமைகளாக விற்கப் போவதாக மிரட்டியிருந்தனர்.

அதனை அடுத்து நைஜீரிய இராணுவம் இம்மாணவிகளை விடுவிப்பதற்குக் கடும் முயற்சி எடுத்தது. இதற்கு உதவியாக அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகள் சில தமது இராணுவ நிபுணர் குழுவையும் அனுப்பியிருந்தன.



கடத்தப்பட்ட மாணவிகளில் சிலர் தப்பி ஓடி வந்த நிலையில் கடந்த 6 மாதங்களாக மாணவிகளை விடுவிக்க முடியாமல் நைஜீரிய அரசு திணறியதை மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பெண்கள் உரிமை இயக்கத்தினர் கடுமையாக விமர்சித்தனர். இந்த நிலையில் நைஜீரிய அரசு இஸ்லாமியப் போராளிக் குழுவான போக்கோ ஹராமுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை எட்டியிருப்பதாகவும் இதில் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 200 இற்கும் அதிகமான. பாடசாலை மாணவிகளை விடுவிப்பது என்ற உடன்பாடும் எட்டப்பட்டிருப்பதாகவும் வெள்ளிக்கிழமை நைஜீரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சாட் நாட்டில் நைஜீரிய அரசதரப்புக்கும் போக்கோ ஹராம் போராளிகளுக்கும் இடையே ஒரு மாத காலமாக நடைபெற்ற பேச்சை அடுத்து வியாழக்கிழமை இந்த போர் நிறுத்த ஒப்பந்தமும் மாணவிகளை விடுவிப்பது தொடர்பான உடன்பாடும் எட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நாளை செவ்வாய்க்கிழமை போக்கோ ஹராம் போராளிகளிடம் இருந்து தமது பாடசாலை மாணவிகளை மீட்கும் நடவடிக்கை இடம்பெறும் என்று நைஜீரிய ஜனாதிபதி மாளிகையின் மூத்த பிரிவு ஒன்று ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளை வெள்ளிக்கிழமை காலை கேமரூன் இராணுவத்தினர் எல்லைப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டபோது போக்கோ ஹராம் போராளிகள் பதுங்கி இருந்து பீரங்கி மற்றும் வாகனங்கள் மூலம் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர். பதிலுக்கு இராணுவமும் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் 107 போக்கோ ஹராம் போராளிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் 8 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளதாகவும் கேமரூன் இராணுவம் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

# பேச்சுக்குச் சம்மதித்தது ஹொங்ஹொங் அரசு



ஹொங்காங், ஒக்.20

ஹொங்ஹொங்கில் முழுமையான ஜனநாயகம் கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மாணவர்களுடன் நாளை செவ்வாய்க்கிழமை பேச்சு நடத்தப்படும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. கடந்த இரு வாரங்களுக்கும் மேல் வீதி முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த ஜனநாயகவாதிகளை அப்புறப்படுத்தும் முயற்சியில் கடந்த மூன்று நாள்களாக பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் மோதல் ஏற்பட்ட சூழ்நிலையில், அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

முன்னதாக, மாணவர் குழுக்களின் தலைவர்கள் ஆர்ப்பாட்டத்தைத் தூண்டி விடுவதால், அவர்களுடன் பேச்சு நடத்தப் போவதில்லை என்று ஹொங்ஹொங் ஆட்சித் தலைவர் லியுங்சுன்யிங் கூறியிருந்தார்.

தற்போது, தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ள அவர், ஹொங்ஹொங் மாணவர் சங்கங்களின் கூட்டமைப்புடன் நாளை செவ்வாய்க்கிழமை பேச்சு நடத்துவதாக நேற்று முன்தினம் சனிக்கிழமை அறிவித்தார். (வ)



அமெரிக்காவில் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ரோஜாவை சிறப்பிக்கும் முகமாக ரெயிலர் ரெக்ஸாஸ் என்ற இடத்தில் நடத்தப்படும் ரோஜாத் திருவிழாவை ஆரம்பிப்பதற்கு முன்பாக ரோஸ் ராணி வேலையாள்களுடன் கலந்துகொண்டு விளையாடும் காட்சி. (வ)

# ஒபாமாவின் கடன் அட்டை நிராகரிப்பு



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் கடன் அட்டையை அங்குள்ள உணவகம் ஒன்று நிராகரித்துள்ளது.

நுகர்வோர் நிதி பாதுகாப்பு பணியகம் நிகழ்ச்சியில் ஒபாமா கலந்து கொண்டு கடன் அட்டை மோசடியை தடுப்பது தொடர்பான புதிய நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தினார். பின்னர் ஒபாமா கூறுகையில், ஐ.நா. சபையின் பொதுச் சபைக் கூட்டத்தின்போது நான் நியூயோர்க் சென்றபோது அங்குள்ள ஓர் உணவகத்துக்குச் சென்றிருந்தேன்.

அப்போது அந்த உணவகத்தில் எனது கடன் அட்டை நிராகரிக்கப்பட்டது. நான் போதுமான அளவு எனது அட்டையைப் பயன்படுத்தாத காரணத்தால் அதில் மோசடி நடந்திருக்கலாம் என்று அவர்கள் நினைத்து இருக்கலாம். இதன் காரணமாக் கடன் அட்டை நிராகரிக்கப்பட்டு இருக்கலாம் என்று நான் நினைத்தேன் என்று சிரித்தாவாறே கூறினார். அதிஷ்டவசமாக மிச்செல் அருகில் இருந்தார் என்று தெரிவித்தார். (வ)

# புதன் கிரகத்தில் ஐஸ்கட்டியாக தண்ணீர்

## நாசா தெரிவிப்பு

சூரியனுக்கு அருகேயுள்ள கிரகம் புதன். இதனால் அங்கு எப்போதும் கடும் வெப்பம் நிலவுகிறது. அதாவது அதன் மேற்பரப்பில் 430 டிகிரி செல்சியஸ் தட்பவெப்ப நிலை உள்ளது. இது பூமியில் நிலவும் 58 நாள் வெப்பத்துக்கு ஈடாகக் கருதப்படுகிறது.

அதே நேரத்தில் அங்கு தண்ணீர் ஐஸ் ஆக உறைந்த நிலையில் உள்ளது. இதை அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் கண்டுபிடித்துள்ளது.

ரேடியோ டெலஸ்கோப் எடுத்து அனுப்பிய புகைப்படங்களில் இது தெரியவந்துள்ளது. இது ரேடார் கருவி அனுப்பியுள்ள சமிக் மூலமும் தெரியவந்துள்ளது. புதன் கிரகத்தின் வடக்கு முனையில் உள்ள எரிமலையில் நாசா பல ஆய்வுகளை நடத்தியது. அங்கு தண்ணீர் ஐஸ் ஆக உறைந்து கிடப்பது சமீபத்தில் கண்டறியப்பட்டது. (வ)

# இசை நிகழ்வில் கட்டடம் இடிந்ததில் 16 பேர் சாவு

சியோல், ஒக்.20

தென்கொரியா தலைநகர் சியோல் அருகே சியோங்னம் நகரில் உள்ள திறந்த வெளி அரங்கத்தில் தென்கொரியாவின் பேண்ட் 4 மினிட்ஸ் என்ற பிரபல குழுவினரின் பொப் இசை நிகழ்ச்சி நடந்தது. அதை சுமார் 700 இற்கும் மேற்பட்டோர் கூடியிருந்து நிகழ்ச்சியை ரசித்தனர். கூட்டம் அதிகமாக இருந்ததால் வாகன நிறுத்தம் கட்டடத்தின் காற்று வெளியேறும் பகுதி மீது ஏறி ஏராளமானவர்கள் இசை நிகழ்ச்சியை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர்.

அது சுமார் 60 அடி உயரம் உள்ளது. அதிகமான ரசிகர்கள் ஏறியதால் அந்தப் பகுதியின் கட்டடத்தின் கூரை திடீரென இடிந்து விழுந்தது.

அதில் சிக்கி 12 பேர் சம் பவ இடத்தில் உயிரிழந்தனர். 15 பேர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

அங்கு சிகிச்சை பயனின்றி 4 பேர் உயிரிழந்தனர். இதனால் சாவு எண்ணிக்கை 16 ஆக உயர்ந்தது. இதற்கிடையே, காயம் அடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.



அதனால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்து குறித்து தென்கொரிய ஒஹ் (வயது 37) (பெயர் மாற்றபட்டு உள்ளது) என்பவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர். இந்தநிலையில் ஒஹ் மறுநாள் காலை உயிரை மாய்த் துக்கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது. (வ)

# போர் விமானப் பயிற்சியில் ஐ.எஸ் - அதிர்ச்சியில் உலக நாடுகள்

உலக நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள், போர் விமான பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் படையில் பணியாற்றிய போர் விமானி ஒருவர் தீவிரவாதிகளுக்கு விமானப் பயிற்சி வழங்கி வருகிறார்.

இந்தத் தகவலை சிரியா மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.


சிரியாவின் அலெப்போ, ராக்கா மாகாணங்களில் சிரியா படையிடமிருந்து ஐ.எஸ். அமைப்பினர் சில விமானத் தளங்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சில போர் விமானங்கள் ஐ.எஸ். தீவிரவாதிகளின் வசமாகியுள்ளன. அவை மிக்-21, மிக்-13 ரக போர் விமானங்கள் என்று தெரிகிறது.

எனினும், அவை பறக்கும் நிலையில் உள்ளனவா, அவற்றில் ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்கள் பொருத்தப்பட்டுள்ளனவா என்பது குறித்து தெரியவில்லை.

ஐ.எஸ். தீவிரவாதிகள் அந்த விமானங்களை இயக்குவதற்கான பயற்சி அளிக்கப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் விமானப் படையில் பணியாற்றிய அதிகாரி ஒருவர், அலெப்போ மாகாணத்தின் ஜர்ரா நகர ராணுவ விமானத் தளத்தில் இந்தப் பயிற்சிகளை மேற்பார்வையிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜர்ரா நகரில், போர் விமானங்கள் தாழ்வாகப் பறப்பதை அடிக்கடி பார்ப்பதாக அங்கு வசிப்பவர்கள் தெரிவித்தனர். ரேடாரின் பார்வையிலிருந்து தப்புவதற்காக, விமானங்களை தீவிரவாதிகள் குறைவான உயரத்தில் செலுத்துவதாகக் கூறப்படுகிறது.



ஈராக்கிலும், சிரியாவிலும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் விமானத் தாக்குதல் நிகழ்த்தி வரும் நிலையில், இந்தத் தகவல் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)

# தனியாக அடைக்கப்பட்ட உலகின் வயதான குரங்கு



ஜேர்மனி நாட்டில் உலகில் அதிக வயது டைய உராங்குட்டான் என்ற வால் இல்லாத குரங்கு வகை ஒன்று பூங்காவில் தனியாக அடைக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் பிரான்க்பர்ட் பூங்காவில் உள்ள சார்லி என்ற 57 வயது வால் இல்லாத உராங்குட்டான் குரங்கு, உலகத்தில் அதிக வயதுடைய உராங்குட்டான் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

இந்தக் குரங்கு 1962ஆம் ஆண்டு ஸ்டார்ட்கட் (Stuttgart) பூங்காவுக்கு எடுத்து வரப்பட்டு பின்பு 1978 ஆம் ஆண்டு அங்கிருந்து பிரான்க்பர்ட் பூங்காவுக்கு மாற்றப்பட்டது.

தற்போது இந்த வயதான குரங்கு மூட்டு வலியால் அவதிப்பட்டு வருவதாலும், வாயில் சிறு பிரச்சினைகள் இருப்பதாலும் பூங்கா நிர்வாகம் இந்தக் குரங்கை தனியாக அடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 9 | | | 6 | | 7 | 3 |
| | | 1 | | 4 | 3 | 2 | | |
| | | | | | | 8 | | |
| 5 | 2 | | 3 | 8 | | | 9 | |
| | 3 | 7 | | 2 | | 4 | 1 | |
| | 9 | | | 6 | 4 | | 5 | 2 |
| | | 6 | | | | | | |
| | | 3 | 6 | 5 | | 1 | | |
| 8 | 4 | | 1 | | | 7 | 2 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 2 | 7 | 5 | 9 | 3 | 4 | 1 |
| 5 | 9 | 4 | 1 | 2 | 3 | 7 | 6 | 8 |
| 3 | 7 | 1 | 6 | 4 | 8 | 2 | 9 | 5 |
| 7 | 8 | 5 | 4 | 1 | 2 | 9 | 3 | 6 |
| 2 | 4 | 3 | 8 | 9 | 6 | 5 | 1 | 7 |
| 6 | 1 | 9 | 5 | 3 | 7 | 8 | 2 | 4 |
| 1 | 2 | 8 | 3 | 7 | 4 | 6 | 5 | 9 |
| 4 | 3 | 7 | 9 | 6 | 5 | 1 | 8 | 2 |
| 9 | 5 | 6 | 2 | 8 | 1 | 4 | 7 | 3 |

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## மனத்தின் நிலைகள்

மனத்துக்கு மூன்று நிலைகள் உண்டு ஒன்று தமஸ் என்று அழைக்கப்படும். இது விலங்குகளிடமும் மூடர்களிடமும் காணப்படுவது. தீமை செய்ய மட்டுமே இது செயற்படுகிறது. இதைத் தவிர வேறு எந்த எண்ணமும் மனத்தின் இந்த நிலையில் எழுவதில்லை. அடுத்தது மனத்தின் செயற்படு நிலை. அதாவது ரஜோ குண நிலை, அதிகாரமும் இன்ப நுகர்ச்சியுமே அதன் முக்கிய நோக்கங்கள். நான் அதிகாரம் பெற்று, மற்றவர்களை அடக்கி ஆள்வேன் என்ற எண்ணம், மூன்றாவதாக, அமைதியும் சாந்தமும் நிறைந்த நிலை உள்ளது. இங்கே அலைகள் ஓய்ந்துவிடுகின்றன. மனமாகிய குளத்தின் நீர் தெளிவாக இருக்கிறது. இது செயலற்ற நிலையல்ல, மாறாக தீவிர செயற்படு நிலையாகும். அமைதியாயிருப்பதே ஆற்றலின் மிகப் பெரிய வெளிப்பாடு, செயலில் ஈடுபடுவது எளிது. கடிவாளங்களை விட்டுவிட்டால் குதிரைகள் அவை விரும்பிய திசையில் உங்களை இழுத்துச் செல்லும். இதை எல்லோராலும் செய்ய முடியும். ஆனால் பாய்ந்தோடும் குதிரைகளை இழுத்துப் பிடித்து நிறுத்துபவனே வலிமையுடையவன். அவற்றின் போக்கில் விடுவது, அல்லது அடக்குவது, இரண்டில் எதற்கு அதிக பலம் வேண்டும்? மந்தமாக இருப்பவன் சாந்தமானவன் அல்ல மந்த நிலையையோ சோம்பலையோ தவறாக சத்வம் என்று எண்ணிவிடக் கூடாது. மனத்தின் அலைகளை அடக்கியாள்பவனே சாந்தமானவன். வலிமையின் கீழ் நிலை வெளிப்பாடே செயல். அமைதியோ அதன் உயர் நிலை வெளிப்பாடு. சித்தம் தன்னியல்பாகிய தூய நிலைக்குத் திரும்பிச் செல்லவே எப்போதும் முயல்கிறது. ஆனால் புலன்கள் அதைப் புறத்தே இழுக்கின்றன. அதை அடக்குவது, புறத்தே செல்வதான அதன் போக்கைத் தடுப்பது. அதை உட்புறமாகத் திருப்பி உணர்வு மயமான நிலையை நோக்கிச் செல்லும் பாதையில் செலுத்துவது இதுவே யோகத்தின் முதற்படி, ஏனெனில் இந்த வழியில்தான் சித்தம் அதற்குரிய சரியான பாதையில் போக முடியும்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா



**மேடம்**: நீங்கள் சொன்ன வாக்கைக் காப்பாற்ற சிறிது போராட வேண்டிவரலாம். மேலும் வீண் அலைச்சலும் ஏற்படலாம். எதிர்காலத்துக்குத் தேவையான முதலீடுகளை அத்றகுண்டான நபர்களிடம் ஆலோசனைகள் செய்து முதலீடுகள் செய்வீர்கள்.



**இடபம்**: பிரச்சினைகளை முறியடிக்கும் வல்லமை உங்களை வந்து சேரும். கலைத்துறையில் இருப்பவர்களுக்கு மிகுந்த உகந்த நாளிது. பொருளாதார வளம் மேம்படும். குடும்பத்தில் முன்னேற்றமும் சுபநிகழ்ச்சிகளும் நடைபெறும்.



**மிதுனம்**: எந்த பிரச்சினையையும் முறிய்டிக்கும் வல்லமை உங்களுக்கு வந்து சேரும். பிள்ளைகள் வழியில் சிற்சில கசப்பூட்டும் சம்பவங்கள் நடந்தாலும் சில அனுகூலம் ஏற்படும். எடுத்த காரியத்தை சிறப்பாகச் செய்து முடிக்கலாம்.



**கடகம்**: உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு இது சிறப்பான காலகட்டமாகும். மேலதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும். புதிய தொழில் ஆரம்பிக்கக் கூடிய முயற்சிகள் ஆலோசனைகளில் ஈடுபடலாம்.



**சிங்கம்**: சகோதர, சகோதரிகளிடம் நெருக்கம் அதிகரிக்கும். வேலை செய்யும் இடத்தினில் சிற்சில பிரச்சினைகள் வரலாம். உடன் வேலை செய்வோரின் ஆதரவால் அதனைச் சமாளிப்பீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்கும்.



**கன்னி**: குடும்பத்தில் சின்னச் சின்ன வாக்கு வாதங்கள் தலைதூக்கலாம். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து போவதால் நிலைமையைச் சமாளிக்கலாம். அதீத எதிர்பார்ப்புக்கள் வேண்டாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.



**துலாம்**: சிலருக்கு தூரத்திலிருந்து விரும்பத்தகாத செய்திகள் வரலாம். தீவிர முயற்சிகளின் பேரில் சிலருக்கு சுபமான நிகழ்வுகள் நிகழலாம். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். சிலருக்கு இடமாற்ற ஆலோசனைகள் நடக்கும்.



**விருச்சிகம்**: அதீத உழைப்பின் மூலமே அனைத்து நற்பயன்களையும் பெற முடியும். பல்வேறு முன்னேற்றங்களைப் பெறலாம். இருந்து வந்த தடைகள் அகலும். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.



**தனுசு**: குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் தேவைகள் பூர்த்தியாகும். உறவினர்கள் வகையில் நிலவி வந்த பிரச்சினைகள் அனைத்தும் அடியோடு மறையும். பெண்களால் அனுகூலம் கிடைக்கும். மிகவும் உதவிகரமாக இருப்பர்.



**மகரம்**: புதிய சொத்துக்கள் வாங்க நேரம் கைகூடி வரும். வழக்கு விவகாரங்கள் சாதகமாக இருக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு முன்னேற்றம் காண்பர். பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை தங்கு தடையின்றி கிடைக்கும்.



**கும்பம்**: குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகள் வரத்தான் செய்யும். எனவே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போகவும். அதே போல் உறவினர் வகையிலும் அதிக நெருக்கம் வேண்டாம். சிலர் தொழில் நிமித்தமாக குடும்பத்தை விட்டு பிரிய நேரிடலாம்.



**மீனம்**: தூரத்தில் இருக்கும் உறவினரால் நன்மை ஏற்படும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு, வேலைப்பளு அதிகரிக்கும். ஆனாலும் வருமானத்தில் எந்தக் குறையும் இருக்காது. சிலர் எதிர்பாராத இடமாற்றத்தை சந்திக்கலாம்.

## நாளை

**ஐப்பசி-04 செவ்வாய்க்கிழமை | 21.10.2014**

திதி: திரயோதசி பி.இ.01.47வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.இ.01.55 வரை

சுபநேரம்:10.32-12.02 வரை
இராகுகாலம்:03.02-04.32 வரை
பிரதோஷ விரதம்

# சக்கோட்டை சென்.சேவியர் சம்பியன்

யாழ்ப்பாணம்.ஒக்.20
சமனிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியன் விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி சம்பியன் ஆனது சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டுக் கழக அணி.

தாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும், அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம்சனிக்கிழமைதாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியன் விளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. முதற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி 2ஆவது நிமிடத்தில் வெற்றிலைக் கேணி சென்.செபஸ்ரியன் விளையாட்டுக்கழக அணியினருக்கு தண்டனை உதை ஒன்று கிடைத்தது. அதனை சரியான முறையில் பயன்படுத்திய அலெக்ஸ் தனது அணிக்கான முதலாவது கோலை அடிக்க ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது. பதிலுக்கு தமது அணிக்கான கோலினை பெறுவதற்காக சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி கடுமையாகப்போராடியது. ஆனால் முதற்பாதி ஆட்டம் முடியும் வரை அவர்களால் தமது அணிக்காக ஒரு கோலைக் கூடப் பெற முடியவில்லை. முதற்பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது வெற்றிலைக் கேணி சென்.செபஸ்ரியன் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமான போது சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி தமது ஆட்டத்தில் சில மாற்றங்க்ளை மேற்கொண்டு களமிறங்கியது. இதனால் ஆட்டமும் சூடு பிடிக்கத் தெடங்கியது. இரு அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காக எதிரணியின் கோல் பரப்பினை மாறி மாறி ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். ஆனால் அணிகளின் பின்கள வீரர்களின் திறமையினால் கோல் பெறும் சந்தர்ப்பங்கள் தடுக்கப்பட்டன. வெற்றி பெற வேண்டும் என்ற உத்வேகத்துடன் இரண்டு அணியினரும் விளையாடியதால் இரண்டாம்பாதி ஆட்டம் விறுவிறுப்பின் உச்சத்தை அடைந்தது. இரண்டாம்பாதியின் 18 ஆவது நிமிடத்தில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி வீரர் கனியூட் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். இதனால் வெற்றி லைக்கேணி சென்.செபஸ்ரியன் விளையாட்டுக்கழகத்தின் வெற்றிக் கனவு கலையத் தொடங்கியது. ஆட்டத்தின் கடைசிநிமிடம் வரை இரண்டு அணியினரும் சளைக்காமல் போராடிய போதும் மேலதிகமாக கோல்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

தொடர்ந்து ஆட்டத்தின் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இரண்டுஅணியினரும்வழங்கப்பட்ட 5 சமனிலை தவிர்ப்பு உதைகளையும் கோல் ஆக்கியதால் இரண்டு அணியினருக்கும் மேலதிகமாக ஒவ்வொரு சமனிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழக அணி தமக்கு வழங்கப்பட்ட உதையை வீணாக்கியது. உதையை வெற்றிக் கோலாக்கிய சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டுக்கழக அணி. வெற்றிலைக் கேணி சென். செபஸ்ரியன் விளையாட்டுக்கழக அணியை 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. ஆட்டநாயகனாக சக்கோட்டை சென்.சேவியர் விளையாட் டுக்கழக அணி வீரர் கனியூட்டும், தொடர்நாயகனாக அதே அணி வீரர் நிரோசனும், சிறந்த பின்கள வீரராக அதே அணி வீரர் றஞ்சித்குமாரும், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் றோசனும் தெரிவானார்கள். (ரி- 23)





காக்கையன்குளம் அல்அரபாத் விளையாட்டுக்கழகம் நடத்திய 200 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலிடத்தைப் பெற்ற கல்மடுவைச் சேர்ந்த பி.அனுசன் கல்மடுமகா வித்தியாலய அதிபர் தேவநேசன் தலைமையில் கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் கிராமசேவையாளர் கணேசலிங்கம் அனுசனின் திறமையை பாராட்டி வாழ்த்துமடல் வழங்கிக் கௌரவித்தார். (ரி- 23)

# அரையிறுதி ஆட்டத்தி்ல் வவுனியா வடதாரகை

யாழ்ப்பாணம்.ஒக்.20
சென்றலைட்ஸை 11 ஓட்டங்களால் வெற்றி கொண்டு அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது வவுனியா வடதாரகை விளையாட்டுக்கழக அணி.

இலங்கை கிரிக்கெட் பிரிவு 3 இரண்டாம் சுற்றுக்கான, அணிக்கு 5 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலனறுவை பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. இதில் வவுனியா வடதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா வட தாரகை விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுதர்சன் 22 ஓட்டங்களையும், விதுஷன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் ஜேனோசன் ஒரு ஓட்டத்தினை மட்டும் விட்டுக் கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தினார்.

43 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 31 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். இதில் ஜேனோசன் 21 ஓட்டங்களை தனது அணி சார்பாகப் பெற்றுக் கொடுத்தார் பந்து வீச்சில் வவுனியா வடதாரகை விளையாட்டுக்கழக அணி சார்பில் யசிபன் 4 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தினார். (ரி- 23)


# ஹற்றிக் கோல் அடித்தார் சாரங்கன் மனோகராவை வீழ்த்தியது பொம்மர்ஸ்

யாழ்ப்பாணம்,ஒக்.20
சாரங்கனின் ஹற்றிக் கோலின் மூலம் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும், அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் முறையிலான ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுகழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரு அணியினரும் மிகவும் உற்சாகத்தோடு மோதிக் கொண்டனர். தமது அணிக்கான கோலினைப் பெற இரு அணியினரும் எதிரணியினரின் கோல் பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். இதன் பயனாக ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் சாரங்கன் தனது அணிக்கான முதலாவது கோலினைப் போட்டார். பதிலுக்கு தமது அணிக்கான கோலைப் பெற அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணி வீரர்கள் ஆக்ரோஷம் கொண்டு விளையாடினர். இதன் போது பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் கோபி ஆட்டத்தின் 16ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்காக 2ஆவது கோலினை போட்டார். தொடர்ந்து ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணி வீரர் கதீஸ் தனது அணிக்கான கோல் ஒன்றை அடித்தார். ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் ஆட்டத்தில் சில மாற்றங்களை மேற்கொண்டு விளையாடினர். இதனால் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தினை அடைந்தது. இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காக எதிர் அணியினரின் கோல் பரப்பினை மாறி மாறி ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். இதன் பயனாக ஆட்டத்தின் 22ஆவது, 32ஆவது நிமிடங்களில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் சாரங்கன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை பயன்படுத்தி தனது அணிக்கான 3ஆவது, 4ஆவது கோல்களை அடித்தார். அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணியினர் ஆட்டத்தின் கடைசி நிமிடம் வரை கடுமையான முயற்சிகளை மேற்கொண்ட போதும், மேலதிகமாக கோல்கள் எதனையும் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. ஆட்டநேர முடிவில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி- 23)



## கூடைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம்.ஒக்.20
வடமாகாண ரீதியாக யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 19 வயதுப்பிரிவு ஆண் பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு: மல்லாவி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் மல்லாவி மத்திய கல்லூரி அணி 45:31 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. அடுத்து வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல் லூரி மோதிக் கொண்டது. இதில் யாழ்.இந்துக்கல்லூரி அணி 36:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற் றது. இறுதியாக யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்துசென். ஜோன்ஸ்கல்லூரிஅணிமோதிக் கொண்டது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 53:21 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ரி- 23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம் ஒக். 20
வடமாகாண ரீதியாக யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 19 வயதுப்பிரிவு ஆண் பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டதிடலில் இடம்பெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் திருக்குடும்ப கன்னியர் மட அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (ரி-23)

# உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் இந்தியாவை ஆஸ்திரேலியா வீழ்த்தும்



2015ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் இறுதியாட்டத்தில் இந்தியா - ஆஸ்திரேலிய அணிகள் மோத வேண்டும் என்றும் அதில் இந்தியாவை தோற்கடித்து ஆஸ்திரேலியா கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்றும் விரும்புவதாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார். இந்தியாவுக்குச் சென்றுள்ள பொண்டிங் டில்லியிலுள்ள ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்திய, ஆஸ்திரேலிய அணிகள் இறுதியாட்டத்தில் மோதுவதே சிறந்ததாக இருக்கும். இரு அணிகளிடமும் பலம் வாய்ந்த துடுப்பாட்ட வரிசை உள்ளது. இதில் ஆஸ்திரேலியா கிண்ணத்தைக் கைப்பற்றவேண்டும். உலகக் கிண்ணத்துக்கு முன்பு இந்திய அணி ஆஸ்திரேலியாவில் 4 டெஸ்டில் விளையாடவுள்ளது. ஆஸ்திரேலிய அணியின் 20 இலக்குகளை கைப்பற்ற இந்திய பந்துவீச்சாளர்கள் திணறுவார்கள். இதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்தியாவின் துடுப்பாட்டம் சிறப்பாக இருக்கிறது. இந்த டெஸ்ட் தொடருக்கு முன்பு அணித் தலைவர் டோனி தனது தொழில்நுட்பத்தை மாற்றிக் கடினமாக்கிக் கொள்ளவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி)

## நுழைவுச் சீட்டு விற்பனை ஆரம்பம்

மேற்கிந்திய தீவுகள் இந்திய பயணத்தை பாதியில் இடை நிறுத்தியதால் மாற்று ஏற்பாடாக இலங்கை அணிக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அழைப்பு விடுத்தது. இலங்கை கிரிக்கெட் சபையும் அழைப்பை ஏற்று 5ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாட சம்மதம் தெரிவித்தது.
குறித்த தொடர் நவம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகும் எனத் தெரியவருகிறது. அத்துடன் ஆட்டங்கள் கொல்கத்தா, ஐதராபாத், கட்டாக், பெங்களூர், அகமதபாத் ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நாளை நடைபெறவுள்ள பி.சி.சி.ஐ.யின் அவசர செயற்குழுக் கூட்டத்தில் அட்டவணை அறிவிக்கப்படவுள்ளது.
இதற்கிடையே கட்டாக் போட்டிக்கான நுழைவுச்சீட்டு விற்பனையை ஒரிசா கிரிக்கெட் சங்கம் நேற்றுத் தொடங்கியுள்ளது. தொடருக்கான அட்டவணை அறிவிக்கப்படாமலேயே இணையத்தளத்திலும் நுழைவுச் சீட்டு விற்பனையைத் தொடங்கியது. எதிர்வரும் 28ஆம் திகதி வரை நுழைவுச்சீட்டு விற்பனை நடைபெறும் என்று அந்த மாநில கிரிக்கெட் சங்கம் தெரிவித்து உள்ளது. (ரி)

## பெரரர் - முர்ரே மோதும் இறுதிப்போட்டி

வியன்னா ஓபன் ரென்னிஸ் இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் டேவிட் பெரரர் மற்றும் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே மோதவுள்ளனர்.
ஆஸ்திரியாவில் வியன்னா ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் ஸ்பெயினின் டேவிட் பெரரர், ஜேர்மனியின் பிலிப்பை சந்தித்தார். முதல் செற்றை 6:3 என கைப்பற்றிய பெரரர், இரண்டாவது செற்றை 2:6 என இழந்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் இறுதி செற்றில் அசத்திய பெரரர் 7:6 என வென்றார். முடிவில், பெரரர் 6:3, 2:6, 7:6 என்ற செற் கணக்கில் வென்று இறுதியாட்டத்துக்கு முன்னேறினார்.
இதேவேளை மற்றொரு அரையிறுதியில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே 6:4, 6:3 என்ற ரீதியில் செர்பியாவின் விக்டரை தோற்கடித்தார்.
இந்நிலையில் தொடரின் இறுதிப் போட்டியில் டேவிட் பெரரரும், ஆன்டி முர்ரேயும் பலப்பரீட்சை நடத்தவுள்ளனர். (ரி)





## மோரிட்ஸ் அசத்த வென்றது மும்பை

மோரிட்ஸ் ஹற்றிக் கோல் அடிக்க, மும்பை சிற்றி அணி 5:0 என்ற கோல் கணக்கில் புனே சிற்றி அணியைத் தோற்கடித்தது.
நேற்று முன்தினம் மும்பையில் நடைபெற்ற இந்தியன் சுப்பர் லீக் தொடரின் ஆட்டத்தில் மும்பை சிற்றி அணியும், புனே சிற்றி அணியும் மோதிக் கொண்டன. இந்த ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் முதல் கோலை அடித்தது மும்பை. இந்த கோலை அந்த அணியின் ஆண்ட்ரே மோரிட்ஸ் அடித்தார். மைதானத்தின் நடுவில் இருந்து பந்தை வேகமாக முன்னோக்கி எடுத்துச் சென்ற மோரிட்ஸ், இடது காலால் மிகத்துல்லியமாக கோலடித்தார். தொடர்ந்து அபாரமாக ஆடிய மும்பை அணிக்கு 27ஆவது நிமிடத்தில் 2ஆவது கோல் கிடைத்தது. இந்தக் கோலையும் மோரிட்ஸ் தான் அடித்தார். புனே அணியின் தடுப்பாட்டக்காரர்கள் மிக மோசமாக செயற்பட்ட நிலையில் அதை பயன்படுத்திக் கொண்ட மோரிட்ஸ், மும்பை அணியை 2:0 என்ற கோல்கணக்கில் முன்னிலை பெற செய்தார்.
அடுத்த 10ஆவது நிமிடத்தில் மும்பைக்கு 3ஆவது கோல் கிடைத்தது. மூன்றாவது கோலை ஜான் ஸ்டோகன்ஸ் பந்தை தட்டிக் கொடுக்க சுபாஷ் சிங் அடித்தார். முதல் பாதி ஆட்ட நேர முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்ற மும்பை அணி.
இரண்டாவது பாதி ஆட்டத்திலும் அசத்தலாக ஆடிய மும்பை அணிக்கு 71ஆவது நிமிடத்தில் மோரிட்ஸ் தனது ஹற்றிக் கோலைப் பதிவு செய்தார். 85ஆவது நிமிடத்தில் லெட்ஸெல்டர் கோலடிக்க, மும்பை அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## படமாகும் யுவராஜ் வாழ்க்கை



இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரரும், சகலதுறை வீரருமான யுவராஜ் சிங்கின் வாழ்க்கையை படமாக்கவுள்ளார் பாலிவுட் நடிகர் அபிஷேக் பச்சன். விளையாட்டு வீரர்களின் வாழ்க்கையைப் படமாக்க நினைப்பவர்களின் நினைவுக்கு வரும் முதல் நபர் கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்தான். புற்றுநோயை எதிர்த்து போராடி வெற்றி பெற்று இருக்கிறார். கிரிக்கெட்டில் இவரது சாதனை மறக்க முடியாதது. குறிப்பாக ஒரு ஓவரில் 6 சிக்ஸர்கள் அடித்து இவர் படைத்த சாதனையை அவ்வளவு எளிதில் யாரும் மறந்துவிட முடியாது. அத்துடன் 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் சகலதுறையில் ஜொலித்த யுவராஜ் இந்திய அணி கிண்ணத்தைக் கைப்பற்ற உறுதுணையாக இருந்தார். இந்தநிலையில் இவரது வாழ்க்கையைப் படமாக்க நடிகர் அபிஷேக் பச்சன் முடிவு செய்துள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் இது பற்றிய அறிவிப்பை வெளியிட்ட அபிஷேக், இதன்போது யுவராஜ சிங் வாழ்க்கை வரலாற்று புத்தகமான 'தி டெஸ்ட் ஆப் மை லைப்' என்ற புத்தகத்தின் உரிமையையும் வாங்கியுள்ளார். விரைவில் குறித்த படத்தைத் தயாரிக்க இருக்கும் அபிஷேக், நடிகர்கள் பற்றிய விவரங்களை வெளியிடவில்லை. (ரி)

## காஷ்யப்பும் காலி

ஏற்கனவே தொடரில் இருந்து சாய்னா, பி.வி.சிந்து ஆகியோர் வெளியேறியுள்ள நிலையில் மற்றொரு இந்திய வீரரான காஷ்யப்பும் டென்மார்க் ஓபன் தொடரில் இருந்து வெளியேறியுள்ளார்.
டென்மார்க் ஓபன் சுப்பர் பூப்பந்தாட்டப் போட்டி டென்மார்க்கின் ஒடென்ஸ் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்திய வீரர் காஷ்யப், சீன வீரர் சென் லாங்குவைச் சந்தித்தார். இதில் இந்திய வீரர் காஷ்யப் 16:21, 15:21 என்ற நேர் செற்றில் தோல்வியடைந்தார். இதனால் டென்மார்க் ஓபன் ரென்னிஸ் தொடரில் இருந்து காஷ்யப் வெளியேறினார். ஏற்கனவே இந்திய நட்சத்திர வீராங்கனையான சாய்னா நேவால் மற்றும் பி.வி.சிந்து காலிறுதியுடன் தொடரில் இருந்து வெளியேறியிருந்தமை குறிப்பிடத் தக்கது. தற்போது காஷ்யப்பும் வெளியேறியுள்ள நிலையில் டென்மார்க் தொடரில் இந்தியாவுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. (ரி)



## தொடர்ச்சிகள்

### முதலாவது

மாகாணசபையோ ஒரு அரசியற்களமாகும். இழுபறிகளுக்கு அளவே இல்லை. இருந்தும் எமது தகுதி ஆய்வுக் காலம் எமது தரத்தை உயர்த்தித் தகைமையை வலியுறுத்தி வருகின்றது.

ஒரு குடும்பத்தை எடுத்தோமானால், குடும்பத் தலைவன் வெளியில் செய்யும் காரியங்கள் பற்றியே எல்லோரும் பேசுவார்கள். ஒரு வாகனம் வாங்கினான். பிறருடன் வாதாடி வென்றான். வேலையில் ஒரு பதவி உயர்வு பெற்றான் என்பது பற்றியெல்லாம் பேசுவார்கள்.

சாதாரணமாக எடை போடாதீர் அதன் தலைவி, தலைவனைப் பராமரிப்பதும், தமது குழந்தைகளைப் பராமரிப்பதும், வீட்டைச் சுத்தப்படுத்திப் பாதுகாத்து வைப்பதையும், தலைவன் தரும் பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்வதையும், தலை வன் - தலைவி ஆகியோரின் குடும்பத்தாருடன் தாறுமாறா கப் பேசாது தரமாகப் பேசி தாம்பத்திய வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதையும் எவருமே கண்டு கொள்ள மாட்டார்கள்.

அவளின் பங்களிப்பை எல்லோரும் சாதாரணமாகத் தான் எடை போடுவார்கள். அப்படித் தான் இருந்துள்ளது எமது முதல் வருட தகுதி ஆய்வுக்காலம் பற்றிய விமர்சனங்கள். நீங்கள் என்னத்தைச் செய்தீர்கள் என்று தலைவியிடம் கேட்கும் போது எவரும் எதிர்பார்ப்பது தலைவன் செய்தது போல் என்னத்தைச் செய்தீர்கள் என்பதுதான்.

**மறந்து விடுகின்றார்கள்.**

அதாவது கடன்பட்டு வாகனம் வாங்கினாயா, அடுத்த வீட்டுக்காரனுடன் சண்டை பிடித்து அதைப் பத்திரிகையில் வரச்செய்தாயா, அண்டிப் பிழைத்துப் பதவி உயர்வு பெற்றாயா ? என்னத்தைச் செய்தாய் என்றுதான் தலைவியிடம் கேட்கின்றார்கள்.

அவள் குடும்பத்தை கட்டுக்கோப்பாக வைத்திருந்ததையும், சகலரையும் அரவணைத்துக் குடும்ப நலன்கருதி நடவடிக்கைகள் எடுத்து வந்ததையும் தேவைப்பட்ட மக்களின் அன்றாடத் தேவைகளை முடியுமான மட்டும் தேர்ந்தெடுத்துக் கொடுத்துத் தேற்றி வந்தமையையும் மறந்து விடுகின்றார்கள்.

**நாம் என்ன செய்யவில்லை.**

ஒருவர் என்னிடம் கேட்டார். இந்த ஒரு வருடத்தில் என்னத்தைச் செய்தீர்கள்? என்று. நான் திருப்பிக் கேட்டேன் என்னத்தைச் செய்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்? என்று. அவர் சற்றுத் தடுமாறினார். புகையிரதப் பாதை அமைத்தீர்களா, பெரிய தெருக்களைத் திறந்தீர்களா? என்றார். புகை யிரதப் பாதையை இந்தியா செய்து சீனா செய்து தந்தது. இதில் நாங்கள் எதைச் செய்ய வேண்டும். வேலைவாய்ப்புக்களைக் கொடுத்தீர்களா? ஆம் என்றேன்.. ஒன்றும் பத்திரிகையில் வரவில்லையே என்றார். நாம் வேலைவாய்ப்புக்களைக் கொடுத்து விட்டுப் பத்திரிகையில் பறைசாற்றுபவர்கள் அல்லவே என்றேன்.

இவ்வாறு பலரும் என்ன செய்தீர்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கின்றார்கள். ஏதாவது பெரிதாகப் பத்திரிகையில் வந்தால்தான் நாங்கள் ஏதாவது செய்கின்றோம் என்று நினைக்கின்றார்கள். எத்தனை தடவைகள் சில அரசியல் வாதிகள் முன்னர் திறந்து வைத்த இடங்களைத் திரும்பவும் திறந்து வைத்து பத்திரிகைகளில் திருட்டுப் பெயர் பெற எத்தனிக்கின்றார்கள் என்பது பற்றி எல்லாம் எமது மக்களுக்குப் புரிவதில்லை.

**முன்னேறி வந்துள்ளோம்**

எம்மை வீழ்த்த வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கும் கொழும்பு அரசு. ஒரு வருடம் அதிகம் சண்டை சச்சரவில்லாமல் பூர்த்தி செய்து விட்டோம் என்பது எமக்குப் பெருமையைக் கொடுக்கின்றது. போதிய அனுபவம் இல்லாத அலுவலர்கள், அரசியலை அரவணைக்கும் பாங்குள்ள அலுவலர்கள், அதிகாரத்தைப் பாவித்து அகமுன்னேற்றம் கண்டு வந்த அலுவலர்களும் அவர்களை ஆட்டிப் படைத்து வந்தவர்களும் - இவர்களின் மத்தியில் தான் எமது மாகாணசபை முன்னேறி வந்துள்ளது.

எல்லாமே முதலில் இருந்து தொடங்கி வந்துள்ளோம். மற்றைய மாகாணங்கள் 25 வருடங்களுக்கு மேலாகப் பெற்ற அனுபவத்தை நாங்கள் ஒரு வருட காலத்தினுள் ஊன்றிக் கவனித்து உணர்ந்து கொண்டு முன்னேற வேண்டியுள்ளது. வீட்டில் அம்மாவின் பங்கை அறியாத வெளி மக்கள் போலத்தான் எம்மிடம் கேள்விகள் கேட்கப் படுகின்றன.

**கேவலமான அரசியல் செய்யவில்லை**

கொழும்பு அரசின் உள்ளீடல்களின் இடையில் நாம் ஸ்திரமாகக் கடமையாற்றுகின்றோம் என்றால் எமது திறமையை வெளியார் உணர வேண்டும். நாம் வேண்டுமெனில் மிகவும் கேவலமான ஒரு எதிர்ப்பு அரசியற் சூழலை உருவாக்கியிருக்கலாம். நாம் அவ்வாறு செய்யவில்லை.

எமது மக்களின் நலன்களையே முதன்மைப் படுத்தி மக்கள் சேவைக்கு வேண்டியவற்றைச் செய்து கொண்டே மக்களின் மதிப்புக்குப் பங்கம் ஏற்படாத விதத்தில் முன்னேறி வந்துள்ளோம். முன்நடந்த பல பிழையான செயல்களை நாங்கள் முன்னின்று முறியடிக்கக் கங்கணம் கட்டியுள்ளோம். எமது பயணம் வெற்றிப் பயணம். தொடங்கியிருக்கும் இரண்டாவது ஆண்டு முன்னைய ஆண்டைப் போல் தகுதி ஆய்வுக் காலமாக இருக்காது. தகுந்த ஆக்கங்களை ஆற்றுப் படுத்துங்காலமாக அமையும் - என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### இலங்கை

நாச்சியார், இளைஞர் அணி செயலாளர் சிவகரன், வட மாகாண சபையின் தவிசாளர் சீ.வீ.கே. சிவஞானம் உட்பட மற்றும் பலர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்கள்.

வரவேற்புரையை எஸ்.ஆனந்தராசா நிகழ்த்தினார். தொடர்ந்து கட்சியின் தலைவர் உரையாற்றினார். அதில், இலங்கை தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற 15ஆவது மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதுடன், அதனை கிராமிய பிரதேச மட்டக் கிளைகளிலும் நடைமுறைப்ப டுத்துவது சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப டும் - என்று தெரிவித்தார். (ற-86)

### நீதிமன்ற

கடைகளிலிருந்து அகற்ற வேண்டும் என்றும் நீதி மன்று உத்தரவிட்டது.

ஆனால் நீதிமன்று அவ் வாறு உத்தர விட்டபோதும் குறித்த நிர்வாகி அத னை நிறைவேற்ற வில்லை. மாதங்கள் பல கடந்த நிலையில் அதுதொடர்பில்விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளால் [illegible] நீதிமன்றில் மீண்டும் அது தொடர்பில் வழக்[illegible] தாக்கல் செய்யப்பட்டது. அதனையடுத்து அவருக்கு அழைப் பாணை அனுப்பப் பட்டது. கடந்த வெள்ளிக் கிழமை அந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது குறித்த உற்பத்திகளை கடைகளிலிருந்து அகற்றாத குற்றத்துக்காக அவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டது. அத்துடன் குறித்த உற்பத்திகளை அகற்றுமாறும் நீதி மன்று உத்தரவிட்டுள் ளது.

(ற-4)

### மொனராகலை

யப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டை நீதிமன்றில் ஒரு வழக்கும் மொனராகலை நீதிமன்றில் இரண்டு வழக்குகளும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5 ஆண்டுகளாக அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர் கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. விடுதலையை வலியுறுத்தி அவர் 10 தினங்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போதும், சாதகமான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று தெரி விக்கப் ப டுகின்றது. (ற-4)

### வானிலுள்ள

ஜனாதிபதியின் கீழுள்ள அமைச்சுக்கள் அதிகளவான நிதிகளைப் பெறும் அதேவேளை ஏனைய அமைச் சுக்கள் இயங்காத நிலையில் இருப்பது விழுமியங்களுக்கு முரணானதாகும்.

இந்த அரசு எம்முடைய கருத்துக்களைச் செவிமடுப்பதில்லை மாறாக ஒரு சில சர்வாதிகாரிகளின் வழிகாட்டல்களுக்கு அமைவாகவே செயற்படுகின்றது. பணம் சம்பாதிப்பதே அவர்களது ஒரே குறிக்கோளாகவுள்ளது. ஜாதிக ஹெல உறுமய அமைப்பு வெளிப்படுத்தும் கரிசனைகள் விடயத்தில் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் அவருக்கு ஆதரவளிப்பதற்கு தயாராகவுள்ளோம்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் சம்பிக்க ரணவக்க 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது தமது கட்சி ஆதரவளித்த பின்னர் தமது எதிர்பார்ப்புக்கள் பூர்த்தி செய்யப்படாமை தொடர்பில் அதிருப்தி கொண்டுள்ளதாக தெரிவித் தார்.

போர் முடிவுக்கு வந்தபோதிலும் சிங்களக் குடும்பங்கள் சமாதானத்தின் பலாபலனை இன்னமும் அனுபவிக்கவில்லை எனத் தெரிவித்த அவர் வடக்குக் கிழக்கிலுள்ள காணிகளில் சிங்களக் குடும்பங்கள் இன்னமும் குடியமர்த்தப்படவில்லை" எனச் சுட்டிக்காட்டினார். (ற)

### போர்க்குற்ற

ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எமது காணொலிகள் பொய்யானவை, ஆதாரமற்றவை என எம்மை விமர்சனம் செய்யும் இலங்கை அரசும், அதன் இராணுவமும் குற்றம்சாட்டிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களது குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதை நிரூபிக்க எமக்கு புதிய ஆதாராங்கள் கிடைத்தன. பாலசந்திரன் பிரபாகரனின் படுகொலை இதற்கு நல்ல உதாரணம்.


ஒவ்வொரு நாளும் இலங்கை மீதான அழுத்தங்கள் இந்த விடயத்தில் அதிகரித்து வருகின்றன. இலங்கையிடம் கேட்கப்படும் கேள்விகள் கடினமானவையாக, விடையளிக்க முடியாதவையாக மாறி வருகின்றன. சர்வதேச விருதுக்கான நியமனம் இந்த அழுத்தத்தை அதிகரிக்கும் என கருதுகிறோம், அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக இதனை நாங்கள் செய்யவில்லை, யுத்தத்தின் போது இருதரப்பும் இழைத்த மனித உரிமை மீறல்கள் குறித்த உண்மைகள் வெளிவரவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இதுவே சமாதானம், நீதி, நல்லிணக்கம், நீண்ட கால அநீதிகளுக்கான அரசியல் தீர்வை தேடுதல் போன்ற முயற்சிகளுக்கு அவசியமானது.

போருக்குப் பின்னர் வடக்கு கிழக்கில் உட்கட்டுமான வசதிகளில் பாரிய முதலீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் இதன் பின்னாலுள்ள நோக்கங்கள் குறித்து [illegible] கேள்விகளை கேட்கவேண்டும்.

புதிய வீதிகளும், புகையிரத பாதைகளும் இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் தமிழ் மக்களை பொருளாதார ரீதியாக பலவீனப்படுத்தும் நடவ டிக்கைக்கே உதவப் போகின்றன"- என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ற-சி)

## மரண அறிவித்தல்



**துரைச்சாமி திருநாவுக்கரசு (ஆசாரி)**

**(உரிமையாளர் அரசு மரத்தொழிற்சாலை, களபூமி, காரைநகர்)**

காளி கோவிலடி களபூமி காரைநகரைப்பிறப்பிடமாகவும்வசிப்பிடமாவும் கொண்ட துரைச்சாமி திருநாவுக்கரசு(ஆசாரி) நேற்று (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை அம்பாளின் திருவடியை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி-இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-கனகபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், சுசிலாதேவியின் அன்புக்கணவரும் கலைசெல்வி(ஆசிரியர்,யா/ஆயிலி சிவஞானோதய வித்தியாலயம்), கலைப்பிரியா, கலைவதனா(பிரான்ஸ்), கலைக்குமரன், கலைக்கண்ணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாவித்திரிதேவி, மங்களாதேவி, நடராசா(ஆசாரி), இராசலிங்கம், சத்தியவடிவேல்(ஆசாரி), மகாலிங்கம்(டுபாய்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் விஜயகுமாரன்(விளான்), சுரேஸ்கரன்(நீர்வேலி), சுபாஸ்கரன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் லலிதாதேவி, சறோஜினிதேவி, காலஞ்சென்ற பேரின்பநாதன் மற்றும் விஜயகுமாரன்(ஆசிரியர்,யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் அபிராம், பபிஷா, அபிராமி, சாரதன், சயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (21.10.2014)செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோவிலடி, களபூமி,
காரைநகர்.

(53390)(06)

தகவல் :
குடும்பத்தினர்

## நன்றி நவில்கின்றோம்

எமது அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாக எம்மோடு வாழ்ந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திய எமது குடும்பத்தலைவர்

**திருவாளர் பொன்னுச்சாமி தாமோதரம்பிள்ளை இராஜகம்பீரம்**

அவர்களின் மரணச்செய்தி அறிந்து உடன் வந்து துயரில் கலந்துகொண்டும் மரணக்கிரியை நிகழ்வின்போது பலவகை யில் உதவியோர்க்கும் நோயுற்றவேளையில் உதவிபுரிந்தோர்க் கும், தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார் உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் ஆத்மசாந்திக்கிரியைகளை நிறைவேற்றிய அந்தணப் பெருந்தகைகளுக்கும், குறிப்பாக அன்னாரின் இறப்புச் செய்தியை பத்திரிகையில் அறிவித்த ஆயுள்வேத சங்கத்திற்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

றோகினி வாசா
கஞ்சிட்டி, [illegible]
[illegible]லனகலட்டி,
[illegible]தலலிப்பளை.

குடும்பத்தினர்

(53386)

# மரண அறிவித்தல்

## திருமதி கலையரசி சிவநாதபிள்ளை



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு, பொன்னையா லேனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலையரசி சிவநாதபிள்ளை நேற்று (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவநாதபிள்ளையின் அன்புக் மனைவியும், கந்தசாமி-காலஞ்சென்ற பாக்கியலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-உமையாத்தை தம்பதியரின் பாசமிகு மருமகளும், கலைச்செல்வி, கலைமகள் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கலைராணி மற்றும் கலைமணி (ஜேர்மனி), கந்தவேள் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் இந்திராணி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், கபிலறூபன், சுபாங்கினி (பிரான்ஸ்), தயாள ரூபன் (விஜிதா மில்), ஜெகரூபன் (விஜிதா மில்) ஆகியோரின் அன்புத் தாயும், சுகிர்தன் (பிரான்ஸ்), கவிப் பிரியா ஆகியோரின் மாமியும், கமலம்மா, காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை, பூமலர் மற்றும் திருஞானபிள்ளை (லண்டன்), யோகலிங்கம், கேதீஸ்வரநாதன் (பிரான்ஸ்), சிவதேவா, கணநாதன் (ஜேர்மனி), மாசிலாவதனி (பிரான்ஸ்), பிருந்தாபன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், துரைசிங்கம், மணி,சர்வேந்திரன், மீனலோஜினி (லண்டன்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், கனகரத்தினம், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, கணேசன் மற்றும் இந்திரா ஆகியோரின் சம்பந்தியும், சுஜீன், சுருதி, ஜனாத் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2014) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குளப்பிட்டி றோட்,
பொன்னையா லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(காளி கோயில் வீதி)
077 350 6031 (53382)(45.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

## பரிசளிப்பும் குடிதண்ணீர் விநியோகமும்

தென்மராட்சி,ஒக்.20

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) வே.பாலசுப் பிரமணியம், உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி) ந.சர்வேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர். வித்தியாலய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட குழாய்க் கிணற்றிலிருந்து குடி தண்ணீர் விநியோகம் முதன்மை விருந்தினரால் ஆரம்பித்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டது. (வ-9)

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகள்

வடமராட்சி, ஒக்.20


பருத்தித்துறை பிரதேச சபை புலோலி உப அலுவலகப் பிரிவில் உள்ள முன்பள்ளி சிறார்கள் மத்தியில் வாசிப்பு மாதத்தையொட்டி புலோலி பொது நூலகத்தால் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மேற்பிரிவு சிறார்கள் மத்தியில் கதை கூறல் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கும், மேற்பிரிவு சிறார்கள் மத்தியில் திருக்குறள் மனனப்போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை பிப 3 மணிக்கும் மத்திய பிரிவு சிறார்கள் மத்தியில் ஆத்திசூடி முதல் 12 வரிகளை உள்ளடக்கியபோட்டி அதே தினம் மாலை 4 மணிக்கு இடம் பெறும். (வ-173)

# மரண அறிவித்தல்

## சேதுகாவலர் ஆறுமுகம்

(இளைப்பாறிய மாவட்ட விற்பனை அதிகாரி விற்பனைத் திணைக்களம்)



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சேதுகாவலர் ஆறுமுகம் நேற்று (19.10.2014) ஞாயிற்றுக் கிழமை காலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேதுகாவலர் - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், செல்லமுத்து அவர்களின் அன்புக் கணவரும், சுசீலா தேவியின் அன்பு தந்தையும், சிவராசா (அஞ்சல் அலுவலகம் நீர்வேலி) அவர்களின் அன்பு மாமனும், கபில்ராஜ், பபில்ராஜ், லவனராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2014) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி கிழக்கு, ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி கிழக்கு,
கைதடி.
T.P. 077 176 2538 (53378)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் அருளம்பலம்

(சண்முகநாதன் மில் – கல்வியங்காடு)



32, இராஜ வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் அருளம்பலம் (சண்முகநாதன் மில்) கடந்த (17.10.2014) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டிப்பிள்ளை-அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற அருளம்பலம் (சண்முகநாதன் மில் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கிட்ணர் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர், கோப்பாய்) மற்றும் கந்தசாமி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆனந்தராஜா, ஆனந்தகுமார், சித்திரா (நெதர்லாந்து), சுபத்திரா, ஆனந்தநாதன் (சுவிஸ்), சந்திரா, அருணா (நெதர்லாந்து), சுகுணா, (விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி), மஞ்சுளா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திராதேவி, இராஜராஜேஸ்வரி, கந்தசாமி (நெதர்லாந்து), வைத்தியநாதன், சுகந்தி (சுவிஸ்), சுதன், விக்கினேஸ்வரன் (நெதர்லாந்து), ரவீந்திரன், கிரிதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தயாபரன்-மீரா, அகிலன்-அனுசூயா, கஜன்-லக்சுமி, விதூசன், வாகீசன், ருக்மலதன்- கவிதா, தர்ஷன், கால்ஞ்சென்ற நிரோசன் மற்றும் விசாகன், காலஞ்சென்ற கீர்த்தனா மற்றும் அஜந்தா, சுஜந்தா, துவாரகன், திவ்ஜா, அஜித்தா, லக்சன், பிரதீப், கவின், வைசாலி, ஆர்த்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கீர்த்திகா, லதுமிலன், டிசான், சஞ்ஜெய், சகானா, சங்கீத் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32, இராஜ வீதி, நல்லூர்,
(சண்முகநாதன் மில்)

தகவல்: குடும்பத்தினர்.
021 222 7212

(53383)(7.6.3)

# புலிகள் மீதான தடை நீக்கம் ஓர் அரசியல் சூழ்ச்சி!

## சாடுகின்றார் அமைச்சர் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஒக்.20

புலித்தடையை நீக்குமாறு வலியுறுத்தும் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னணியில்அரசியல்சூழ்ச்சிஇருக்கின்றதுஎன குற்றஞ்சாட்டியுள்ள அரசபங்காளிக்கட்சியானதேசிய சுதந்திர முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாட்டில்இன் னமும் பிரிவினைவாதத்தை வளர்த்து வருவதாகவும் சாடியுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள அக்கட்சி யின் தலைமையகத்தில்நேற்று முற்பகல்நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அக்கட்சியின் தலைவர் மற்றும் வீடமைப்பு பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸவினால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வெள்ளிக்கிழமையன்று நாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து எமது கட்சியின் சார்பாகஅரசிடம்முன்வைக்கப்பட்ட 12 அம்சக் கோரிக்கை குறித்து பேச்சு நடத்தினோம். இந்தக் கோரிக்கை தொடர்பில் அரச மட்டத்தில் பல்வேறு பேச்சுகள் இடம்பெற்றிருந்த போதிலும் ஜனாதிபதியுடனான இந்தப் பேச்சையே விசேடமானதாக நாம் கருதுகின்றோம்.

இதன்போது ஜனாதிபதியும் எம்மிடம் இந்தக் கோரிக்கை தொடர்பில் சில உறுதி மொழிகளை வழங்கினார்." என்றார்.

அத்தோடு, "2005 ஆம் ஆண்டில்அப்போதைய சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் அரசை ஸ்தாபிக்க பங்காளிகளின் சக்தியே முக்கியமானதாக இருந்தது.

அதேபோல், 2010 இல் நடைபெற்ற தேர்தலின் போதும் பங்காளிக் கட்சிகளின் சக்தியே அரசிற்கு அத்திபாரமிட்டது.

ஆனால், இன்று எதிர்க்கட்சி கள் அரசின் ஒருசில குறைகளையும், தவறுகளையும்சுட்டிக்காட்டி ஒருசாரரை திசை திருப்ப முயற்சிக்கின்றன.

இது நாட்டிற்கே பெரும் ஆபத்தாகும்.

ஆகையால்,தேசியசுதந்திரமுன்னணி ஒருபோதும் இதற்கு அடிபணியப்போவதில்லை எனத் தெரிவித்துக்கொள்கிறோம். 2005 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது எவ்வாறு மஹிந்த ராஜபக்ஷ வுக்கு ஆதரவு வழங்கி செயற்பட்டோமோ அதே போல அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் நாம்செயற்படுவோம். "என்றும் விமல் மேலும் தெரிவித்தார்.

மேலும், ஐரோப்பிய வலயத்தில்விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தடையை நீக்கிய ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றின் தீர்ப்பு குறித்து விமல் வீரவன்ஸ விமர்சிக்கையில்,

"ஊடகங்களில் வெளியான செய்திகளை அடிப்படையாக வைத்து 1992 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில் சர்வதேச நாடுகளிலும் விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், தற்போது பலமிக்க ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றானது ஐரோப்பிய வலயத்தில் புலித்தடையை ரத்துச் செய்து உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தால் இலங்கைக்குள் நடைபெற்ற அனைத்து அநியாயங்களையும் அறிந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் இந்தத்தீர்ப்பின் பின்னணியில் ஏதோ அரசியல் சூழ்ச்சி காணப்படுகின்றது.

அதேவேளை, இந்த தீர்ப்பிற்கும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் ஒரு தொடர்பிருப்பதாகவும் சந்தேகம் எழுந்துள்ளது.

ஏனெனில், இவரே அண்மைய காலமாக ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அவர் அவ்வாறு செய்தால் பொலிஸ்- காணி அதிகாரங்களு டன் வடக்கும், கிழக்கும் இணைந்துவிடும்.

அத்தோடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான சிவாஜி லிங்கமும் வடக்கிலிருந்து இராணுவம் அகற்றப்பட வேண்டும் என்றும், அங்கிருக்கும் புத்தர் சிலைகள் எல்லாம் தெற்கிற்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதுபோன்றவற்றையெல்லாம் பார்க்கும் போது ஐரோப்பிய நீதிமன்றின் தீர்ப்பில் எமக்கு சந்தேகம்எழுந்துள்ளது. ஆகவே, இதன்மூலம் எந்த சமிக்ஞை நாட்டிற்கு காட்டப்படுகின்றது என்பதை ஐரோப்பிய ஒன்றியம் தெளிவு படுத்தவேண்டும்.

அத்துடன், மலேசியாவில்நடைபெறவுள்ள புலிகள் இயக்கத்தின் மாநாடு ஒன்றிற்கும் ரணிலுக்குஅழைப்புவிடுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆகவே, மக்கள் இது குறித்து அவதானமாக இருக்கவேண்டும். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக தெரிவித்துள்ள ரணிலின் கூற்றுக்கு ஐக்கிய தேசியக் கட்சி விளக்கமளிக்க வேண்டும்-எனக் கூறினார்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்னமும் நாட்டில் பிரிவினைவாதத்திற்கு வித்திட்டு வருகின்றனர். சுமந்திரன் போன்றோர் ஜனாதிபதி மஹிந்தவிடம் தாம் தமிழீழக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என சத்தியக் கடதாசி மூலம் தெரிவித்திருந்தாலும் எம்மை ஏமாற்ற முடியாது.

அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், 'தமிழீழம்' என்ற வசனம் மட்டும் மாற்றப்பட்டுள்ளதே தவிர, கொள்கைகள் அனைத்தும் அப்படியேதான் காணப்படுகின்றன. " என்று தெரிவித்துள்ளார்.

(ற-சி)

## சிறுவர் தின நிகழ்வு

அளவெட்டி, ஒக்.20

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள பாதை புற்றுநோய் வைத்தியசாலையில் மாநாட்டு மண்டபத்தில் சிறுவர் தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு புற்றுநோய்ச்சிகிச்சைப் பிரிவும் ஏனைய சிகிச்சைப் பிரிவுகளும் இணைந்த வைத்தியசாலைச் சமூகத்தினால் கொண்டாடப்படவுள்ளது. இந்த நிகழ்வு வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் திவாகரன் தலைமை யில் நடைபெறவுள் ளது.

(ற-36)

## 'சிலுமின' பத்திரிகையிடம் ரணில் ரூ.50 மில். இழப்பீடு கோருகிறார்

### புலிகளின் தலைவர்களை சந்தித்தார் என்று செய்தி வெளியிட்டமைக்காக

கொழும்பு, ஒக்.20

அரசின் வார செய்தி இதழான சிலுமின பத்திரிகையிடம் 500 மில்லியன் ரூபா இழப்பீடு கோரி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க வழக்கு தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அண்மையில் லண்டன் நகருக்கு பயணம் செய்திருந்த போது அங்கு விடுதலைப் புலிகளின் தலைவர்களை சந்தித்தார் என்று சிலுமின பத்திரிகையில் வெளியான செய்தி மற்றும் வெளியிடப்பட்ட புகைப்படம்தொடர்பாக இந்தவழக்கை தாக்கல் செய்யுமாறு ரணில், ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டத்தரணிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இதற்கமைய இலங்கையில் 500 மில்லியன் இழப்பீடுகோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட உள்ளது. அத்துடன் 2 மில்லியன் பவுண்களை கோரியும், இங்கிலாந்தில் சிலுமின பத்தி ரிகைக்கு தடைவிதிக்கு மாறும் கோரி வேறு ஒரு வழக்கு லண்டனில் தாக்கல் செய்யப்பட உள்ளது.

சிலுமின பத்திரிகையில் புலிகளின் தடை நீக்கத்தின் பின்னணியில் இருக்கும் எதிர்க்கட்சியின் அரசியல்வாதி யார் என்ற தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. எனினும் அந்த புகைப்படத்தில் இருப்பவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் லண்டன் கிளை யில் அதிகாரிகள் என உறு திப்படுத்தப்பட்டுள்ளது. புகைப் படத்தில் இருப்பவர்கள் அனைவரும் சிங்களவர் கள்.ஐக்கிய தேசியக் கட்சியின் லண்டன் கிளையின் நிறை வேற்று குழு உறுப்பினர் இந்திக குமார, கிளையின் செயலாளர் தர்ஷன டேனியல், கட்சியின் இளைஞர் முன்னணியின்லண்டன்கிளை பொருளாளர் ரொஷான் சமந்த யாப்பா, லண்டன் கிளையின் தலைவர் ஹர்ஷன கன்னங்கர ஆகியோர் முறையே இந்த புகைப் படத்தில் காணப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. (ற)

## விபத்தில் தோள் பகுதி பாதிப்பு

மிதிவண்டியில் வாழைக் குலைகளுடன் சென்றவர் வீதியில் சறுக்கி விழுந்ததால் தோள் பகுதி பாதிக்கப்பட்ட நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் ஏழாலை தெற்கு, மயிலணியைச் சேர்ந்த சூசைப்பிள்ளை பிலிப்ராஜ் (வயது-52) என்பவர் தனது தோட்டத்து வாழைக் குலையை விற்பதற்காக சந்தைக்கு கொண்டுசென்ற போது மழை பெய்து கொண்டிருந்ததால் வீதியில் மிதிவண்டி சறுக்கி பாரத்துடன் சாய்ந்து விழுந்ததில் தோள் பகுதி பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ற-36)

## சறுக்கி விழுந்து சிறுவன் கை முறிவு

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை கடைக்குச் செல்வதற்காக வீதியில் ஓடிச் சென்ற சிறுவன் வீதியில் சறுக்கி கீழே விழுந்ததில் இடது கை முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். பேதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். மேற்படி சம்பவம் மாவை கலட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் இதே இடத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் டிலக் ஸன் (வயது-13) என்ற சிறுவனுக்கேகை முறிவு ஏற்பட்டுள்ளது.

(36)

**ஆடு விற்பனைக்கு**

8 மாதம் நிரம்பிய நல்லின ஆட்டுக் கடாக்கள் 03 விற்பனைக்குண்டு. ஒன்றின் விலை ரூ.20,000/=

தொடர்பு : 0777590496

## மோதலில் ஒருவர் காயம்

அளவெட்டி, ஒக். 20

நேற்றுமாலை 6 மணியளவில் கந்தரோடை இக்கிராணைப் பகுதியில் இடம்பெற்ற மோதலில்வலது கண், தலைப் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் அளவெட்டி கலைநகரைச் சேர்ந்த பாலசிங்கம் நிரோஜன் 23 வயது என்பவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார். குறித்த இளைஞர் வேகமாக மோட்டார் சைக்கிள் ஓடியதால் அதனை சகிக்க முடியாத அவ்வூர் இளைஞர்கள் ஒன்று கூடி கம்பிகள் பொல்லுகளால் தாக்கி காயப்படுத்தியதாககாயமடைந்தவர் தெரிவித்தார். (ற-36)

## மரண அறிவித்தல்



### மயில்வாகனம் கனகரட்ணம்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கனகரட்ணம் 19.10.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிரவேலு - பார்வதி தம்பதியரின் மருமகனும், அன்னலக்சுமியின் அன்புக் கணவரும், காந்தரூபனின் (ரூபன் மல்ரி சென்ரர்) அன்புத் தந்தையும், நிர்மலாவின் மாமனும், தனுஷாந் (மாணவன் தரம் - 7, யாழ்.இந்துக்கல்லூரி), தனுஷிகன் (தரம் - 2, யா/இந்து ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பொன்னம்மா, பொன்னுத்துரை, அன்னம்மா, முத்தம்மா, மனோன்மணி மற்றும் தங்கம்மாவின் சகோதரரும், காலஞ்சென்ற சபாரட்ணம், அன்னலக்சுமி, தர்மலிங்கம், பொன்னுசாமி, பாலசிங்கம், சீவரெட்ணம் மற்றும் தங்கராசா, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2014) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**67/ 41, சீனிவாசகம் வீதி,**
**கொட்டடி, யாழ்ப்பாணம்.**

(53386)

**தகவல்: காந்தரூபன் (மகன்)**

## மரண அறிவித்தல்



### அப்புத்துரை இராமநாதன்

(முன்னாள் லங்கா சீமெந்து தொழிற்சாலை-சிறாப்பர்)

சந்தை வளவு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை இராமநா தன் நேற்று முன்தினம் 18.10.2014 சனிக்கிழமை மலேசியாவில் காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய அப்புத்துரை, செல்லம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களாகிய நாகலிங்கம், சஸ்வதியின் அன்பு மருமகனும், வசந்தாதேவியின் அன்புக் கணவரும், சௌமியாவின் அன்புத்தந்தையும் காலஞ் சென்றவர்களான சண்முகம், புவனேஸ்வரியின் அன்புப் பெறாமகனும், வானதி, பவானி, கணாநாதன் (ராசா), நரேந்திரன் (லண்டன்), ஸ்ரீ தரன், ஸ்ரீ ரதி, ஸ்ரீ ரஜனி, ஸ்ரீ குமுதினி, ஸ்ரீ வதனி, சத்திய ஸ்ரீ, ஸ்ரீ பாலதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தம்பிராசா, காலஞ்சென்ற தங்கராசா (கிளாக்கர்) மற்றும் சந்திரி, சந்திரிக்கா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2014) திங்கட்கிழமை மலேசியாவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மலேசியா**
**தெ.பே: 006 067 630 648**

(53387)

**தகவல்: குடும்பத்தினர்**
**ஸ்ரேசன்றோட், சுன்னாகம்**
**தொ.பே: 077 662 6150**

**மொறட்டுவ தளபாட மலிவு விற்பனை**

தீபாவளி, கிறிஸ்மஸ் பெருநாள்களை முன்னிட்டு யாழ் வேம்படிச் சந்தி, சிறிலங்கா இன்ஸ்சூரன்ஸ் காரியாலயத்துக்கு அருகில் தேக்கு, முதிரை மரங்களால் செய்யப்பட்ட சாப்பாட்டு மேசைகள், கதிரைகள் கண்ணாடி மேசை, அலுமாரி, கட்டில்கள், செற்றி செட்டுக்கள் போன்ற இன்னும் பல நுட்பமான தளபாடங்கள் மலிவு விலையிலும் உத்தரவாதத்துடனும் தரமான மரத்திலான தளபாடங்களும் விற்பனைக்குண்டு. ஹொட்டல்கள், வீட்டு சமையலறைகள் என்பவற்றுக்கு தேவையான தளபாடங்கள் அலுமாரிகள் தவணை முறையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு : 0776323881 / 0786982732

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்வி

**புவனேந்திரன் லோஜிகா**

வ/மணியர்குளம் வித்தியானந்தா வித்தியாலய மாணவி செல்வி பு.லோஜிகா 2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகளைப் பெற்று செட்டிகுளம் கோட்டத்தில் முதல் மாணவியாக சித்தி பெற்றுள்ளார். இவரை நெறிப்படுத்திய அதிபர், வகுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள் கூறி மேன்மேலும் பற்பல சித்திகள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

**அப்பா, அம்மா, போரன், போர்த்தி.**

(52170)(3.6/4)

## தொடர்ச்சிகள்

### புலிகள்

டேவிட் டேலி குறிப்பிட்டுள்ளார்.

"ஐரோப்பிய நீதிமன்றம் விடுதலைப் புலிகள் மீதான தடை குறித்து வழங்கியுள்ள தீர்ப்புத் தொடர்பாக மிக உன்னிப்பாக ஆராய்ந்துவருகிறோம். சகலரினது கருத்துக்களையும் செவிமடுத்த பின்னரே பதிலளிப்போம். இந்த தருணத்தில் எதனையும் செய்ய முடியாது.

இது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் சாதாரணமான விடயம். ஐரோப்பிய ஒன்றியம் ஜனநாயக் கோட்பாடுகளின் அடிப்படையில் இயங்குகின்றது. நீதித்துறையும் அதன் செயற்பாடுகளும் சட்டத்தின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும்.

ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாதத்தை எதிர்க்கின்றது. அதுவே அதன் நிகழ்ச்சி நிரலில் முக்கியமாக உள்ளது. இதற்கு எதிரான போராட்டத்தில் நாங்கள் பல நடவடிக்கைகளை எடுக்கிறோம். பயங்கரவாதத்திற்கு எதிராக போராடுவதற்கு அப்பால் அதற்கு எதிராக நாளாந்தம்நடவடிக்கைகளை எடுத்த வண்ணமுள்ளோம்.

ஆனால், இந்த நடவடிக்கைகள் அனைத்தும் சட்டத்திற்குட்பட்டவையே. நீதிமன்றதீர்ப்பை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். அதனை தொடர்ந்து செய்வோம்.

இலங்கை பிரிட்டன் அல்லது வேறு எந்த நாடாக இருந்தாலும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மிக அவதானமாகவே முன்னெடுக்க வேண்டும். என்ன நடவடிக்கைகளை எடுத்தாலும் அது சட்டத்திற்குட்பட்டதாக அமையவேண்டும்.

காணாமற்போனோர் தொடர்பாக ஆராய விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டமை சமீபத்திய நடவடிக்கை, ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை உறுதியான, நம்பகத்தன்மை மிக்க, சுயாதீன உள்நாட்டு பொறிமுறையொன்றை ஏற்படுத்தவேண்டும் என நீண்ட கால மாக தெரிவித்துவருகின்றது. ஜெனீவாவில் அமெரிக்கா முன்வைத்த தீர்மானம் இதன் ஒரு பகுதியே.

அண்மையில் இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் அதனை பிரதிபலிக்கின்றதா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும், நல்ல முடிவுகளை கொண்டு வந்தால் அது நல்ல விடயமாக அமையும்,

மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகள் கடினமானவை, வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன, விசாரணைகள் எவ்வாறு இடம்பெறுகின்றன,என்பது மிக முக்கியமானது" - என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிராக மேலும் தடைகள் விதிக்கப்படக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபடும் காரணத்தினால் இலங்கைக்கு எதிராக தடைகள் விதிக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருந்தது.

இந்த தடைகளை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை தடுக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறினால் மேலும் தடைகள் விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மீன் வகைகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாத வகையில் தடை விதிக்கப்படும் என அண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருந்தது.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு மூன்று மாத காலப்பகுதியில் தீர்வு வழங்கப்படாவிட்டால், ஏற்றுமதித் தடை மட்டுமன்றி வேறு வகையிலான தடைகளும் விதிக்கப்பட உள்ளது.

ஐரோப்பிய நாடுகளின் கப்பல்கள், படகுகள் மூலம் இலங்கையில் மீன்பிடிக்கத் தடை, இலங்கை ஐரோப்பிய நாடுகள் கூட்டாக இணைந்து மீன்பிடிக்கத் தடை, இரு தரப்பு மீன்பிடித்துறை தொடர்பான உடன்படிக்கை ரத்து போன்ற பல்வேறு வழிகளில் தடை விதிக்கப்பட உள்ளது.

கடந்த ஆண்டு இலங்கை 74 மில்லியன் யூரோ பெறுமதியான மீன் வகைகளை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏற்றுமதி செய்துள்ளது. (ற-சி)

### தமிழீழ

விடுதலைப் புலிகள் சார்பு புலம்பெயர் தமிழர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கைவிட வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்றுக்கொண்டால் 24 மணி நேரத்தினுள் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பேன்" - என்று ஜனாதிபதி மஹிந்த குறிப்பிட்டுள்ளார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்தே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"புலம்பெயர் தமிழர்களினதும், தமிழ்தேசிய கூட்டமைப்பினதும் முக்கிய நிபந்தனையாக நிறைவேற்று அதிகார முறை ஒழிப்பு காணப்படுகிறது. தமிழீழக் கோரிக்கையை கைவிட வேண்டும் என்ற, எனது நிபந்தனையை அவர்கள் ஏற்றுக்கொண்டால், அமைச்சரவை ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் என்ற எனது உறுதி மொழியை நிறைவேற்றுவேன்.

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் மீன்பிடித்தடை போன்றவற்றின் பின்னணியில் மறைமுக சக்தியொன்று உள்ளது. எதிர்க்கட்சிகளும், புலம்பெயர் தமிழர் அமைப்புகளும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

இதன் தொடர்ச்சியே இலங்கை தொடர்பான ஐரோப்பிய ஒன்றிய நடவடிக்கைகள். எதிர்க்கட்சித் தலைவர் வெளிநாடு சென்று புலம்பெயர் அமைப்புகளைச் சந்தித்து இரு வாரத்துக்குள் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய நீதிமன்று நீக்கியுள்ளது. ஐரோப்பாவிலிருந்து கொண்டு புலம்பெயர் தமிழர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை இலங்கை மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்" - என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### இந்தியாவைத்

உள்ளனர். எமது சத்தியாக்கிரகப் போராட்டங்கள் மக்கள் இருப்புக்களைப் பாதிக்கவில்லை. மக்களைக் கொல்லவில்லை. அதன் பின்னர் வந்த, இனக்கலவரங்களே மக்களைப் பாதித்திருந்தன. எல்லாம் முடிந்துள்ள சூழலில் நாம் அநாதைகளாக இருக்கின்றோம்."- என்று தனது உரையில் குறிப்பிட்ட அவர், "நாம் மாகாண சபை முறைமை பற்றி பேசிக் காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கக் கூடாது. மாகாகாண சபைக்கு காணி அதிகாரம் இல்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தம் வந்த அடுத்த வருடமே, ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சகோதரர், உயர் நீதிமன்றத்தில் மாகாணங்களுக்கு காணி அதிகாரம் இல்லை என்று தெளிவாகத் தெரிவித்து விட்டார். மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளைக் கூட கொழும்பு அரசு கேள்வியின்றி கையேற்றுக் கொள்ளலாம்."- என்றும் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அதே போன்றுதான் பொலிஸ் அதிகாரமும். முதலமைச்சர் ஒரு பொலிஸ் ஆணையாளரை நியமிப்பார். கொழும்பு அரசு இரண்டு பொலிஸ் ஆணையாளர்களை நியமிக்கும். அங்கேயும் நாம் சிறுபான்மையினர்தான். நாம் மாகாண சபையைப்பற்றி பேசிகாலத்தை வீணடித்துக் கொண்டிருக்காது தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் இணைந்து இதனைச் செய்ய வேண்டும்.

மாகாணத்துக்கு பூரண சுயாட்சியும் மத்தியில் அதிகூடிய அதிகாரப் பகிர்வுமே தேவை. தெட்டத் தெளிவாகச் சொல்வதானால் பூரண சமஷ்டி ஆட்சியே எமது தேவையாகவுள்ளது.

13, 13 பிளஸ் பற்றி பேசிக் கொண்டிருக்க வேண்டாம். 13 ஐயே விட்டு விடுங்கள். இந்தியாவை சந்தோஷப்படுத்துவதற்காக நாம் இதனைப் பேசிக் கொண்டு காலத்தை வீணடிக்கக் கூடாது. நாம் எமது சாத்வீகப் போராட்டத்தில் மக்களைப் பார்வையாளராக இல்லாமல், பங்காளிகளாக மாற்றி எடுத்துச் செல்ல வேண்டும்"- என்று தெரிவித்தார். (ற-5)

### இராணுவத்தினரின்

தாவும் குறிப்பிட்டுள்ளது.

வடபகுதிக்கு வருகை தரும் வெளிநாட்டவர்கள், பாதுகாப்பு அமைச்சின் முன்அனுமதியைப் பெற்றே வர வேண்டும் என்று கடந்த வாரம் முதல் தீடீர் நடவடிக்கையை இராணுவம் நடைமுறைப்படுத்தியிருந்தது. இது தொடர்பில் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ராங்கின் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கடந்த 2011 ஆம் ஆண்டு வடபகுதிக்கான வெளிநாட்டவரின் பயணத் தடை நீக்கப்பட்ட போது அதனை பிரிட்டன் வரவேற்றிருந்தது. போரின் பின்னரான மீள்நல்லிணக்க செயற்பாடாகவே அதை பிரிட்டன் கருதியது. இந்தக் கட்டுப்பாடுகள் மீள கொண்டு வரப்பட்டுள்ளமையானது, பிரிட்டன் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து உறவினர்களைப் பார்க்க வருபவர்களைப் பாதிக்கும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு எதிர்மறையான விளைவுகளை இது ஏற்படுத்தும். வெளிநாடுகளிலிருந்து முதலீடு செய்வதற்காக வடபகுதிக்கு வருபவர்களுக்கு, வடபகுதி மக்கள் தொடர்ந்தும் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றார்கள் என்ற சமிக்ஞையையே இது கொடுக்கும். விரைவில் இது சாதாரண நிலைமைக்கு மீண்டும் கொண்டு வரப்படும் என்று பிரிட்டன் நம்புகின்றது"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

### ஜனாதிபதி

அவர் இவ்வாறு தெரிவித் தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தமிழினத்தின் ஆட்சிக்காகவே, நாம் எமது அஹிம்சைப் போராட்டத்தை எமது 15 ஆவது தேசிய மாநாட்டில் தீர்மானமாக அறிவித்தோம். இது தொடர்பில் பல்வேறு ஊடகங்களும் விமர்சனங்களை முன்வைத்துள்ளன. ஜனவரி மாதம் எமது அஹிம்சைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட் டால், அதே காலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலும் நடத்தப்பட்டால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெற்றி வாய்ப்பு கிடைத்துவிடும் என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

எமது அஹிம்சைப் போராட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போராட்டக் குழுவே முன்னெடுக்கும். அந்தக் குழு, ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டால் போராட்டம் தொடர்பில் மீளாய்வு செய்து கொள்ளும்.

நாம் முஸ்லிம் மக்களையும், மலையக மக்களையும் ஒன்றிணைத்தே எமது போராட்டங்களை முன்னெடுப்போம். அவர்களையும் உள்ளடக்கியதாகவே எங்களது தீர்வும் அமையும். எமது போராட்டத்தின் ஊடாக மீண்டும் ஒரு பேரழிவு ஏற்படாது. போராட்டத்தின் தந்திரோபாயம் மாற்றப்படலாம். ஆனால் இலக்கு மாறாது. ஆயுதப் போராட்டம் ஒரு தளத்தில் தோற்றுப் போனால், முழுப் போராட்டமும் தோற்றதாகாது. அஹிம்சைப் போராட்டம் என்றும் தோற்றதில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது செல்வாக்கு தெற்கில் சரிந்து விட்டது என்பதற்காக மீளவும் புலிக் கதையைத் தொடக்கியிருக்கின்றார் - என்றார்.

இங்கு உரையாற்றிய வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், மாகாண சபையில் அதிகாரம் உண்டென்று, அந்த முறைமை கொண்டு வரப்பட்ட போதும் கூறவில்லை. இப்போதும் கூறவில்லை. ஆனாலும் அதனை ஒரு தளமாகப் பாவித்து நாம் அதிகாரங்களை உருவாக்க வேண்டும்"- என்று தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய இலங்கைத் தமிரசுக் கட்சியின் இளைஞரணிச் செயலாளர் சி.சிவகரன் தெரிவித்தாவது,

"நாமே எமக்கு நடந்தது இனப்படுகொலை என்பதைச் சொல்லத் தயங்குகின்றோம். வடக்கு மாகாணசபையில் உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் இனப்படுகொலை என்ற சொல் அடங்கிய பிரேரணை படுகின்ற பாட்டைப் பாருங்கள்.

நாங்கள் போரின் முழுமையான கோரத்தை அனுபவித்தவர்கள். பாதுகாப்பான பிரதேசம் என்று அரசு அறிவித்து விட்டு அங்கே குண்டு மழை பொழிந்தது. எத்தனையோ பேர் எம் கண்முன்னால் செத்து மடிந்தார்கள். ஆனால் இவற்றையெல்லாம் இனப்படுகொலை என்று சொல்வதற்கு எங்கள் கட்சியைச் சேர்ந்த சட்டம் தெரிந்தவர்களே தயங்குகின்றார்கள் - என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் நிதியில் 3 ஆயிரத்து 900 மில்லியன் ரூபாவை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாகப் பெற்று இணக்க அரசியல் செய்வதாகச் சொல்லும் சிலர் தமது நிதி போல் இங்கு செலவு செய்து கொண்டிருக்கின்றனர்.

எமது பொருளாதாரத்தை மேம்படுத்த இந்த அரசு ஒரு போதும் உதவாது. தற்போது ஏ-9 வீதி இருவழியாக திறக்கப்பட்டுள்ளமை, யாழ்தேவி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை என்பன எமது பொருளாதாரத்தில் நேரடியாக தாக்கம் செலுத்தும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் நிலையில், புனர்வாழ்வு பெற்ற எமது போராளிகளையே எமக்கு எதிராக திசை திருப்பும் நடவடிக்கையில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது"- என்று தெரிவித்தார்.

இதன் பின்னர் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், "பேய்கள் ஆடும் கரகத்தில் சாத்தான்கள் பாட்டு பாடுகின்றன. தாடியோடு இங்கு ஒரு சாத்தானும் அதனோடு சேர்ந்து கிளிநொச்சியில் இன்னொரு குட்டிச்சாத்தானும் பேய்களுக்காக பாட்டுப்பாடுகின்றன.

ஜனாதிபதி இங்கு வந்து தங்கம் கொடுத்ததும் சிலர் முகத்தில் புன்சிரிப்பு தெரிகின்றது. எங்கள் தங்கமான இசைப்பிரியாவை கொலை செய்ததை, எங்கள் போராளிகளை நிர்வாணமாக்கி சுட்டுக் கொன்றதை ஒரு போதும் மறக்கக் கூடாது"- என்று தெரிவித்தார். (ற-5)

### நயினாதீவு

யும் இலகுவாக்குவதற்காகவுமே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சேவை குறிகாட்டுவானில் இருந்து தினமும் மாலை 6.30 மணிக்கு புறப்பட்டு ஊர்காவற்றுறையிலிருந்து மாலை 7.35 மணிக்கும், யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து இரவு 9 மணிக்கும் புறப்பட்டு குருநாகல் பாதை வழியாக கொழும்பு புறக்கோட்டை மத்திய பஸ் நிலையம் செல்லும். அங்கிருந்து வெள்ளவத்தை, தெகிவளை, இரத்மலானை வரை சேவையில் ஈடுபடும். பின்னர் இரத்மலானையிலிருந்து இரவு 8 மணிக்கு புறப்பட்டு யாழ்.மத்திய பஸ் நிலையம் சென்று அங்கிருந்து அதிகாலை 7 மணிக்கு புறப்பட்டு ஊர்காவற்றுறை சென்று குறிகாட்டுவான் துறை வரை சேவையில் ஈடுபடும் என்று யாழ.சாலை முகாமையாளர் தெரிவித்தார். (ற-14,7)

### இலவசத்தை

இரண்டு மென்பான நிறுவனங்கள், தமது உற்பத்திகளை விலைக்கு வாங்குவோருக்கு இலவசமாக பழப்பானங்களை விநியோகிக்குமாறு 50 ரூபா பெறுமதியான பழப்பானங்களை வழங்கியுள்ளனர். அது தொடர்பில் விற்பனை செய்யப்படும் மென்பானப் போத்தல்களது மூடியில் உள்ள லேபிளில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் யாழ்.நகரிலுள்ள இரு கடைக்காரர்கள் அதற்கு முரணாக, இலவசமாக விற்பனை செய்யவிருந்த பழப் பானங்களையும் விற்பனை செய்துள்ளனர். நீதிமன்றில் இருவரும் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதனையடுத்து அவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தது நீதிமன்று. (ற-4)

### மூன்றாவது

நீதியரசர் சரத் என் சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட, ஆஸ்திரேலிய சட்ட வல்லுநரும் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான சூரி ரத்னபாலவை அழைத்திருந்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இந்த சட்ட ரீதியான குழப்பத்துக்கு விளக்கம் அளிக்குமாறு கேட்டிருக்கின்றது. இதன்படி கடந்த இரண்டு நாள்களாக இது தொடர்பில் ஆராயப்பட்டு வந்தது. இந்தக் கலந்தாய்வில் இலங்கையின் முக்கிய சட்டத்துறை, அரசியலமைப்பு நிபுணர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் ஒருவர் ஜனாதிபதி பதவி வகிக்கக் கூடியவாறு கொண்டுவரப்பட்ட) அரசியலமைப்பின் 18ஆம் திருத்தம் கடந்த காலத்துக்கு பின்நோக்கி ஆளும் தன்மை கொண்டது அல்ல என்று பேராசிரியர் சூரி ரத்னபால சுட்டிக்காட்டினார் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்தார்.

இலங்கையின் பொருள்விளக்கச் சட்டத்தின் பிரகாரமும் அரசமைப்புடன் தொடர்புடைய சட்டங்களை பின்நோக்கி, கடந்த காலத்தையும் ஆளும் விதத்தில் கொண்டுவர முடியாது என்றும் பேராசிரியர் விளக்கமளித்தார் என்றும் உபுல் ஜயசூரிய கூறியுள்ளார்.

பேராசிரியர் ஜயம்பதி விக்ரமரத்ன, பேராதனைப் பல்கலைக்கழக சட்டத்துறையின் தலைவி டாக்டர் தீபிகா உடகம, பேராசிரியர் சாவித்திரி குணசேகர, திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை தலைவர் டாக்டர் காமினா குணரத்ன உள்ளிட்ட இலங்கையின் சட்ட நிபுணர்களும் ஆஸ்திரேலிய சட்டநிபுணர் சூரி ரத்நாயக்கவின் சட்ட விளக்கத்தையே இந்த கலந்தாய்வில் ஆமோதித்துள்ளனர்.

அதிகபட்சம் 12 ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாக ஆட்சியில் இருப்பதற்கு மட்டுமே மஹிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பது தான் பிரபல சட்டநிபுணர்களின் கருத்து. இந்தக் கலந்துரையாடலில் மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையும் போட்டியிடமுடியும் என்பதற்கான விளக்கங்களை எந்த வொரு சட்டநிபுணரும் தெளிவாக முன்வைக்கவில்லை என்றும் உபுல் ஜயசூரிய கூறியுள்ளார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் விரைவில் நடத்தப்பட இருக்கின்றதா, அதில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதற்கான சட்டரீதியான வாய்ப்புகள் உருவாகுமா என்பது அரச தரப்பின் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளைப் பொறுத்தே அமையப் போகின்றது என அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ற-சி)

## கிழக்கு மாகாண சுகாதாரப் பரிசோதகர் இன்று தொடக்கம் பணிப்புறக்கணிப்பில்

மட்டக்களப்பு, ஒக்.20
கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இன்று தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட உள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அகில இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தீர்மானத்துக்கு அமைய இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் பணிபுரியும் பொது சுகாதாரப் பரிசோதகர் கந்தசாமி ஜெயசங்கர், எந்த வித காரணமும் குறிப்பிடாது கடந்த 9ஆம் திகதி தொடக்கம் கல்முனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது. (வ)

# தென்னமரவாடி தமிழரின் காணி விவகாரம் மாகாண சபையில் தனிநபர் பிரேரணை

## நாளைய அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் கொண்டு வருகிறார்

தென்னமரவாடி, ஒக். 20
தென்னமரவாடி கிராம மக்களின் காணி விவகாரம் தொடர்பில் கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் த.சி.தண்டாயுதபாணி, மாகாண சபையின் நாளை செவ்வாய்க் கிழமை அமர்வின்போது தனிநபர் பிரேரணை ஒன்றை கொண்டுவரவுள்ளார்.

தென்னமரவாடி கிராம மக்களின் பூர்வீக வயல் நிலங்களை ஆக்கிரமித்துவரும் பெரும்பான்மை இன விவசாயிகளின் அத்துமீறலுக்கும் அந்தக் காணியை பங்கிட்டு வழங்க முயற்சி செய்துவரும் கிழக்கு மாகாண காணி ஆணையாளரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே இந்தப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.

இது தொடர்பில் தண்டாயுதபாணி ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
திருகோணமலை மாவட்டத்தின் தென்னமரவாடி கிராமமானது திருகோணமலை மாவட்டத்தின் வடக்கு எல்லைக்கிராமம். இங்கு வசித்து வந்த 250 குடும்பங்கள் 1984ஆம் ஆண்டில் ஏற்பட்ட இன வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்தனர். இவர்களுடைய வீடுகள் சொத்துக்கள் என்பன அழிக்கப்பட்டன. உயிரிழப்புக்களும் ஏற்பட்டன. தங்களுடைய உயிரை காப்பாற்றிக் கொள்ள மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்காலிகமாக வாழ்ந்திருந்தார்கள். இவர்கள் 2011ஆம் ஆண்டு மீள்குடியேறினார்கள். இவர்கள் இடம் பெயர்ந்திருந்த நீண்ட காலப்பகுதியில் அயல் கிராமங்களைச் சேர்ந்த பெரும்பான்மை இன விவசாயிகள் இவர்களுடைய பூர்வீக வயல் நிலங்களை ஆக்கிரமித்து விவசாயம் செய்திருந்தார்கள். வாழ்வாதரத்துக்கென ஒரே தொழிலாக இருந்த விவசாயத்தை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. இவர்கள் இது பற்றி குச்சவெளி பிரதேச செயலாளர், காணி அதிகாரிகள் மற்றும் பொலிஸார் ஆகியோரிடம் முறையிட்டிருந்தனர்.

இந்தநிலையில் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் ஸ்ரீமேவன் தர்மசேன இரு பகுதி விவசாயிகளையும் சந்தித்துக் கலந்துரையாடி தென்னமரவாடி கொள்ளன் வெளி பெருமாள் பிளவு வயல் கண்டத்தில் உள்ள வயல் காணி 110 ஏக்கரை இரு பகுதி விவசாயிகளும் பங்கிட்டு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் எனும் தீர்ப்பை வழங்கினார். அதனைத் தொடர்ந்து அடுத்த தடவை இடம்பெற்ற நல்ல தண்ணி ஊற்றுப் பிளவு எனும் வயல் கண்டத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலில் அதே தீர்ப்பை அவர் வழங்க அதனை எதிர்த்த விவசாயிகளை தம்முடைய அறிவித்தல் கிடைக்கும் வரை இந்த வயல் நிலத்தில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தடை விதித்துவிட்டார். மாகாண காணி ஆணையாளர். இவ்வாறு தடை உத்தரவு பிறப்பித்துள்ள மாகாண காணி ஆணையாளரின் செயலானது உடைமைகளை இழந்து உயிர்களையும் பரிகொடுத்து மீளக் குடியேறிய மக்களுக்கு மேலும் இழைக்கும் அநீதியாகும். அத்துடன் இவ்வாறான செயல்கள் மீண்டும் அந்தப் பகுதி மக்களை அந்த இடத்தில் இருந்து திட்டமிட்டு துரத்துவதற்கான சதியாகும் என்றுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கிழக்கு மாகாண சபை முதலமைச்சருக்கும் கிழக்கு மாகாண காணி அமைச்சருக்கும் எதிர் கட்சித் தலைவருக்கும் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார். இந்த நிலையில் நாளை 21ஆம் திகதி கூடவுள்ள கிழக்கு மாகாண சபை அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் தனிநபர் பிரேரணை ஒன்றை கொண்டுவரவுள்ளார். (ஒ-10)

## குற்றங்களும் கைதுகளும்

கொழும்பு

### 104போலித் தாள்கள் கண்டெடுப்பு

கொழும்பு—காலி இடையே சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தில் ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்கள் 104ஐ கண்டெடுத்த அந்த பஸ்ஸின் நடத்துநர், அவற்றை காலி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

எஸ் 60,303,244 இலக்கங்களுடைய போலி நாணயத்தாள்கள் 84ம், எஸ் 86,83,100,5 இலக்கங்களுடைய போலி நாணயத் தாள்கள் 20ம் வைத்து சுற்றப்பட்டிருந்த, உரிமையாளர் இல்லாத பொதியையே நடத்துநர் பொலிஸில் ஒப்படைத்துள்ளார். (வ)

கொழும்பு

### வாடகை வாகனங்களை அடைவு வைத்த அறுவர்

வாடகைக்கு வாகனங்களைப் பெற்று அவற்றை அடைவுவைக்கும் சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் 2 பெண்களும் அடங்குகின்றனர்.

வாடகைக்கு வாகனங்களை வழங்குவதாக பத்திரிகைகளில் வெளியாகும் விளம்பரங்களில் உள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அவர்கள் வாகனங்களை வாடகைக்கு பெற்றுக்கொண்டமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர்களால் அடைவு வைக்கப்பட்ட 2 கார்கள், சிறிய லொறி மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சட்டவிரோத நடவடிக்கை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் சிலருக்கு ஏற்கனவே நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தமையும் உறுதி செய்யப்பட்டுள்ளது. சந்தேநபர்கள் கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ)

குருநாகல்

### குருநாகல் அம்மன் ஆலயத்தில் தங்க நகைகள் கொள்ளை

குருநாகல் மாவத்தகம பகுதியிலுள்ள அம்மன் கோயிலில் துப்பாக்கியுடன் சென்ற குழுவினரால் ஆலயத்திலுள்ள பணம் உள்ளிட்ட தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

வெள்ளை நிற கார் ஒன்றில் நேற்று முன்தினம் பி.ப 3.45 மணியளவில் வருகை தந்த சிலரே ஆலயத்தில் கொள்ளையிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

மாவத்தகம பரந்தன் வீதியிலுள்ள அம்மன் கோயிலிலே பெறுமதியான தங்க நகைகளும் பல லட்சம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

எனினும் கொள்ளையிடப்பட்டுள்ள பணம் மற்றும் தங்க நகைகளின் மொத்தப் பெறுமதி இதுவரை கணிப்பிடவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. சம்பவம் தொடர்பில் மாவத்தகம பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (வ)



கேதாரகௌரி விரதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் தொன்மைவாய்ந்த ஸ்ரீ பத்திரகாளி ஆலயத்தில் பாற்குடபவனி நேற்று இடம்பெற்றது. இதில் நூற்றுக்கணக்கான பெண்கள்பாற்குட பவனியில் கலந்து கொண்டனர். சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் விஷேட பூசை நடைபெற்று, பின்னர் அங்கிருந்து புறப்பட்ட பாற்குட பவனி பிரதான வீதி வழியாகச் சென்று மாவடிவேம்பு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்தது. (வ)

# பறிபோகின்றது தமிழர் நிலம்

## தக்க வைத்தால்தான் இனத்தைக் காப்பாற்றலாம்

கொக்கட்டிச்சோலை, ஒக். 20
வடக்கு- கிழக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் நாளுக்கு நாள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. சட்டவிரோதமான முறையில் பெரும்பான்மை இனத்தவர்கள் தமிழர் பகுதியில் குடியேற்றப்படுகின்றார்கள். அத்துமீறிய குடியேற்றங்களால் தமிழர்கள் இனத்தை இழக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். தமிழ் இனம் வாழ வேண்டுமாக இருந்தால் தமிழர் நிலம் வேண்டும். நிலம் பறிபோவதைதடுத்து நிறுத்தினால்தான் தமிழ் இனத்தை நிலை நிறுத்த முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட் டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

வட, கிழக்கு தாயகத்தில் 1766ஆம் ஆண்டுக்கு முன்னர் 26,000 சதுர கிலோமீற்றர் அளவுடைய நிலம் இருந்தது. 1976ஆம் ஆண்டுக்குப் பின்னர் 11,700 சதுர கிலோமீற்றர் நிலம் இருந்தது. தற்போது 2014ஆம் ஆண்டு 11,000 சதுர கிலோமீற்றர் அளவுடைய நிலம் மாத்திரமே உள்ளது. இந்த 11000 சதுர கிலோமீற்றர் அளவுடைய நிலமும் 2020ஆம் ஆண்டு வருகின்றபோது இல்லாமல் போவதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது. இனம் வாழ வேண்டுமாக இருந்தால், வாழ்வதற்கு நிலம் வேண்டும். நிலத்தை தக்கவைக்கின்றபோதே, இனத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டுசெல்ல முடியும். அரசியல் என்பது வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருக்கின்றது. எமது இனத்தைக் காப்பாற்றவேண்டும். அதைத் தக்கவைக்கவேண்டும், அப்போதே சகல விடயங்களிலும் முன்னேற்றம் அடையலாம்.

மட்டக்களப்பு மண்ணில் அமைந்துள்ள கெவுளியாமடு, கரடியனாறு, சின்னவத்தை போன்ற பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் பெரும்பான்மை இனத்தவர்கள் அத்துமீறி, எமது தமிழ் மக்களின் காணிகளில் குடியேற்றப்படுகின்றார்கள். இதனால் எமது நிலங்கள் பறிபோகின்றன.

பாதைகளை அபிவிருத்தி செய்வதால், நாங்கள் பாதைகளை மாற்றமுடியாது. எங்கள் மனங்களில், எங்கள் இனங்களில் அபிவிருத்தி செய்யப்படவில்லை. எங்கள் நிலங்கள் அபிவிருத்தி செய்யப்படாமல் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. எமது கலாசாரத்தை சீரழிப்பதற்காகவே போதைவஸ்து, மதுபானம் கொண்டுவந்து குவிக்கப்படுகின்றன. இவற்றிலிருந்து விடுபடச் செய்வதற்கு எமது கல்விமான்கள், புத்திஜீவிகள், சிந்திக்க வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 50 சதவீதமான தமிழ் மக்கள் கல்வியில் பின்னோக்கியிருக்கின்றார்கள். இவர்களை முன்னோக்கிக்கொண்டு செல்வதற்கு அரசியல்வாதிகள், அதிகாரிகள் உட்பட ஏனையோரும் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதில் கூடிய கவனம்செலுத்த வேண்டும். (ஒ-10)

# புலித்தடை நீக்கத்துக்கு எதிராக கையெழுத்து திரட்டுகிறது அரசு

*23 இல் வெள்ளவத்தையில் ஆரம்பம்*

கொழும்பு, ஒக்.20
புலித் தடையை நீக்குமாறு ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை மக்களிடம் கையெழுத்து வேட்டை நடத்த அரசு தீர்மானித்துள்ளது. இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.45 மணிக்கு வெள்ளவத்தைமிலாஜ் ஹோட்டலில் உத்தி யோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. இதையடுத்து, நாடு முழுவ தும் இந்த கையெழுத்து வேட்டையை முன்னெடுக்கவும்அரசு முடிவு செய்துள்ளது.

தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க தலைமையில் இந்த கையெழுத்து வேட்டை நடைமுறைப்ப டுத்தப்படவுள்ளது. புலிப் பயங்கரவாதிகளால் மூன்று தசாப்த காலமாக நாட்டு மக்கள் பெரும் துன்பங்களை எதிர்கொண்ட னர். அவர்களின் மிலேச்சத் தனத்தால் நாட்டு மக்கள் கண்ணீருடன் வாழ்ந்த நாட்களை நாம் மறக்கவில்லை. கண்ணீர் கலந்த அந்த இருண்ட யுகத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில் முடிவுக்குக் கொண்டு வர முடிந்தது. இந்த நிலையில், அந்த இருண்ட யுகத்தை மீண்டும் உருவாக்க சில வெளிநாட்டு சக்திகள் முயற்சிக்கின்றன. அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் உள்நாட்டிலும் சிலர் செயற்படுகின்றனர். இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று அமைச்சர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

காட்டிக்கொடுப்பவர்கள் இருந்ததால்தான் 1815 ஆம் ஆண்டு நாம் சுதந்திரத்தை இழந்தோம். அதுபோல நாட்டைக் காட்டிக்கொடுக்கும் சூழ்ச்சி தற்போதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தால் புலித் தடையை நீக்க முடிவுசெய்துள்ளமை இதன் ஒரு அங்கமாகும். இந்நிலையைக் கருத்திற்கொண்டு பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை பறிகொடுக்காமல், நாட்டைப் பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட புத்திக் கூர்மையுடன் சிந்தித்து செயற்பட வேண்டும். அத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதுடன், அதற்குச் சரியான பதிலையும் வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதற்காக நாட்டுமக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு இந்த கையெழுத்து வேட்டையில் பங்கேற்று தமது கையொப்பத்தையிட்டு, எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (ற-சி)

## வெளிநாட்டு பெண்ணிடம் பாலியல் சேஷ்டை புரிந்தவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.17
வெளிநாட்டுப் பெண்ணை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்ற இளைஞனுக்கு 6 மாத சிறைத்தண்டனை விதித்துடன் 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு செலுத்துமாறு உத்தர விட்ட யாழ்.நீதிமன்று, நீதி மன்ற அபராதமாக 3 ஆயிர மும் விதித்தது.

லண்டனைச் சேர்ந்த குறித்த பெண் கடந்த மாதம் யாழ். பழம் வீதி ஊடாகச் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த இளைஞன் அந்தப் பெண்ணைத்தள்ளிவிழுத்தி அவருக்கு பாலியல் சேஷ்டை புரிந்துவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார். அது தொடர்பில் குறித்த பெண் யாழ். சிறுவர் பெண்கள் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார். அதனையடுத்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார் குறித்த இளைஞனைக் கைது செய்து நீதி மன்றில் முற்படுத்தியிருந்தனர்.

கடந்த 16 ஆம் திகதி நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வீதியில்சென்றபெண்ணை இடைமறித்தமை மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டு அவருக்கு எதி ராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றில்தன்மீதான குற்றத்தை சந்தேக நபரான இளைஞன் ஒப்புக்கொண்டார்.

அதன்படி முதலாவது குற்றத்துக்காக ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததோடு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. இரண்டாவது குற்றத்துக்காக குற்றவாளிக்கு 6 மாத கால சிறைத் தண்டனை விதித்ததோடு பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு, குற்றவாளி 50 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடாகச் செலுத்த வேண்டும் என்றும் அதனைச் செலுத்தத் தவறின் 3 மாதகால சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தது நீதிமன்று. (ற-4)

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தபாலட்டை போராட்டம்

வலி.வடக்கு, ஒக்.19
தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி முற்போக்கு தமிழ் தேசிய முன்னணியால் நேற்று முன் தினம் சனிக்கிழமை பகல் ஜனாதிபதிக்கு தபால் அட்டை அனுப்பும்போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நேற்று முன் தினம் முதல் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை சம்பந்தமாக சுமார் ஒரு லட்சம் தபால் அட்டைகளை அனுப்பும் போராட்டத்தை முற்போக்கு தமிழ் தேசியமுன்னணி ஆரம்பித்துள்ளது. அதன் முதற்கட்டமாக நூற்றுக்கு மேற்பட்ட தபாலட்டைகள் யாழ்ப்பாணம் பிரதான தபால் கந்தோரில் இருந்து அனுப்பப்பட்டுள்ளன. (ற-86)

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு...
யாழ்ப்பாண வரலாற்றில் நீங்கள் எப்போதும் கண்டிராத நிகழ்வு
உங்கள் நகரில் கணக்கிட முடியாத இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில் தொகையான ஆபரணங்கள்

யாழ்ப்பாண யுவதிகள் தங்க முலாம் பூசப்பட்ட மற்றும் ரேடியம் முலாம் பூசப்பட்ட, ஆஸ்திரேலிய வைர நகைகளைக் கொள்வனவு செய்யலாம்.
உரிய ஏற்றுமதி விலையான ரூ. 1500/= - 3000/= வரையிலான நகைகளுக்கு
ரூபாய் 200/=, 400/= மட்டுமே
மூன்று நாள்கள் மட்டுமே. 20, 21, 22, ஒக்ரோபர் 2014
நேரம் : 10.00am - 08.00pm
ரூ.200/= உம் ரூ. 400/= இக்கும் விற்பனை செய்யும் ரூ.3000/= ஏற்றுமதி பெறுமதி கொண்ட 10 இலட்சம் நகைகளை இன்றே கொள்வனவு செய்யுங்கள்.

இந்த விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.

| | | |
|---|---|---|
| ★ மும்பாய் தங்க முலாமிடப்பட்ட வளையல்கள் | - 200/= | மட்டும் |
| ★ ஹைட்ராபாய் முத்து வளையல் | - 200/= | மட்டும் |
| ★ மேல்நாட்டு மாதிரியிலான தோடுகள் | - 200/= | மட்டும் |
| ★ ஆஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் | - 200/= | மட்டும் |
| ★ ஆஸ்திரேலிய டயமன்ட் டொப்ஸ் | - 200/= | மட்டும் |
| ★ சுஹகன் தங்க முலாமிடப்பட்ட வளையல்கள் | - 200/= | மட்டும் |
| ★ பஞ்சாப் பியூட்டி குயின் மாலை | - 400/= | மட்டும் |
| ★ அமெரிக்க டயமன்ட் நெக்லஸ் | - 400/= | மட்டும் |
| ★ கிரிஸ்டல் நெக்லஸ்செட் | - 400/= | மட்டும் |
| ★ ஹைட்ராபாய் முத்து நெக்லஸ் செட் | - 400/= | மட்டும் |
| ★ இத்தாலிய டயமன்ட் தோடுகள் | - 400/= | மட்டும் |
| ★ ரேடியம் பிளேடிங் டயமன்ட் பிரேஸ்லெட் | - 400/= | மட்டும் |
| ★ ஜய்பூரி குண்டன் நெக்லஸ் செட் | - 400/= | மட்டும் |
| ★ ஆஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் | - 400/= | மட்டும் |
| ★ சிபாரா தங்க முலாமிடப்பட்ட மாலை | - 400/= | மட்டும் |

விசேட சலுகை : விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு ரூ. 500/=, ரூ. 10,000/= வரை விசேட ஆபரணங்கள்.
காட்சிப்படுத்தும் இடம் :
நல்லூர் மயிலூரான் அரங்கம் திருமண மண்டபம்
இல.590/5, பருத்தித்துறை வீதி, (நல்லூர் கந்தசுவாமி கோயில் தெற்கு வீதி,)
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 075 507 5675
அனுமதி இலவசம். வாகனத்தரிப்பிட வசதி உண்டு.
விற்பனைப் பெண் பிரதிநிதிகள் தேவை.

# இடைத்தரகர்களை நம்பி வெளிநாடு செல்லாதீர்கள்

*யாழ்.மாவட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முகாமையாளர் அறிவுரை*

யாழ்ப்பாணம்,ஒக்.20
இடைத்தரகர்களை நம்பி மத்திய கிழக்கு மற்றும் தூர கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புகளுக்காக விண்ணப்பிக்க வேண்டாம். அவர்கள் வெறும் போலியான முகவர்களே - என்று தெரிவித்தார் யாழ்.மாவட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முகாமையாளர் கோடீஸ்வரன்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஓர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"ஒவ்வொரு மாதமும் 200 பேர் எமது அலுவலகத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான பயிற்சியைப் பெறுகின்றார்கள். இவர்களில் 50 பேர் மட்டுமே வேலைவாய்ப்புக்காக யாழ்.மாவட்ட பணிமனையில் விண்ணப்பிக்கின்றனர். ஏனையோர் கொழும்பில் உள்ள எமது அலுவலகங்களில் விண்ணப்பிக்கின்றனர். ஆனாலும் ஒரு சிலர் போலியான இடைத்தரகர்களை நம்பி ஏமாந்து விடுகின்றனர். மிகக்குறைந்தளவு பணத்தில் பெற வேண்டிய வேலைகளுக்காக ஏராளமான பணத்தை இடைத்தரகர்களிடம் கொட்டுகின்றனர். ஏமாந்த பின்னர் முறைப்பாடு செய்யவும் ஆலோசனைகளைக் கேட்கவுமே எம்மிடம் வருகின்றனர். அதனால் எவ்வித பயனும் இல்லை."- என்று தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறும்போது, "வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்பவர்கள் ஆள்மாறாட்டங்களில் ஈடுபடுகின்றார்கள் என்றவாறான முறைப்பாடுகள் இப்போது எமக்கு கிடைப்பதில்லை. ஆனால் இதற்குப் பதிலாக வேலைக்காகக வெளிநாடு சென்ற எம்மக்களிடம் இருந்தே முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

2வருட வேலை வாய்ப்பு என அழைத்துச் சென்று முதல் 7 மாதம் வரை வேலை தருவதில்லை. அல்லது 7 மாதமே வேலை தருகிறார்கள் மீதிக் காலங்களில் வேலை தேடி அலைகின்றோம். அல்லது குறிப்பிட்ட ஒப்பந்தம் செய்யப்பட்ட சம்பளங்களிலும் குறைவாகவே தருகின்றனர். குறிப்பிட்ட மணித்தியாலங்களைவிட அதிகமாகவே வேலை செய்கின்றோம் . இவ்வாறாக எம்மக்கள் முறைப்பட்டுக் கொள்கிறார்கள். எம் பணியகங்கள் மூலம் சென்றவர்களுக்கு நாமே பொறுப்பு ஆகையால் அவற்றை நாம் தீர்த்து வைக்கின்றோம். வெளிநாட்டிற்குச் சென்று உழைக்க விருப்பம் கொள்வது நல்ல விடயம் தான் ஆனால் அதற்கான ஒரு ஊடகமாக இடைத்தரகர்களை தெரிவு செய்வது முற்றிலும் தவறான ஒரு சிந்தனை"- என்று தெரிவித்தார். (ற-ரி)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

அமெரிக்க லொத்தர் விசா - V2 Travels & Tours
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
55000 பேருக்கான வாய்ப்பு - உடனே, விரையுங்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்
கிளிநொச்சி 0771516537 | யாழ்ப்பாணம் 0773867257 | நெல்லியடி 0776699892 | வல்வெட்டித்துறை 0776697960

கமநல திணைக்கள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பரீட்சைக்கானது
திரு தவசேகரின் இப்பரீட்சை வழிகாட்டி நூலை ரூபா 300இற்கு பூபால சிங்கம், அன்னை, ஸ்ரீ லங்கா, துர்க்கா, சிதம்பரப் பிள்ளை, சுஜன், கவிதா, இராமதாஸ், ஜோதி புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.
★ இப்பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் (யாழ்நகர்) நடைபெறுகின்றன.
T.P :0754164564

FURNITURE MEGA SALE
ARPICO Piyestra
தீபாவளி தள்ளுபடி
எங்கும் கிடைக்காத விலைக்கழிவு
7 days open
8A.M → 8 P.M
Steel Cupboard 14500/= 8000/=
Glass dining Table Set 27000/= 17500/=
வந்து பாருங்கள் வித்தியாசத்தை புரிவீர்கள்
தளபாட அமோக மலிவு விற்பனை நிலையம்
204, Brown Road, Jaffna.
பிறவுண் றோட், மிருகவைத்திய சாலை அருகில்
T.P: 077 491 2805, 077 006 4651, 0777 286 069

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.